Registered as a Newspaper

PUMP with Standard Accessories Select

NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 4-00

தரமான உதிரிப்பாகங்களை கொண்டு யாரிக்கப்படும்

நியூரோன் வாட்டர் பம்புகளை வாங்குங்கள்

மலே: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஹூ வைகாசி மீ 21 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 28 (03-06-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 57

# முஸ்லிம்களின் பேரணி மீது கண்ணீர்ப் புகை!

## மருதானையில் நேற்று சம்பவம்

கொழும்பு, ஜூன் 3

மருதானையில், ஆர்ப்பாட்டப் பேரணி நடத்த முயன்ற இரண்டாயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அரசாங்க பஸ்களுக்குத் தீ வைக்கப்பட்டது. தனியார் பஸ்களும் தீக்கிரையாகின.

இதேவேளை நேற்று கொழும்பில் பதற்ற நிலை தோன்றியது. இந்தியத் தூதரகம், மற்றும் இந்திய நிறுவனங்களுக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மருதானைப் பள்ளிவாசலில் நேற்று வெள்ளிக்கிழமை வழக்கம்போல இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் ஜும்மா தொழுகைக்காகக் கூடினர்.

ஜும்மா முடிந்த பின்னர், அவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்த, பள்ளிவாசல் வளவினின்றும் புறப்பட்டு பிரதான வீதிக்கு வந்தார்கள்.

ஒரு சில நிமிட நேரத்தில் அங்கு விரைந்த பொலீஸார், கூட்டத்தினர் மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர். கூட்டத்தினர் ஆர்ப்பாட்டத்தை நடத்தாமல் கலைந்து சென்றனராயினும், அதன் பின்னர் அப்பகுதியில் நின்ற இரண்டு அரச பஸ்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அவற்றிலிருந்து பரவிய தீயினால் இரண்டு தனியார் வாகனங்களும் சேதமடைந்தன.

பொலிசார் கூட்டத்தினர் மீது கண்ணீர்ப் புகைப் பிர

[6ஆம் பக்கம் பார்க்க]

## அமைதிப்படை ஜூலைக்குள் வாபஸாக மாட்டாது

### புதுடில்லியில் பரவலாகக் கருத்து

புதுடில்லி, ஜூன் 3

வருகிற ஜூலைக்குள் அமைதிப்படை முழுவதையும் இந்தியா மீள அழைக்குமானால் அது எமக்கு ஆச்சரியத்தையே தரும் என்று புதுடில்லியில் உள்ள மேற்குநாட்டு ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டனர்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் கோரிக்கை குறித்து இவர்கள் ராய்ட்டர் சர்வதேச செய்தி ஸ்தாபனத்திடம் இதனைத் தெரிவித்தனர்.

'ஜூலைக்குள் இந்தியபடை வாபஸாகாது என்று நான் பந்தயம் கட்டத்தயார். ஏன் டிசம்பர் மாதத்திற்கு முன்னரும் இந்தியப்படை வாபஸாகப் போவது இல்லை'— இப்படி ஒரு மேலை நாட்டு ராஜதந்திரி ராய்ட்டரிடம் சொன்னார். (உ-எ)

## அமைதிப்படை தளபதி கொழும்பில் பேச்சு!

இந்திய அமைதிப்படைத் தளபதி ஜெனரல் ஏ. எஸ். கல்கத் நேற்று முன்தினம் (வியாழன்) கொழும்பில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகலையைச் சந்தித்துப் பேசினார்.

'இச் சந்திப்பில் விசேடம் எதுவும் இல்லை. மாதாமாதம் நடக்கும் சந்திப்புத்தான் இது' — என்று இந்தியத் தூதரக அதிகாரி கேர்னல் சப்ரவால் தெரிவித்தார்.

அமைதிப்படை ஜூலை மாத இறுதிக்குள் திரும்ப வேண்டும் என்ற ஜனாதிபதியின் கோரிக்கை குறித்து கருத்துத் தெரிவிக்க கேர்னல் சப்ரவால் மறுத்து விட்டார்.

இந்தியத் தூதரக அரசியற் பிரிவுச் செயலாளர் டாக்டர் ஜெய்சங்கரும் கருத்து தெரிவிக்க மறுத்து விட்டார்.

சொல்வதற்கு ஒன்றும் இல்லை என்று தூதரக முதலாவது செயலாளர் திருமதி பிரிம்ரோஸ் சர்மா சொன்னார். (உ-எ)

## ஸ்கூட்டர், மோ. சைக்கிள் ஓட மீண்டும் பாஸ் தேவை

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ் குடாநாட்டில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் மீண்டும் மோட்டர் சைக்கிள், ஸ்கூட்டர் ஓடுவதற்கு பாஸ்பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அமைதிப்படை விடுத்த செய்திக்குறிப்பு ஒன்றில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மாவட்ட அரசியல் இணைப்பதிகாரியுடன் நடத்தப்பட்ட ஆலோசனையை அடுத்து எதிர்வரும் 5 ஆம் திகதிமுதல் இந்த உத்தரவை அமுல் நடத்துவது என முடிவு செய்யப்பட்டதாக அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தேவையான தஸ்தாவேஜுக்களை சமர்ப்பித்து யாழ் கச்சேரியில் பாஸ்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ)

1987 அக்டோபரில் உயிரிழந்த

## ஆஸ்பத்திரி ஊழியரின் குடும்பத்திற்கு நஷ்டஈடு

கொழும்பு, ஜூன் 3

1987 அக்டோபர் இராணுவ நடவடிக்கைகளின் போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உயிரிழந்த 63 ஊழியர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த வாரம் தன்னைச் சந்தித்த அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக் குழுவிடம் சுகாதார அமைச்சர் ரேணுகா ஹெரத் இதனைத் தெரிவித்தார்.

நஷ்டஈடு வழங்கும் விஷயம் குறித்து சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜோ. பெர்னாண்டோவுக்கு விடுத்துள்ள உத்தரவில், மூன்று மாதங்களுக்குள் நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்கும்படியும், பொதுநிர்வாகத்துறை அமைச்சுடன் இது சம்பந்தமாகப் பேச்சுக்கள் நடத்தும்படியும் சுகாதார அமைச்சர் கூறியிருக்கிறார். (உ-எ)

## இலங்கையில் 14 ஆவது எய்ட்ஸ்நோயாளி!

கொழும்பு, ஜூன் 3

இலங்கையின் 14 ஆவது எய்ட்ஸ் நோயாளி இரத்தினபுரி மாவட்டத்தில் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டார்.

இவர் ஒரு வர்த்தகர் என்று சுகாதாரம் மற்றும் மகளிர் நலத்துறை அமைச்சர் திருமதி ரேணுகா ஹெரத் தெரிவித்தார்.

14 எய்ட்ஸ் நோயாளிகளில் 5 பேர் வெளிநாட்டவர் கப்பல் மாலுமியான ஓர் எய்ட்ஸ் நோயாளி அதிகாரிகளிடமிருந்து தப்பி விட்டார்.

இரண்டு எய்ட்ஸ் நோயாளர் இறந்து விட்டனர்.

இத் தகவல்களையும் அமைச்சரே வெளியிட்டார். [உ-எ]

### சுபநேரம்

03 — 06 — 1989
வைகாசி — 21
சனிக்கிழமை

சுபநேரம்:
02.52 முதல் 04.22 வரை
ராகுகாலம்:
08.52 முதல் 10.22 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
அமாவாசை விரதம்

## ஏழாலையில் வியாழன் இரவு 2பெண்கள் சுட்டுக்கொலை

### மற்றொரு பெண்மணிக்கு காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

கடந்த வியாழக்கிழமை இரவு ஏழாலை வடக்கில் மூன்று பெண்கள் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டனர்.

எஸ். செல்வமலர் (வயது35) என்பவர் தலையில் காயத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் மரணமான சுப்பிரமணியம் சிவஞானமலர் (வயது 45), உருத்திரசிங்கம் செல்வராணி (வயது 37) ஆகியோரின் சடலங்கள் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## பருத்தித்துறையில் தொடர்ந்து பதற்றம்

வல்வெட்டித்துறை, ஜூன் 3

பருத்தித்துறையில் நேற்றும் தொடர்ந்து பதற்றம் நிலவியது.

அனேக வர்த்தகநிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. பாடசாலைகளில் மாணவர் வரவும் குறைந்திருந்தது. பஸ் சேவைகளும் மந்தமாகவே நடைபெற்றன. (உ-160)

## நீதிமன்றில் வைத்து சந்தேகநபர் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஜூன் 3

மாளிகாகந்தை நீதிமன்றத்தினுள் புகுந்த நான்கு பேர் கொண்ட இனந்தெரியாத குழு ஒன்று சந்தேகநபர் ஒருவரை சுட்டுக்கொன்றனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (வியாழன்) காலை இடம்பெற்றது.

ஆயுதங்களுடன் சென்ற இக்கோஷ்டி நீதிமன்ற விசாரணை முடிந்து காவலர்கள் சந்தேக நபரை அழைத்து வந்த போது, சந்தேக நபர் மீது சுட்டனர்.

அதன் பின்னர் அந்தக் கோஷ்டி நீதிமன்றத்தில் காவலில் இருந்த ஊர்காவல் படை வீரர் ஒருவர் வைத்து இருந்த துப்பாக்கியைப் பறித்து கீழே போட்டு உடைத்து விட்டு தப்பிச் சென்றது. (உ-எ)

## வேலைக்கு வராத ஊழியர் மீது நடவடிக்கை!

### மாவட்ட இணைப்பாளர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன்,3

ஐந்து நாட்களும் வேலைக்கு வராத அரச ஊழியர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்என யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ஆ. முருகநேசன் அறிவித்திருக்கிறார்.

இது குறித்து அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரச செயலகங்களிலும் வங்கிகளிலும் கடமைபுரியும்ஊழியர்களும் அரச உயர்அதிகாரிகளும் கடமைக்குச் செல்லாமலும் மட்டுப்படுத்தப்பட்ட வேலைகளை மேற்கொள்வதினாலும், குறிப்பிட்ட திணைக்களங்களில் மட்டும் வேலைகள் நடைபெறுவதாலும் பொதுமக்கள்

[6ஆம் பக்கம் பார்க்க)

## இக்காலகட்டத்தில் அமைதிப்படை திரும்புவதை அனுமதிக்க முடியாது

### மூன்று தமிழ் அமைப்புக்கள் கூட்டாக அறிக்கை

சென்னை, ஜூன் 3

இலங்கையில் இருந்து அமைதிப்படை வெளியேறுவதற்கு காலக்கெடுவைஅறிவித்த ஜனாதிபதி பிரேமதாசாவின் கூற்று ஒருதலைப்பட்சமானது; சர்வதேச சட்டதிட்டங்களுக்கு முரணானது.

இந்தக் காலகட்டத்தில் அமைதிப்படை வெளியேறுவதை அனுமதிக்கமுடியாது.

வடக்கு-கிழக்கு மாகாண சபை அரசில் அங்கம் வகிக்கும் மூன்று தமிழர் அமைப்புக்களும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இலங்கை அதிபரின் இச் செயல் நாட்டைப் பிளவுபடுத்த ஒரு தூண்டுகோலாக அமையும் என்று இந்த அறிக்கையில்எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

ஈ. பி. ஆர். எல். எப்., ரெலோ, ஈ. என், டி. எல்.

[6ஆம் பக்கம் பார்க்க]

## இந்தியா இலங்கையிடம் விளக்கம் கோரும்

அமைதிப்படையைத் திருப்பி அழைக்கவேண்டும் என்பது குறித்து இலங்கை ஜனாதிபதி வெளியிட்டுள்ள கருத்தை தெளிவுபடுத்தும்படி இந்தியா கோரவிருக்கிறது.

இதுபற்றி இந்திய அரசு இலங்க அரசிடம் உத்தியோகபூர்வமாக விளக்கம் கோரவிருப்பதாக பி. பி ஸி. நேற்றிரவு அறிவித்தது. (உ)

சுட்டுக்கொல்லப்பட்ட பொலீஸ் அதிகாரி

## அரசியல்வாதிகள் பற்றி விசாரணை நடத்தியவராம்

நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட விசேட புலனாய்வுப் பிரிவுத் தலைவரான சிரேஷ்ட பொலீஸ் அதிபர் பெனட் பெரேரா, கடைசியாக அரசியல்வாதிகள் மற்றும் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் சிலருக்கு எதிரான முறைப்பாடுகள் பற்றி விசாரணைகளை நடத்தி வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரைச் சுட்டவர்கள், சம்பவம் நடந்த பகுதியிலேயே தலைமறைவாக இருக்கக்கூடும் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-எ)

## இந்திய நிறுவனங்களுக்கு பாதுகாப்பு அளிக்க உறுதி

கொழும்பு, ஜூன் 3

இந்தியப் பிரசைகளுக்கும் அவர்களது வர்த்தக நிறுவனங்கள் மற்றும் உடமைகளுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும் என்று வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில், இந்தியப்பொருட்களைப் பகிஷ்கரிக்கும்படி கோரும் சுவரொட்டிகள் கொழும்பு நகரில் காணப்படுவது பற்றி அமைச்சரிடம் கேட்கப்பட்டது.

அப்போதே அமைச்சர் இத் தகவலை வெளியிட்டார். தேவையான பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொலீஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் அமைச்சர் சொன்னார். (உ-எ)

## நிலைமையைப் பொறுத்தே அமைதிப்படை விலகல்

### புதுடில்லியில் அதிகாரி தகவல்

புதுடில்லி, ஜூன் 3

இலங்கையில் காணப்படும் நிலைமை மற்றும் வேறு பல அளவீடுகளைப் பொறுத்துத்தான் இலங்கையில் இருந்து அமைதிப்படை விலக்கிக் கொள்ளப்படும்.

புதுடில்லியில் நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு கூறினார்.

வெறுமனே நாட்காட்டியைப் பார்த்து அமைதிப்படை விலகுவதற்கு நாள் குறிக்க இயலாது என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

அடுத்த மாதம் 29 ஆம் திகதிக்குள் இலங்கையில் இருந்து அமைதிப்படை விலக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா கூறியதாக வந்த தகவல்கள் பற்றி செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு முன்கண்டவாறு அந்த அதிகாரி பதிலளித்தார். (உ-எ)

## ஒப்பந்தம் குறித்து நாடாளுமன்றில் கேள்வி

கொழும்பு, ஜூன் 3

இலங்கை - இந்திய ஒப்பந்தம் பற்றிய சுதந்திரக்கட்சி எம்.பி ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே வருகிற 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்ப முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

கேள்விகள் வருமாறு:

★ ஒப்பந்தப்படி வடக்கு கிழக்கு மாகாண இணைப்பு தொடர்பாக இந்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் என்ன?

★ இவ்விடயத்தில் இன்று வரை இந்திய அரசினால் நிறைவேற்றப்பட்டுள்ள பொறுப்புக்கள் யாது?[உ-எ]

## நீதிமன்றக் கட்டடத்தினுள ஹெரோயினுடன் பெண்கள்!

கொழும்பு, ஜூன் 3

நீதிமன்றக் கட்டடத்தில் உள்ள கழிப்பறைக்குள் ஹெரோயின் புகைத்துக் கொண்டிருந்த 2 இளம்பெண்களை பெண் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கையும்மெய்யுமாகப் பிடித்தார்.

இரு பெண்களும் கோட்டை நீதிவான் திருமதி மகேஷி குணதிலக முன் கடந்தபுதன் கிழமை ஆஜர் செய்யப்பட்டனர்.

குற்றத்தை ஒப்புக்கொண்ட இரண்டு பெண்களுக்கும் தண்டனை விதிப்பதை நீதவான் வருகிற 14 ஆம் திகதிவரை ஒத்திவைத்தார். [உ-எ]

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வான்கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V.சபாரெட்ணம் 9/6, புதுவீதி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (11134)

முட்டை பொரிக்கும் இன்கியுபேட்டர்புதியது இலெக்ரிக் மண்ணெண்ணெய் வெப்பம். 176 முட்டைகள் தன்னியங்கித் திருப்பும் கறன்ரியுடன் ரூபா 9,500 அதேமாதிரி 88 முட்டைகள் பொரிக்கும் பிரிட்டிஷ் மேக் சற்றுப் பாவித்தது ரூபா 5,000 தொடர்பு: கோகுலம் சிவராஜா அவெனியூ, 118, பலாலி ரோட், திருநெல்வேலி. (11124)

பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத் தளபாடங்கள் கசெட் றேடியோ, T.V Fan, Cot Bicycle மற்றும் பல விற்பனைக்குண்டு. Supeka 343, பருத்தித்துறைரோட், அரசடி நல்லூர். (11094

எம்மிடம் [illegible] விற்பனைக்கு உண்டு தொடர்பு [illegible] X B [illegible] 158/1 [illegible] வீதி, யாழ்ப்பாணம் (719)

[illegible] இலக்கைச் சேர்ந்த 1½ [illegible] பெண் நட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: [illegible] No 2 ராஜ வீதி, [illegible] நாதர் கோவிலடி), நல்லூர். (722)

எமது சொந்தப் பாவிப்பில் உள்ள குழாய்க் கிணறு அமைக்கும் இயந்திரங்களில் ஒன்று விற்பனைக்கு உண்டு நிர்வாகி ரெக் என்ஜினியர்ஸ் கோப்பாய். (720)

P B. D. இன்டஸ்ரீசாரின் தயாரிப்புக்களான ரெயிங்புக் வெளிக்களப் புத்தகம், மொனிற்றேஸ்புக், நோட்புக், லெஜர்புக், சயன்ஸ் றெக்கோட்புக் அனைத்தும் நல்ல முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றன. கல்லூரிகள், ஆசிரியர்கள், வியாபாரிகள் அனைவருக்கும் மொத்த விலையில் கிடைக்கும். தொடர்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை [புத்தக களஞ்சியம்] யாழ்ப்பாணம். (சி-2510)

### கறவைப் பசுக்கள் விற்பனைக்கு

10 போத்தல் தொடக்கம் 16போத்தல் கறக்கும் பசுக்கள் பட்டியாகவோ ஒவ்வொன்றாகவோ வாங்கலாம். முறைப்படி தடுப்பூசிகள் ஏற்றப்பட்டவை. 5 லோட் மாட்டெருவும் உண்டு. M.சோதிராசா, C/o யூனியன் பேக்கறி, நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி. (718)

### SAI RAM

T.V Colour B & W 20'' பாவித்த குசினி அலுமாரிகள் கட்டில் சாப்பாட்டு மேசை கதிரைகள் Antana Pipe cycle Iron. SaiRam 3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (11122)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(DEKALB பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், பிறவுண் சேவற் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள் (COB'B) புறயிலர் குஞ்சுகள் (06-06-89) செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல:09, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்) (590)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சவற்குஞ்சுகள். Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புறெயிலர் குஞ்சுகள் கறுப்பு சேவற் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவுசெய்து ஒவ்வொருவாரமும் பெற்றுக் கொள்ளலாம் சற்குணராஜா & பிரதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். [549]

### தேவை

குழாய்க்கிணறு அமைப்பதற்கு நல்ல திடகாத்திரமான 20க்கும் 30க்கும் இடைப்பட்ட வயதுடைய அனுபவமுள்ள ஆண்கள் தேவை. மாதாந்த ஊதியம் வழங்கப்படும். தினமும் மதிய உணவிற்கு ரூபா 20/- மேலதிகமாக வழங்கப்படும் தொடர்பு: நிர்வாகி, ரெக் என்ஜினியர்ஸ், கோப்பாய். (721)

டீசல் இன்யெக்ரர் பம்ப் வேலை பயிலுவோர் தேவை. தராதரம் G.C.E. சாதாரணம். தகுதியுடையோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்: இராசா, டீசல் என்ஜினியர்ஸ்,180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (11126)

வீடியோ சென்ரருக்கு றெக்கோடிங் (Recording) அனுபவமுள்ளவர் தேவை. திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்: இராசா, டீசல் என்ஜினியர்ஸ், 180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (11125)

### மணமகன் தேவை

35 வயது நிரம்பிய பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு அவரது பெற்றோர் 40 வயதுக்கு மேற்படாத நற்குணம் நிறைந்த நல்ல அந்தஸ்திலுள்ள மணமகனைத் தேடுகின்றனர். வாழ்விழந்தவராயினும் பிள்ளைகள் இல்லாதவர் தொடர்பு கொள்ளலாம். சீதனம் சுமாராகக் கொடுக்கப்படும். தொடர்பு: 534, C/o உதயன், யாழ்ப்பாணம். (706)

யாழ். இந்து வேளாள குலத்தைச்சேர்ந்த 30 வயது நிரம்பிய கனடா பிரஜாஉரிமை பெற்ற தற்சமயம் லீவில் நிற்கும் மணப்பெண்ணுக்கு செவ்வாய்க்குற்றமற்ற பட்டதாரி அல்லது வேறு தராதரமுள்ள மணமகன் தேவை. சீதனம் கொடுக்கப்படும் தொடர்பு: 'ABCDE'328, நாவலர்ரோட், யாழ்ப்பாணம். (715)

யாழ். இந்து உயர்குல பெற்றோர் 42 வயதுடைய O/L ஆங்கிலத்துடன் சித்தியடைந்த அழகிய சகோதரிக்கு தக்கவரன் தேடுகின்றார்கள். விவாகரத்துச் செய்யப்பட்டவர், பிள்ளைப் பொறுப்பு ஒன்றுமில்லை. கேட்கும் சக்தி கொஞ்சம் குறைவு U. K கனடா நிரந்தர வாசிகள் விரும்பத்தக்கது. தொடர்பு: 535, C/o உதயன், யாழ்ப்பாணம். (711)

### மணமகள் தேவை

இந்து வேளாள உயர்குல பெற்றோர் 4 இல் செவ்வாய் தோஷமுள்ள 26 வயதுடைய ஜேர்மனியில் 7 வருடமாக நிரந்தர தொழில் புரியும் மணமகனுக்குச் செவ்வாய்க் குற்றமுள்ள ஜேர்மனிக்குச் செல்ல விருப்பமுடைய மணமகளைத் தேடுகிறார்கள். தொடர்பு: 536, C/o உதயன், யாழ்ப்பாணம். [712]

அமெரிக்காவிலே மேற்படிப்பைத் தொடரும் நற்குலத்தைச் சேர்ந்த 29 வயது சிவில் எஞ்ஜினியருக்குத் தகுதியான இந்துமணப்பெண் தேவை. கல்வி, படம், ஜாதகம் சீதனம் பற்றிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல 65, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [11108]

யாழ். இந்து வேளாள குலத்தைச்சேர்ந்த 30 வயது U.K. மணமகனுக்கு அழகான பெண் தேவை. அனுப்பவிருப்பமுள்ளோர் தொடர்பு கொள்ளவும். அனுப்பும் பொறுப்பு மணமகனைச் சேர்ந்தது 'ABCDE' 328, நாவலர்ரோட், ஆனைப்பந்தி. (716)

### வெளிவந்து விட்டது

ஆரம்பவகுப்பு ஆசிரியர்களுக்கும் சிறுவர்களுக்கும் உதவியாக வெளிவந்துவிட்டது. பாட்டுப்பாடி ஆடுவோம் சிறுவர் அபிநயப் பாடல்கள் பூபாலசிங்கம், ஸ்ரீ லங்கா மற்றும் பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (717)

### தபால் மூலம் கல்வி

தபால் மூலம் ஆங்கிலம் பேச, வாசிக்க அல்லது இலக்கணத்துடன் பயில பயிற்சிகள் நடைபெறுகின்றன. சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய தபாலுறை அனுப்பி விபரங்களை அறியலாம். இம்பீரியல் இன்ஸ்ரிரியூட், 25 மாட்டின்லேன், யாழ்ப்பாணம். (713)

### கல்வி

G. C. E மற்றும் லண்டன் பரீட்சைகளுக்கான ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆங்கிலம் ஆகியவற்றுடன் Spoken English (ஆங்கில சம்பாஷணை) வகுப்புக்கள் புதிய பிரிவு5/6/89இல் ஆரம்பமாகின்றன. 173, வேம்படிவீதி, யாழ்ப்பாணம். (714)

### தவறிவிட்டது

யோகராணி யோகருரு ஆகிய எனது அடையாள அட்டை யாழ் புகையிரத நிலையத்தில் 06-05-89 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (724)

தவராணி யோககுரு ஆகிய எனது அடையாளஅட்டை (667001927 - V) 06 - 05 - 89 அன்று யாழ் புகையிரதநிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [723]

## ஓராண்டு இதய அஞ்சலி



**சண்முகராசா திவ்வியநாதன்**
[நாதன் - தவில்]

மலர்வு:- 15-11-1953 உதிர்வு:- 06-06-1988

எம்மை விட்டு நீ பிரிந்து ஓராண்டு போனதையா!
எம்முயிர் எம்மை விட்டுப் போகும் வரை
எம் நெஞ்சிலிருந்து உன் நினைவு போகாது!
எம்முள்ளே நீ என்றும் நடமாடும் தெய்வமைய்யா!
எம் கண்ணில் வடியும் நீர் செந்நீர்த் துளிகளையா!
என்று நீ மீளவந்து எம்துயரைத் தீர்ப்பாயோ?
அன்றுவரை எமக்கு ஆறாத்துயரமையா!!

தங்கள் நினைவால் வாடும்:
பெற்றோர், தங்கைமார், தம்பிமார்,
மற்றும் மச்சான்மார், மருமக்கள்.

இணுவில் கிழக்கு,
மஞ்சத்தடி. (839)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை**
(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம்: 25- 10- 1920 மறைவு: 15- 05- 1988

திதி: 03- 06- 1989

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மகன்மார், மகள்மார்,
மருமகள், பேரமகள்,

உசன்,
மிருசுவில். (சி/2676)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
13-07-1913

மறைவு
15-05-1988

திதி:
03 06-1989



**திரு. முருகேசு சிவலிங்கம்**

அன்புடனும் ஆதரவுடனும் எங்களை
ஆதரித்த தெய்வமே- எங்களை
விட்டுச் சென்று ஓராண்டு ஆனாலும்
ஆறாது எங்கள் துயர்.
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,

ஏழாலை தெற்கு,
சுன்னாகம். (837)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி





**செ. பரமேஸ்வரி**
தோற்றம்: 27 - 03 - 1935 மறைவு: 27 - 05 - 1987

**மு. இராசதுரை**
தோற்றம்: 12 - 01 - 1907 மறைவு: 27 - 05 - 1987

திதி: 03 - 06 - 1989 சனிக்கிழமை

அன்புத் தெய்வங்களே!
எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு எம்மைப் பிரிந்து வருடங்கள் இரண்டு ஆகினாலும் உங்கள் நினைவு எம்மனதை விட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:
கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. ([illegible])

## 4 ஆம் வருட நினைவஞ்சலி



**திரு. தி. சுப்பிரமணியம்**
(தே. வி. அ. அ. ச- திருகோணமலை)

மலர்வு: 1957- 01- 24 உதிர்வு: 1985- 06- 03

கதிரிளைப்பாற இராவுமுண்டு - எங்கள்
கவலையிளைப்பாற உண்டோ இடம்?

கல்லூரி வீதி,
பருத்தித்துறை. (694) — குடும்பத்தினர்.

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



**திருநாவுக்கரசு பிரதீபன்**
[தீபன்]

தாயின் மடியில்: 29-5-1964 ஆண்டவன் அடியில்: 3-6-1986

அன்பின் ஒளிவிளக்கே! அறிவின் பிறப்பிடமே!
ஒளிவீசும் மாணிக்கச் சுடரே!
எம்மையெல்லாம் கலங்க வைத்து எங்கேநீர் சென்றீரோ!
உன்பெற்றோர் உடன்பிறந்தோர் நிலைகுலைந்து கதறியழ
நீர் மீளாத்துயில் கொண்டதேனோ!
காலங்கள் சாகவில்லை
உன் நெஞ்சின் கடமைகளும் சாகவில்லை
பாரினில் உன்புகழ் என்றும் திகழ்கவே.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [11112]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத் திறப்பு விழா சிறப்பிதழ்


இத்திறப்பு விழாவில்
புனிதரின் ஆசியும் அருளும் எமக்கு
அமைதியையும் சமாதானத்தையும் நிலை
நாட்ட வரம் அருள வேண்டுமென
வேண்டுகின்றோம்.

நியூ லலிதா ஜுவலர்ஸ்
74/1 கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

★ JAFFNA ELECTRICALS ★
Electrical Contractors & Dealers
6, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ நியூ லக்கி ஸ்ரோர்ஸ் ★
ஆசீர்வாதப்பர் வீதி,
யாழ்ப்பாணம்.

★ பெமிலி சொப் ★
425, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

★ லக்ஷ்மி ரேடேஸ் ★
261, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

★ லீடன் காமன்ஸ் ★
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

★ றேடியோஸ் பதி ★
58, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

NALLUR VIEDEO FARM CENTRE
19, MURUGESAR LANE,
(முத்திரைச் சந்தை)
Nallur.

★ சாறி சென்ரர் ★
150, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சிற்றி மெடிக்கல்ஸ்
487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மரியநாயகம் ஸ்ரோர்ஸ்
55, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## புனிதருக்குப் புதிதாக ஓர் ஆலயம்

## நாளை நல்லூரில் திறப்பு விழா

திருச்சபையின் ஒப்பற்ற செல்வமாகிய துறவற வாழ்வை மேற்கத்திய நாடுகளிலே தொடக்கி வைத்தவர் புனித ஆசீர்வாதப்பர். இவ்வுயர்ந்த புனிதர் யாழ். மறைமாவட்டத்திலே எங்குமில்லாமல் நல்லூர் மண்ணிலே கோவில் கொண்டு அண்டிவரும் அடியவர்க்கெல்லாம் ஆசீர் பொழிந்து வருகின்றார்.

1877 ஆம் ஆண்டிலே இப்பகுதி மக்களைப் பீடித்த கொடிய நோயும், வாட்டிய பஞ்சமும் யேசுவின் நாம வல்லமையால் நீங்கிட இப்பகுதி மக்கள் பலர் அவரில் ஞான முழுக்குப் பெற்றனர். அதே ஆண்டிலே இப்புதிய கிறிஸ்தவர்களுக்கென சிவியாதெருவில் புனித பிரான்சிஸ்கம்மாள் பெயரால் சிற்றாலயம் ஒன்று அமைக்கப்பட்டது.

காலவட்டத்திலே இப்பகுதி மக்களின் வளர்ச்சியை முன் வைத்து 1902 ஆம் ஆண்டில் இவ்வாலயம் கச்சேரி நல்லூர் வீதியிலே அமைக்கப்பட்டு புனித ஆசீர்வாதப்பரை பாதுகாவலராகக் கொண்டமைந்தது. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாச அடிகளின் நற்செய்தி அறிவுப் பணிக்கு இந்த ஆலயமே அன்று மையமாகவும் திகழ்ந்தது.


இவ்வாலயம் பல்வேறு பங்குகளுடன் இணைக்கப்பட்டு பல நற்குருக்களின் பணியினாலும், விசுவாசம் நிறை பொதுநிலையினரின் பங்களிப்பினாலும் இங்கு திருமறையை காத்து வந்தது.

பல நூறு மக்களைப் பெற்றெடுத்து கல்வேறு மண் வேரூய்ப் போய்க்கொண்டிருந்த இத்தாய்க்கு தற்போதய தேவைக்கேற்ப புது உருவம் கொடுக்க எமது புதிய பங்குத் தந்தை அருட்திரு யோசப் அடிகள் திடமான தீர்மானம் கொண்டார்.

யாழ் ஆயரின் ஆசீரையும், உரோமை நற்செய்தி அறிவிப்பு பேராயத்தின் தாராள மனத்தையும், மக்களின் நல் உள்ளத்தையும் மூலதனமாகக் கொண்டு இப்புனித பணியில் ஈடுபடலானார் 11-07-86 இல் புனிதரின் திருவிழா அன்று யாழ் ஆயர் அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்ட இப்புதிய ஆலயம் இன்று கலை வடிவமென முழுமை பெற்று திகழ்கின்றது.

இவ்வாலயத்தில் திருப்பலி ஆற்றி, உறுதிபூசுதல் திருட்சாதனம் வழங்கி ஆலயத்தை ஆசீர்வதிக்க யாழ் ஆயர் பேரருட் திரு. வ தியோகுப்பிள்ளை ஆண்டகை நாளை (04-06-1989) முதல் முறை வருகை தருகின்றார். காலை 7.00 மணிக்கு இடம் பெறுகின்ற நிகழ்ச்சியிலே பங்கு பற்றி புனிதரின் ஆசிபெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
ஆலயச் சபை



புனித ஆலயத்தின் புறத் தோற்றம்

### குருமணிகள் வழிகாட்டல்

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின், திருமறைப் பணியில் பழைமை சான்ற வரலாற்றில் மலர்ந்த இந்த ஆலயமானது யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.

1930ஆம் ஆண்டு முதல் அமரர் றெகேஷன் ஆசிரியர் அவர்களின் அருமுயற்சியால் ஆலயத்தின் வழிபாடுகள் நெறிமுறைப்படுத்தப்பட்டன.

அன்று தல் அருட்குரவர்கள் இராசநாயகம், அல்பிறெற், சந்தியாப்பிள்ளை, வில்வராயசிங்கம், குலாஸ் இராசகாரியர் பொன்னையர், சூசைப்பிள்ளை, மரியாம்பிள்ளை முதலானோர் ஆலயப் பங்குக் குரவர்களாய்க் கடையாற்றி மக்களை நல்வழிப் படுத்தினர். இவர்களிற் பலர் இறைபதமடைந்துவிட்டனர்.

சிறப்பாக எங்கள் ஆயர் திலகங்களான வந்தனைக்குரிய எல். ஆர். அன்ரனி, தோமஸ் சவுந்தரநாயகம், கிங்ஸ்லி சுவாம்பிள்ளை என்போரும் எமது புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தின் குருமணிகளாய்த் திருப்பணி புரிந்தார்கள்.

ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் குருவாக இருந்தபோது ஆலயம் சீரமைக்கப்பட்டது.

மீண்டும் அருட்திரு ஆர். யோசவ் அடிகளார் சமீபத்தில் இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்துள்ளார்கள்.

"காலத்தால் அழியாத கருவூலமாகத் திகழும் எம் ஆலயத்தின் புனருத்தாரணப் பணிகளுக்குப் பங்குமக்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள், அனுபவமிக்க பெரியார்கள், இளைஞர் திலகங்கள், மாணவர்கள் அனைவரும் எனக்குத் தோளோடு தோள்நின்று என்னோடு ஒத்துழைத்தார்கள். அந்த மனப்பூர்வமான அன்பிலே மலர்ந்து ஆலயத்திருப்பணி அலங்காரமாக அமைந்தது. நான் துணையாளனாக மாத்திரமிருந்தேன். சகல சுமைகளையும் மக்கள் சுமந்தார்கள்" என்று ஆலயப் புனருத்தாரணம் பற்றித் தமது அயராத உழைப்பை எம்மீது வைத்து நன்றி கூறி நிற்கின்றார்கள் அடிகளார்.


அவர்களது அயராத சேவையும் தியாகமும் மக்களெம் மனதில் என்றும் அழியாது.

தகவல்:
— றெகேஷன் குடும்பத்தினர்.

## அழைக்கின்றோம்

நாளை [4-6-89] காலை 7 மணிக்கு நல்லூரில் குடிகொண்ட புனித ஆசீர்வாதப்பரின் புதிய ஆலயத்தில் யாழ் ஆயர் அவர்கள் திருப்பலி ஒப்புக்கொடுப்பார். இந்நிகழ்ச்சியில் அனைவரையும் பங்குபற்றி புனிதரின் ஆசியைப் பெற்று ஏதமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

-பங்குத்தந்தை



புனித ஆலயத்தின் அகத் தோற்றம்

## பங்குத் தந்தை வாழ்த்து!

இத்தாலி நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட புனித ஆசீர்வாதப்பர் (கி. பி. 480-547) அன்று தாம் வாழ்ந்த மனித சமூகத்தைப் புதுப்பித்து புனிதமுடைய அறப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்தவர்.

அவருடைய செய்தி இன்றும் வாழத் துடிக்கும் மனிதனுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது.

மதிப்பிற்குரியவன் மனிதன்; அவன் செய்யும் தொழில் மாண்புக்கது. உள்ளத்தில் உறையும் பரம்பொருளோடு உறவில் வளர்வதே மனித உயர்வு – என்ற தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் செயற்பட்டார்.

மனிதன் தன் [illegible]குள் சென்று அங்கு [illegible]திருக்கும் கட்புலனாகக் கடவுளைக் கண்டடையவும், தனது உள்ளத்தையே கமலமாக்கி அந்த உத்தமருக்குக் கொடுக்கவும் அவர் வழிகாட்டினார்.

இச்செய்தியைப் பின்பற்றி, தங்கள் உள்ளங்களைக் கோவில்களாக்கிய நல்மக்களின் அடையாளமாய் இப்புதிய ஆலயம் உருப்பெற்றுள்ளது.

உத்தமனோர் வாழ்கின்ற உயர்ந்த கோபுரங்களாக மனித உள்ளங்கள் என்று அமைக்கப்படுகின்றனவோ, அன்றுதான் சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் எனும் உயரிய மதிப்பீடுகள் உயிர்பெற்று மனிதனை வாழ்விக்கும்.

இவ்வழியிலே உண்மை வாழ்[illegible] வேண்டி வாழ்த்துகின்றேன்.

அருட்திரு கலாநிதி இரா. யோசவ்
பங்குத் தந்தை


இத்திறப்பு விழாவில்
புனிதரின் ஆசியும் அருளும் எமக்கு
அமைதியையும் சமாதானத்தையும் நிலை
நாட்ட வரம் அருள வேண்டுமென
வேண்டுகின்றோம்.

றேடியோ மனுவேல்
SAMSUNG T.V.
எலக்ரோனிக்
உதிரிப்பாகங்கள்
விற்பனையாளரும், பழுதுபார்ப்பவர்களும்
121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

அருள் முருகன் ஜுவலர்ஸ்
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பிருந்தா ஜுவலர்ஸ்
301, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

✶ மக்கள் எல்லோரும்
✶ சகல சௌபாக்கியங்களையும் பெற்று
✶ இன்புற்று வாழ
✶ இறை ஆசி வேண்டுகின்றேன்.
— ஓர் அன்பர் —

ராணி ஜுவலர்ஸ்
63, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

காவேரி சில்க்ஸ்
பெரியகடை, யாழ்ப்பாணம்.
கிளை: காவேரி சில்க்ஸ் சென்ரர்
181, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

அப்துல் காதர் அன் பிரதர்ஸ்
14, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

முருகன் எலெக்ரிக்கல் ஸ்ரோர்ஸ்
6/8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நியூ டிசன்ஸ்
7, நவீன சந்தை மேல்மாடி,
கிளை: 359, (ஐந்து சந்தி)
மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.

ஹப்பி ரெக்ஸ்
149, 168, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்:
கிளை: 104, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ கொம்பியூட்டர் பயிற்சி ★

**Diploma in Data processing & Computer Programming Course**

BASIC PROGRAMMING

05-06 1989 (9.30 a. m. MON & FRI)
10-06-1989 (10.00 a. m. SAT & SUN)

**1 st Payment Rs. 500/-**

DURATION:- 2 MONTHS

**I B M உட்பட பல நவீன கொம்பியூட்டர்களில் முழுமையான பயிற்சி நெறியாக நடாத்தப்படுகிறது.**

★ மல்லாகம் கிளையிலும் 4.30 p. m. இற்கு ஆரம்பமாகும்.

**I. D. P. COMPUTER CENTRE**
**342, K K.S. Road, Jaffna.**
(சிவன்கோயிலடி)

Branch:
**7 th Mile Post. K.K.S. Road, Mallagam.**
(C/2678)



## International Association of Book-keepers (London)

DECEMBER 1989

### Foundation-Stage

தகைமை — G.G E. (O/L) படித்த எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

**ஆரம்பம்:** சனி, ஞாயிறு பிரிவு 03-06-89
திங்கள், புதன பிரிவு 05-06 89

முழுக்கட்டணம் ரூபா 350/-

### Intermediate Stage

தகைமை — G.C.E. (O/L) கணக்கியலில் சித்தி அல்லது 3 வருட அனுபவம்.

ஆரம்பம் 05-06-1989

முழுக்கட்டணம் ரூபா 400/-

### Final Stage

தகைமை G.C.E. (A/L) கணக்கியலில் சித்தி

ஆரம்பம் 10-06 1989

முழுக்கட்டணம் ரூபா 450/-

**லண்டன் பரீட்சை யாழ்நகரில் நடைபெறும்**

குறிப்பு: கடந்தகால பரீட்சைகளில் எமது மாணவர்கள் 80%. சித்தியடைந்திருக்கிறார்கள்

மேலும் விபரங்களுக்கு;

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Pioneers in Accountancy Studies)
**16, 3rd Cross Street,**
(OLR தேவாலய மேற்குப் பக்கம்)
JAFFNA.

[சி/2780]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அவனியில்:
0 1 - 1920

அவனடியில்:
04 - 05 - 1989

### அமரர் உயர்திரு மு. மாணிக்கம்

(ஓய்வு பெற்ற அதிபர் தோட்டத் தொழிலாளர் திணைக்களம், கொழும்பு)

ஆலமரமாய் நின்று அனைவருக்கும் நிழல் தந்தீர்!
பாசமாய் நின்று பரிவுடனே ஆதரித்தீர்!
நெஞ்சமே குமுறுதையா ஆருயிராய் வளர்க்கும்
-அந்த ஓர் உயிரும்
நாமும் தடுமாறுகின்றோம் இக்கரையில்
ஒன்றுமே புரியவில்லை
எமக்கது விளங்கவில்லை – எனவே இனி
ஓடுவோம் ஒதுங்குவோம் ஓர் ஓரத்தை நோக்கி
அணையாத எங்கள் அகல் விளக்கே
உங்கள் ஆத்மா சாந்தியடைய நிதமும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு"

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

நுணுவிலியடி,
பொலிகண்டி.
(11116)


Our Factory Located in Pandaterupp Requires A Dynamic and Versatile Person as our

## FOUNDRY ENGINEER

Qualification & Experience

NDT/JTO from a recognised Technical Institute.
WITH
Five years experience in FOUNDRY
PREFERABLY IN CAST IRON FOUNDRY.

Those who do not have the Qualifications listed above but have more than 10 years experience in CAST IRON FOUNDRY will be considered.

| | | |
|---|---|---|
| Salary | : | Negotiable, |
| Date of Interview | : | 6th of June, 1989 |
| Time | : | 10.00 a m. |
| Place of Interview | : | SOLIDE. |

Sillalai,
PANDATERUPPU.

[C-2789]


## பிரியாவிடை

யாழ்ப்பாணம் ஜூன் 3

பதினைந்து ஆண்டுகளாக மானிப்பாய் கல்வி அதிகாரியாகப் பணியாற்றி அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு கோட்டக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வுடன் மாற்றலாகியுள்ள திரு ச. தனஞ்செயனுக்கு இன்று சனிக்கிழமை இராமநாதன் கல்லூரியில் ஒரு பிரிவுபசார விழாவை மானிப்பாய்க் கல்வி வட்டார கொத்தணி அதிபர்கள், ஆசிரியர்கள் நடத்துகின்றனர் இவ் விழாவிற்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபரும், சுன்னாகம் கொத்தணி அதிபருமான திரு. பொன் நாகரத்தினம் தலைமை வகிப்பார். (க)

## பாராட்டுக் கூட்டம்

யாழ்ப்பாணம் ஜூன் 3

முன்னை நாள் யாழ் உதவி அரசாங்க அதிபராக இருந்து தற்போது பதவி உயர்வு பெற்று யாழ் மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றிவரும்திரு. சே. மாணிக்கவாசகத்தைக் கௌரவித்து 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப3.00 மணியளவில் கொய்யாத் தோட்டம் சனசமூக நிலையத்தில் பாராட்டு கூட்டம் ஒன்று நடைபெறும். (க-13)


## ALLIANCE FRANCAISE DE JAFFNA

யாழ் பிரென்ஞ்சிய நட்புறவுச் சங்கம்

### ★ கலைப்பயிற்சி ஆரம்பம் ★

யாழ் பிரெஞ்சிய நட்புறவுச் சங்கத்தின் கலை, கலாச்சார பரிவர்த்தனையின் அடிப்படையில்

★ பரத நாட்டியம் ★ வீணை
★ மிருதங்கம் ★ பண்ணிசை
★ கர்நாடக சங்கீதம்
★ நவீன ஓவியப் பயிற்சி வகுப்புக்கள்

முன்னோடி ஆசிரியர் குழுவினால் பயிற்றப்படவுள்ளது

**புதிய வகுப்புக்கள் 10 06-89 சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.**

அதி சிறந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:-

**Alliance Francaise de Jaffna**
(யாழ் பிரென்ஞ்சிய நட்புறவுச் சங்கம்)
130, 1ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-2683]



வெளிவந்துவிட்டது!

## "அர்ச்சுனு" - ஏப்ரல் இதழ்




### ★ சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

வாங்கிவிட்டீர்களா?

● விலை ரூபா 4 00 ● ஆண்டுச் சந்தா ரூபா 55. 00

ஆண்டுச் சந்தாவை காசோலை அல்லது காசுக்கட்டளை மூலம் "நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்" என்று எழுதி அனுப்பினால் அஞ்சல் மூலம் மாதம் தோறும் பெறலாம்.

[சி-2772]



## C. I. M. A. STAGE I, II & III

## NOV, 1989.

**Classes Commencing - 3 rd June 1989.**
**Panel Includes**

Mr. R. N VARENDIRAN
Mr. K. NANTHAKUMAR
Mr K. MAHENDIRAN
Mr. S. THILAHAKUMAR
Mr. K. NARENDIRAN
Mr. D. GNANASEELAN

Also conducting classes for I D P M A A T (London) (Sri Lanka) I A B & C I A

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
**14. St. PETERS LANE,**
**HOSPITAL ROAD,**
**JAFFNA.**

(C/2788)


## 3 ஆம் மாத நினைவஞ்சலி



சின்னத்தம்பி கருணாநிதி
(மரிக்கார்)

தாயின் மடியில்:
26-02-1964

ஆண்டவன் அடியில்
07-02-1989

நீ உனது மக்களை நேசித்தாய்
அதனால் உனது மரணத்தை மறந்தாய்
மரணங்கள் பல வருகின்றன
ஆனால் உனது மரணம் மறக்கக் கூடியதல்ல
மந்துவில் மண் ஈன்றெடுத்த
மானமுள்ள தமிழன் நீ
நீ மண்ணுக்குச் செய்த சேவை சரித்திரம்
உள்ள மட்டும் வாழும்.

உன் தெளிந்த சிந்தனையும், புன்சிரிப்பும் என்றும் எம் மனங்களில் நிலைக்கும்.

03.06 1989 (இன்று) இவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்தில் மக்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

நன்றி

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்,
நேசித்த மக்கள், நண்பர்கள்.

மந்துவில்,
கொடிகாமம்.
(849)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது

## பிறந்ததின வாழ்த்து

03. 06. 1989



### செல்வன் சி. துமிலன்

பருத்தித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவயோகராசன்—பவானி தம்பதிகளின் செல்வப் புதல்வன் துமிலன் தனது இரண்டாவது பிறந்த தினத்தை மேற்கு ஜேர்மனி பேர்கிஸ் கிளாட்பாக் (BERGISH GLADBACH) நகரத்திலுள்ள தங்கள் இல்லத்தில் இன்று மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை மேற்கு ஜேர்மனியிலிருக்கும் அப்பா, அம்மா, ஓமானில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மா, இலங்கையிலிருக்கும் தாத்தா, சித்திமார்கள், மாமன்மார்கள், அப்பம்மா, மாமிமார்கள், மைத்துனர்கள், மைத்துனிகள் இறைவன் அருளால் பல்கலையும் கற்று தேகாரோக்கியத்துடன் நீண்ட காலம் சீரும் சிறப்புடன் வாழ்க வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

(11101)



பிரயாணம்.... பிரயாணம்... பிரயாணம்....

# "M" THREE TRAVEL

வழங்கும்

## ● சவூதி அரேபியா பிரயாணம்

| | | | |
|---|---|---|---|
| (01) | CLERK TYPIST | 3 வெற்றிடங்கள் | 600 SR |
| (02) | INVENTORY CLERK | 3 " | 600 SR |
| (03) | SECURITY GUARD | 4 " | 550 SR |
| (04) | FOREMEN WITH DRIVING LICENCE | 5 வெற்றிடங்கள் | |
| (05) | DRIVER H / DUTY WITH MECHNICIAM | 1 " | 450 SR |
| (06) | DIESEL MECHANIC WITH DRIVING LICENCE | 1 " | 500 SR |
| (07) | PEST CONTROL TECHNICIAN | 1 " | 400 SR |
| (08) | ARABIC SPEAKING ASST. MANAGER | 1 " | 1000 SR (No Food) |
| (09) | SECRETARY CLERK WITH COMPUTER | 1 " | 450 SR |
| (10) | JANITORS | 52 " | 300 SR |

மேற்கூறிய வெற்றிடங்களுக்கு உணவும், இருப்பிட வசதியும் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| (11) | A/C TECHNICIAN | 4 வெற்றிடங்கள் | SR 800 + 100 |
| (12) | ELECTRICIAN | 2 " | SR 500 + 100 |
| (13) | SECURITY GUARD | 4 " | SR 500 + 100 |

PASS PORT (கடவுச் சீட்டு) BOND (பொண்ட்) என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

✱ நம்பிக்கை! ✱ நாணயம்!!

என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

# 'M' THREE TRAVEL

தலைமை அலுவலகம்:
'இந்திர பவனம்'
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்:
இல. 1, 2ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2770)



## உதவித் தாதியர் பயிற்சி நெறி (Diploma in Nurses - Aide)

மேற்படி பயிற்சி நெறி
10 - 06 - 89 இல் ஆரம்பமாகவுள்ளது.
உங்கள் பதிவுகளுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்;
விபரங்களுக்கு:-

அதிபர்
சாயி மெடிக்கல் அக்கடமி,
(School of Nurses - Aide)
இல:- 10, பருத்தித்துறை வீதி, - யாழ்நகர்.

(833)



## தென்இந்திய யாத்திரை

ஆனி உத்தரம் - சிதம்பரம் தேர்!
ஆனி திருமஞ்சன தரிசனத்தை இட்டு
தென் இந்திய ஸ்தல யாத்திரை
புறப்படும் திகதி: 01 07-1989
முன் கூட்டியே பதிவு செய்யுங்கள்

தலைமைப் பணிமனை :

## துர்க்காதேவி ரூர்ஸ்

இல. 6, நவீனசந்தை மேல்மாடி
(மக்கள் வங்கிக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.

தரிசிக்கும் தலங்கள்

கன்னியாகுமரி, இராமேஸ்வரம், திருச்சி, வேதாரணியம், திருநள்ளாறு. வேளாங்கண்ணி, தஞ்சாவூர், திருக்கழுக்குன்றம், மருதமலை, திருவாரூர், திருப்பதி, புட்டப்பர்த்தி, திருக்காளாத்தி, சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சென்னை, ஆறுபடை வீடுகள் ...... இன்னும் பல.

குறிப்பு :

● இந்தியாவில் உயர்கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு சகல வசதிகளுடன் அனுமதி பெற்றுத் தரப்படும்.

விபரங்களுடன் விரைவில் தொடர்பு கொள்ளவும்.
பாஸ்போட் வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.
(C/2782)



# ஆங்கிலம்
## பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப் பயிற்சி. தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

Bright Training Centre இல்
படித்த மாணவர்களின் கருத்து

'உங்கள் நிறுவனத்தின் மூலம் பெருமளவு நல்ல பலா பலன்களைப் பெற்றுள்ளேன். ஓர் ஆசிரியர் பக்கத்தில் இருந்து படித்துக் கொடுப்பதிலும் பார்க்க தபால் மூலம் தெளிவாகப் படித்துக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

செல்வன் ஜி. சத்தியசிவன்,
79/15, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி.

'Well Began is half Done' என்பார்கள். அதேபோல் உங்களது தபால்மூலம் ஆங்கில கல்விச் சேவையும் ஆரம்பமே சிறந்ததாக உள்ளது.

செல்வி மும்தாஸ் முகமட்
பராக்கதெனியா, வாதுவ.

I thank you very much for your useful and nice Training.

செல்வி கலாநிதி பொன்னுத்துரை,
நொச்சிமோட்டை G. M. T. S. ஓமந்தை.

'உங்களிடம் மூன்றுமாதத்தில் ஆங்கிலம் திறம்படக் கற்றுக்கொண்டேன். 75% விளக்கமாகக் கற்றுக்கொண்டேன். உங்கள் நிறுவன தபால்மூலம் கல்விச்சேவை வளர்க. அடுத்த உங்களது கல்விச் சேவையில் தொடர்புகொள்வோம்.

செல்வி சிவகௌரி வேலுப்பிள்ளை,
நுணசை றோட், மாதகல்.

'தங்கள் நிறுவன ஆங்கிலப் பயிற்சிகள் படிப்பதற்கு மிகவும் இலகுவாக இருக்கின்றது'

செல்வி எஸ். சரோஜினி,
99, சென். பெனடிக் மாவத்தை, கொழும்பு-13

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

## BRIGHT TRAINING CENTRE
P. O. Box 162, COLOMBO.

(C/2777)



# விவசாயிகளே!

● களைகள் முளைக்குமுன் அழிக்க வல்ல
● பரந்த செயற்பாடுடைய ஒரே களை நாசினி

# லஸ்சோ

[அலக்குளோர் - Alachlor]

நாற்று நடப்பட்ட
மிளகாய்க்கன்றுகள்
வெங்காயம்
நிலக்கடலை
சோயா அவரை
பாசிப்பயறு
கௌபீ
ஆகிய பயிர்களுக்கு
விவசாயத் திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது

LANKEM
ලංකෙම් லங்கெம்

## லங்கெம் விவசாயிகளின் தோழன்

சில்லறை விலைகள்: 400 மி.லீ- ரூபா 135.00
200 மி.லீ- ரூபா 75.00

வட மாகாண விநியோகஸ்தர்கள்:

(1) V. வடிவேல்
219, 221, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(2) புஸ்பா அன் கோ
128 B, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

(3) வீ. கே. வீ'ஸ் ஸ்டோர்ஸ்
353, கண்டி வீதி,
கிளிநொச்சி.

(4) பிள்ளையார் ஸ்டோர்ஸ்
[illegible],
யோகபுரம்.

[சி-2647]


உ

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
கோவில் சுக்கில ஆண்டு (1989)

## மஹோற்சவம்

மஹோற்சவ காலத்தில் பிரயாணிகளையும் வியாபாரப் பொருட்களையும் ஏற்றி இறக்கி சேவையிலீடுபடும் படகுச் சொந்தக்காரர்களுக்கான சுங்கத் திணைக்கள

## அறிவித்தல்

[1] ஒவ்வொரு படகும் கடற் பிரயாண சேவைக்குத் தகுதிவாய்ந்ததென உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

[2] பிரயாணிகள் நலன் கருதி படகுச்சொந்தக்காரர்கள் முதலுதவி மருத்துவசேவை உபகரணங்களையும், உயிர்க்காப்புச் சாதனங்களையும் படகில் வைத்திருத்தல் வேண்டும்.

[3] பிரயாணிகளின் உயிர், உடைமைகள் பாதுகாப்பு கருதி, படகில் மேலதிகமான பிரயாணிகளை ஏற்றிச் செல்லல் தவிர்க்கப்பட வேண்டும்.

[4] வியாபாரப் பொருள்களை ஏற்றிச் செல்லும் படகில் பிரயாணிகளை ஏற்றுதல் தவிர்க்கப்பட வேண்டும்.

[5] பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் படகில் வியாபாரப் பொருள்களை ஏற்றிச் செலுதல் தவிர்க்கப்படவேண்டும்.

[6] ஒவ்வொரு படகின் போக்குவரத்துக்கான நடைமுறைகளைப் பேணுவதற்கு தண்டேல் பொறுப்பாளராக இருப்பார். அவர் இத்திணைக்களத்தினால் வழங்கப்படும் பிரயாணப் பதிவேட்டில் [LOG SHEET] தனது படகின் ஒவ்வொரு பிரயாண விபரங்களையும் பதிவுசெய்து நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் உள்ள சுங்கப் பரிசோதகரின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

[7] இப்பதிவேட்டினை தத்தமது படகுக்கான தகுதி காண் பத்திரங்களைச் சமர்ப்பித்து கொடியேற்றத்திற்கு முதல் நாளே பெற்றுக் கொள்ளல் விரும்பத்தக்கது.

த. கணநாதலிங்கம்,
சுங்க அத்தியட்சகர்,
யாழ் மாவட்ட சுங்க பணிப்பியக்குநருக்காக.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(C/2784)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் மூலப் பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம்

உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு கொடுப்போம்"

100 மில் வைற் நீல சோப் மேலுறைகளிலுள்ள திருக்குறள்களை வெட்டி அனுப்பி உள்ளூர் கைத்தறியில் தயாரித்த அழகிய கைலேஞ்சி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

'மில்க்வைற்'' யாழ்ப்பாணம்,



# சஞ்சீவி

03 - 06 - 1989 சனிக்கிழமை



''அதிக உணவுப்பயிர் உண்டாக்குவோமாக!

''ஒரே செலவில் தமக்கும், பிறர்க்கும் நயம்வர வாய்ப்பான வழியை நாடுதல் உத்தமமல்லவா''

நாடு நலம் பெற, நாம் நற்சேவை செய்ய எமது உற்பத்திப் பொருட்களை வாங்கி உபயோகியுங்கள்''

25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பிபுதிய வெளியீடானமேற்படி மில்க்வைற் செய்தி இதம் 162 ஐப் பெற்றுக் கொள்ளுங்கள்

''மில்க்வைற்'' யாழ்ப்பாணம்.


## 30 லட்சம் டொலர் ஆஸி. அரசு நிதி உதவி

கொழும்பு, ஜூன் 3

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கு ஆஸ்திரேலிய அரசு 30 லட்சம் டொலர் நிதி உதவி அளிக்கவிருக்கிறது.

அடுத்த நான்கு ஆண்டு காலத்தில் இந்த நிதி உதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான உடன்படிக்கைஒன்று நேற்று கொழும்பில் கைச்சாத்தாகியது.

நிதி உதவியில் 35 சதவீதம் பணமாகவும், எஞ்சிய உதவி பொருள்களாகவும் ஆஸ்திரேலியா வழங்கும்.

குழய்க் கிணறுகளை நிர்மாணிக்கத் தேவையான இயந்திராதிகளையும் ஆஸ்திரேலியா இத் திட்டத்தின் கீழ் வழங்கவிருக்கிறது. (உ-எ)


யாழ்ப்பாணம் பல.நோ.கூ. சங்கம் —வரைவுள்ளது

## முக்கிய அறிவித்தல்

### வாக்காளர் இடாப்பு முடிவுறச் செய்தல்

எமது சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான வாக்காளர் இடாப்பு 1989 ஆனி மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவுறச் செய்யப்படுகின்றது. எனவே, இதுவரை அங்கத்தவராகச் சேராதவர்கள்/ சேர விரும்பின் உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரத்தைப் பூரணப்படுத்தி பங்குப்பணம் ரூபா பத்து (10/-) செலுத்தி அங்கத்தவராகச் சேருமாறு அறியத்தருகின்றோம். உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரத்தைத் தங்கள் கிளைகளில் பெற்றுக்கொள்ளவும். மேலும் விபரங்கள் தேவைப்படின் தங்கள் கிளைகளின் கிளை முகாமையாளர்களுடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளவும். 30. 06. 1989 வரை பங்குப் பணம் ஏற்றுக்கொள்ளப்படும். 30. 06 1989 ஆம் திகதியுடன் முடிவடையும் வாக்காளர் இடாப்பைக் கொண்டே கிளைக்குழுத் தேர்தல் நடாத்தப்படும்.

—செயலாளர்.

யாழ். ப. நோ. கூ. சங்கம்,
259. மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
31. 05. 1989.

[சி/2793]


## யாழ். வந்து திரும்பினர்

யாழ்ப்பாணம், ஜூன் 3

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த இரு உயரதிகாரிகள் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வந்து திரும்பினர்,

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயத்தைச்சேர்ந்த அஸீஸ் அகமட் (பங்களாதேஷ்), விஜேத் சியாபதி (நேபாளம்) ஆகியோர் கோண்டாவிலில் 10 வீடுகள் அமைக்க அடிக்கல் நட்டார்கள்.

அத்துடன் மேற்படி அமைப்பின் செயற்திட்டங்களையும் பார்வையிட்டார்கள். [ஒ-3)

## திருமலையில் மாநாடு

வடக்கு, கிழக்கு கல்வி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய மாநாடு ஒன்று திருகோணமலையில் எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

இம் மாநாட்டில் உயர்கல்வி அதிகாரிகள் பலர் கலந்து கொள்வார்கள். (ஒ-3)

## ரூபா 8 லட்சம் கொள்ளை

இரத்மலானையில்உள்ள மஸ்கன் கம்பெனிக்குள் ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று புகுந்து 8லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## விடுவிப்பு

நேற்று முன்தினம் பருத்தித்துறைப் பகுதியில் கைது செய்யப்பட்டவர்கள் நேற்றுக் காலை 8 மணியளவில் புலோலி இராணுவ முகாமில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டோரில் பலர் மாணவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-160)

## செய்திச் சாரம்

## காரைநகரில் மோதல் சம்பவம்

காரைநகர், ஜூன் 3

காரைநகர் மேற்கு வீதி பத்தர் கேணியடியில் நேற்றுக் காலை 8 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. சுமார் அரைமணிநேரம் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. [எ-73]

## விளான் சந்தியில் இளைஞர் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 3

நேற்று மாலை 3. 30 மணியளவில் பண்டத்தரிப்பு, விளான் சந்தியில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். பெயர், விவரம் தெரியவரவில்லை.

## ஊரடங்கு தளர்வு

வல்வெட்டித்துறை, ஜூன் 3

மண்முனை, செம்பியன்பற்று பகுதியில் அமுல்செய்யப்பட்ட ஊரடங்கு கடந்த வியாழக்கிழமை காலை நீக்கப்பட்டது. மீனவர்கள் மீன்பிடிக்கவும் அனுமதியளிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை அப்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. (உ-160)

## முஸ்லிம்கள்--:

யோகம் செய்தபோது, கூட்டத்தினர் பதிலுக்கு கல்வீச்சு நடத்தினர். அதனைத் தொடர்ந்து பொலீசார் வானத்தை நோக்கிச் சுட நேர்நததாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்மாந்துறை அசம்பாவிதங்களைக் கண்டித்தே முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டப்பேரணி நடத்த முயன்றதாகச் சொல்லப்பட்டது.

இதேவேளை நேற்று மதிய தொழுகையை அடுத்து, கொழும்பில் மற்றும் பல பள்ளிவாசல்களில் இருந்தும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது என்றும்—

ஆனால் படையினர் பள்ளிவாசல்களின்,வாசல்களில் கூடி நின்று அம்முயற்சிகளை முறியடித்துவிட்டனர் என்றும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை இந்தியத் தூதரகம், மற்றும் இந்திய நிறுவனங்களுக்கு நேற்று பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. இதனால் நகரில் நேற்று சற்றுப் பதற்றநிலை தென்பட்டது. [அ-ஒ-1]

## இக்காலகட்ட--'

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எப், ஆகிய மூன்று இயக்கங்களின் தலைவர்களும் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர். அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள இந்தியாவையோ, மற்றும் வடக்கு-கிழக்கு மாகாணசபை அரசையோ கலந்தாலோசிக்காமல் ஒருதலைப்பட்சமாக இலங்கை அரசு, அமைதிப்படையை வெளியேற்றுவதற்கு காலக்கெடுவை அறிவித்திருப்பது கண்டிக்கத்தக்கது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் சகல மக்களுக்கும் ஏற்ற பாதுகாப்பான மாற்றுத் திட்டங்கள் வகுக்கப்படாமலும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு ஏற்ற பொலீஸ் படை நிறுவப்படாமலும் உள்ள இந்த காலகட்டத்தில் அமைதிப் படையினர் வெளியேறுவதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. [உ-எ]

## வவுனியாவில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 3

''எனது இராகங்கள்'' நூல் வெளியீட்டு விழா இன்று (சனிக்கிழமை) மாலை 3 மணிக்கு வவுனியா மகா வித்தியாலய ஜயாத்துரை அரங்கில் இடம்பெறுகிறது.

நூலை திரு. எஸ். ஞானப்பிரகாசம் வெளியிட்டு வைப்பார். முதல் பிரதியை திரு. கா. லோகசிங்கம் பெறுவார். 'எனது இராகங்கள்' நூலின் ஆசிரியர் வவுனியா திலீபன் ஆவார். [ஒ]

## முல்லைத்தீவிலும்

முல்லைத்தீவு, ஜூன் 3

நேற்று அதிகாலை 4 மணியளவில் முல்லைத்தீவு செல்வபுரத்தில் திடீரென துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டன. இளைஞர் ஒருவர் சுடப்பட்டு வீதியில் போடப்பட்டுக் கிடந்தார். செய்தி எழுதும்வரை கொலையுண்ட இளைஞர் யார் என்பது தெரியவரவில்லை [ஒ-92]

## புதுக்குடியிருப்பில்

யாழ்ப்பாணம், ஜூன் 3

புதுக்குடியிருப்பில் நேற்றுக் காலை ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் கிருஷ்ணதாசன் வயது 25 (குண்டன்) எனத் தெரிவிக்கப்பட்டது.

## மாவிட்டபுரத்தில் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

மாவிட்டபுரத்தில் நேற்றுக் காலை குண்டு ஒன்று வெடித்தது. இதனால் இப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்தனர்.

கண்டெடுக்கப்பட்ட குண்டு ஒன்றே வெடிக்க வைக்கப்பட்டதாகப் பின்னர் தெரியவந்தது. [ஒ]

## வீடிழப்பு

கொழும்பு, ஜூன் 3

கடும்மழை காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

வெள்ளத்தினால் குறைந்தது 50 ஆயிரம் பேர் வீடிழந்தனர். (உ-எ)

## விரிவுரை நடைபெறுது

அச்சுவேலி, ஜூன் 3

பட்டதாரி ஆசிரியர்களுக்கான யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (பகுதி நேர) பயிற்சிநெறிக்கான விரிவுரை இந்த வார இறுதியில்),இன்றும்(நாளையும்)நடைபெறமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-11]

## வேலைக்கு···

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாளாந்தம் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

சாதாரண பொதுமக்கள் நிவாரணப் பணத்தினையும், ஏனைய பல்வேறு கொடுப்பனவுகளையும் பெறமுடியாமலும், அவசர தேவைகளுக்கு வங்கிகளில் பணத்தை மீளப்பெற முடியாமலும், அரச அலுவலகங்களில் தமது அத்தியாவசிய தேவைகளை மேற்கொள்ள முடியாமலும் தடுமாறுகின்றனர்.

இந்நிலையில் அரச ஊழியர்கள் தாங்கள் அரசாங்கத்தின் சார்பில் மக்களின் ஊழியர்கள் என்பதையும், அத்தகைய சேவைக்காகவே மாதாந்தம் வேதனம் வழங்கப்படுகிறது என்பதையும் கவனத்தில் எடுத்து எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னர் சகலரும் வேலைக்குத் திரும்பவேண்டும். வாரத்தில் ஐந்து நாட்களுக்கும் வேலைக்குத் திரும்பாத ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை சகல ஊழியர்களினதும் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றேன். [உ]





## "ஷப்ரு" வெற்றிக் கிண்ண

### கிரிக்கெட் இறுதி ஆட்டம்

'ஷப்ரு' வின் ஆதரவுடன் ஜொலிஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் ''ஷப்ரு'' கிண்ணத்துக்கான இறுதி ஆட்டம் 04- 06- 89 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| பங்குபற்றும் அணிகள்:- | ஷப்ரு - சென்றலைட்ஸ் [சொக்ஸ்] |
| மைதானம்:- | சென்பற்றிக்ஸ் கல்லூரி |
| நேரம்:- | 9.00 மணி |
| பிரதம விருந்தினர்:- | அதி வணக்கத்துக்குரிய யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை அவர்கள் |

✶ அன்பர்கள், ✶ ஆதரவாளர்கள் ✶ விளையாட்டு ரசிகர்கள் அனைவரையும்

● ஷப்ரு நிதி நிறுவனத்தினரும்

● ஜொலிஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகத்தினரும்

✶ அன்புடன் அழைக்கின்றனர் ✶

(சி/2794)


## மரண அறிவித்தல்கள்

### திரு. அரசரெத்தினம் ஸ்ரீதரன்

திரு. அரசரெத்தினம் ஸ்ரீதரன் மட்டக்களப்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் முருகுப்பிள்ளை அரசரெத்தினம் (Retired Officer, Examination Dept, Colombo), திருமதி யோகராணி அரசரெத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், தம்பசிட்டி பருத்தித்துறையைச் சேர்ந்த ரஞ்சனியின் அன்புக் கணவரும், சசிதரன் (Harrison & Crossfield, Colombo Ltd) அவர்களின் அன்புச் சகோதரனும், திருமதி அன்னலக்ஷ்மி சசிதரனின் மைத்துனரும், செல்வி நிவேதாவின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11, நல்லையா வீதி, மட்டக்களப்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
அ. சசிதரன்.
(சகோதரன்)

இல: 11, நல்லையா வீதி,
மட்டக்களப்பு.

(11149)

### சின்னத்துரை கருணாகரன் (பாபு)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆத்திசூடி வீதியில் வசித்தவருமான சின்னத்துரை கருணாகரன் (பாபு) 01-06-1989இல் காலமாகி விட்டார். இவர் சின்னத்துரை, தங்கம்மா ஆகியோரின் அன்பு மகனும், பவானியின் அருமைக் கணவரும், கனகசபை (சின்னத்தம்பி) தையல்நாயகி ஆகியோரின் மருமகனும், கருணமாலா, கடாச்சசரன், செபகரன், குணசேகரம், தங்கராஜா, யோகராஜா (பிரான்ஸ்), பிரபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பசுபதி (கொட்டடி), சிவராஜா ஆகியோரின் மருமகனும் சுன்னாகத்தைச் சேர்ந்த S.P. இராசுவின் பெருமகனும், சுமதி, வதனி, (இந்தியா) தயானி,சிறிதரன், சுயேந்திரன், பிரதீபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் (03-06-1989) இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் கணக்கர் மரத்தடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(மா. கனகசபை) சின்னத்தம்பி.
மெக்கானிக்

54/21, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்'
யாழ்ப்பாணம்:

[11133]

### திருமதி அந்தோனிப்பிள்ளை அருளம்மா

அந்தோனிப்பிள்ளை அருளம்மா 01-06-89 இல் காலமாகிவிட்டார். இவர் அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், தேவதாஸ் [சவூதி], அருள்தாஸ் மேரிருணி [இந்தியா], விமலதாஸ் [ஜேர்மனி], மேரி ஜசிந்தா, செபரட்ணதாஸ் [கொம்மெஷியல் பாங்], ஜீவதாஸ் [கனடா] ஆகியோரின் அன்புத்தாயாரும், மேரி,சாந்தினி,பாலசிங்கம்,றஞ்சினி,ஜோர்ஜ்வில்லிமலர் ஆகியோரின் மாமியாரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து (03-06-89) இன்று காலை 8.00 மணிக்கு அர்ச் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன் அருள்தாஸ்.

10, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(11135)

### திரு. கதிரேசு துரைஐயா

(முன்னாள் பிஸ்கால் பாதுகாவலர்)

கொக்குவில் கிழக்கு பூனுறிமரத்தடியைச்சேர்ந்த கதிரேசுதுரைஐயா சிவபதம் அடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, பவளம் (அனித்தா ஸ்கூல் கொக்குவில்), விஜயரட்ணம், தையல்நாயகி, சரோஜினிதேவி, மகாலிங்கம் (மினிரேட் சென்ரர்), பாலறஞ்சித் (U.K.), றஞ்சித்குமார் (யப்பான்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம் சென்ற சிவசுப்பிரமணியம், தம்பிஐயா, தயானந்தம், நடராசா, லிங்காதேவி, பரமேஸ்வரி, லிங்கேஸ்வரி, ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 03-06-1989 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவில் மேற்கு சொர்ணவடலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத் தகவலலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
T. மகாலிங்கம்
(Mini ரேட் சென்ரர்)

கொக்குவில் மேற்கு.
கொக்குவில்:

(11141)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் [illegible] இல் உள்ள அச்சகத்தில் 03 - 06 - 1989 அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
O/L 89
ஆங்கிலம்
திரு. தேவராஜா
சமூகக்கல்வி
திரு. வேலாயுதபிள்ளை
வர்த்தகமும் கணக்கியலும்
திரு. மகேஸ்

சஞ்சீவி
சஞ்சிகை

03 - 06 - 1989 சனிக்கிழமை

பேரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
O/L 89
கணிதம்
திரு. இரா. அருட்செல்வம்
விஞ்ஞானம்
திரு. முருகதாஸ்
தமிழ்
திரு. பொன்னுச்சாமி
ஆண்டு 6, 7, 8, 9, 10 வகுப்புகளும் நடைபெறுகின்றன.

கருத்துக் கலசம்

மயூரா

## எழுத்துச் சீர் திருத்தம்

தமிழ் எழுத்துச் சீர் திருத்தத்தை இலங்கையிலும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். இவ்வாறு அறிஞர் குழு ஒன்று தமிழ்மொழி அலுவல்கள் அமைச்சுக்குப் பரிந்துரைத்து உள்ளது.

காலத் தேவைகளுக்கும், நவீன தொழில் நுட்ப முன்னேற்றத்துக்கு ஈடு கொடுக்கவும் என்று தமிழ் எழுத்துக்கள், வரி வடிவங்களில் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது, எழுத்துச் சீர்திருத்தம் தமிழ் நாட்டில் பல வருடங்களுக்கு முன்னரே நடைமுறைக்கு வந்து விட்டது. சிங்கப்பூர் மற்றும் சில நாடுகளும் தமிழகத்தைப் பின்பற்றி விட்டன. ஆனால் இலங்கையில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் இன்னும் அமுலுக்கு வரவில்லை.

தமிழக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் இலங்கைக்குத் தாராளமாக வருகின்றன. அதனால் எழுத்துச் சீர்திருத்த முறையைத் மாணவர்கள் கிரகித்துக் கொண்டு விடுகிறார்கள். ஆனால் இங்கே பழைய வரிவடிவ முறையே கையாளப்படுகிறது. இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் குழப்ப நிலை எழுந்துள்ளது. இது பெரும் நடைமுறைப் பிரச்சினையாகி உள்ளது.

நவீன அச்சுக்கலை வசதிகளைத் தமிழுக்கும் அறிமுகப்படுத்துவதற்கும், வேகமான விரைவான தொடர்புப் பரிமாற்றத்துக்கும், எழுத்துச் சீர் திருத்தம் தேவை என்ற வாதம் ஒரு புறம். வரிவடிவங்களை மாற்றி தமிழின் இயற்கைத் தன்மையையும் தொன்மையையும் மாசுபடுத்தக் கூடாது என்பது அடுத்த பக்கத்து வாதம். இந்த இரண்டு வாதங்களையும் இரு பக்கத்து நல்ல விளைவுகளையும், தீய விளைவுகளையும் அலசி ஆராய்ந்துதான் தமிழ்நாடு எழுத்துச் சீர்திருத்தத்தை நாடியது என்பது கவனத்திற்கு கொள்ளப்பட வேண்டும்.

பழைமையைப் பேணி புதுமையைச் செய்தால்தான் தமிழையும் நவீன மொழிகள் வரிசைக்குக் கொண்டு வரலாம். பண்டைய மொழி என்ற பெருமையைப் பாதுகாக்க விழைந்து செயற்படின், சமஸ்கிருதம், பாளி ஆகிய முதிய மொழிகளுக்கு ஏற்பட்ட கதி ஏற்பட்டு விடலாம். தமிழும் வெறும் ஆராய்ச்சிப் படிப்புக்குரிய மொழியாகும் நிலை தோன்றலாம்,

தமிழகமும், ஏனைய தமிழ் பேசும் நாடுகளும் புதுவழி செல்ல, இலங்கை மட்டும் பழைய வழியில் செல்ல அமுங்குப் பிடி பிடித்தால், பல நடைமுறைப் பிரச்சினைகளை எதிர் நோக்கி இணற்றுத் தவளைகளாகிக் கஷ்டமுற நேரிடும்.

★

# இருபதாம் நூற்றாண்டு கவிதைகளில் போற்றுதலைப் பெறுபவன் மனிதனே!

இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்த இலக்கியங்களின் பாடு பொருளில் தெளிவான ஒரு மாறுதலைக் காண முடிகின்றது.

இன்றைய கவிதைகளிலும் புனைகதைகளிலும் அந்த மாறுதல் இடம் பெற்றுள்ளது.

முன்னைய காலகட்டங்களில் தோன்றிய இலக்கியங்களில் பெரும்பாலானவை, ஒன்று இறைவனைப்போற்றிப் புகழ்வனவாக இருக்கும்; அல்லது வேண்டிய பொருள் தந்து காத்தவள்ளலை அல்லது அரசனைப் பாராட்டுவனவாக இருக்கும்.

இன்று எழும் புதிய படைப்புகளில் இறைவனுக்கும் அவ்வளவு இடமில்லை;

வள்ளல் அல்லது அரசனுக்கும் அத்துணைச் சிறப்பில்லை.

இன்றைய எழுத்தாளர்களின் போற்றுதலைப் பெறுபவன் மனிதனே; மனித சமுதாயமே அவர்களின் கற்பனையில் கோயில் கொண்டிருப்பது.

சமுதாயத்தின் அல்லது சமுதாய உறுப்பினராகிய மனிதனுடைய போராட்டமும் இன்பதுன்பமும் அவர்களின் எழுத்துக்கு உரிய பொருளாகஓங்கி நிற்கின்றன.

### உழைப்பவர் தெய்வம்

தெய்வப் புலவரை அடியொற்றிப் பாரதியார், 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் – வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனைசெய்வோம்' என்று 'சுதந்திரப் பள்ளு' பாடினுர்; 'சரஸ்வதிதேவியின் புகழை'ப் பாடும்போது 'கை வருந்தி உழைப்பவர் தெய்வம், கவிஞர் தெய்வம்' என்று வஞ்சமற்ற தொழில்புரிந்துவாழும் மாந்தரைத் தெய்வ நிலைக்கு உயர்த்தினுர்.

பாரதியாரின் 'தொழில்' என்னும் கவிதை தொழிலாளர்களுக்குக் கவிஞர் சூட்டியுள்ள புகழாரம் ஆகும்.

'பெரும் புகழ் நமக்கே
இசைக்கின்றேன்
பிரம தேவன் கலை இங்கு
நீரே!
விண்ணின்று எமைவானவர்
காப்பார்;
மேவிப் பார்மிசைக்
காப்பவர் நீரே!
தேட்டமின்றி விழியெதிர்
காணும் தெய்வமாக
விளங்குவீர் நீரே!

என்னும் அடிகளில் தொழிலாளர்களைப் 'பிரமதேவன் கலை'யாக 'விழி எதிர் காணும் தெய்வ'மாக பார்மிசைக் காப்பவராகச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

### கூடித் தொழில் செயல் வேண்டும்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'புதியதோர் உலகம் செய்ய கெட்டபோரிடும் உலகத்தை வேரோடு சாய்க்க' விழைந்தவர்; 'பொதுவுடைமைக்கொள்கை திசையெட்டும் சேர்க்க'ப் பாடுபட்டவர்.

'நடவு செய்த தோழர் கூலி நாலணுவை ஏற்பதும், உடல் உழைப்பிலாத செல்வர் உலகை ஆண்டு உலாவறும்' அவருக்குச் சம்மதமில்லை; 'கிலியை விடுத்து, கெஞ்சுவதை விடுத்து, தொழிலாளர்கள் கிளர்ந்து எழவேண்டும்' என்பது அவர் கருத்து.

'சாய்ந்த தராசு' என்னும் கவிதையில்,

'கூழுக்குப் பற்பலர்
வாடவும் சிற்சிலர்
கொள்ளையடிப்பதும்
நீதியோ-புவி
வாழ்வதுதான்
எந்தத் தேதியோ?
காண்பதெல்லாம்
தொழிலாளி
செய்தான் அவன்
காணத் தகுந்தது
வறுமையாம்–அவன்
பூணத்தகுந்தது
பொறுமையாம்!

—என்று சிற்சிலர் வாழ்ந்திடப் பற்பலர் உழைத்து வாடும் அவலத்தை வடித்துக் காட்டினுர்.

தொழிலாளர் உழைப்புக்கு இந்த உலகமே சாட்சி; சித்திரச் சோலைகள், நன்செய் வயல்கள், தாமரை பூத்த தடாகங்கள். நீண்ட பெருஞ் சாலைகள், இயந்திர பெருந் தொழிற்சாலைகள் ஆகியவற்றை உருவாக்குவதற்குப் பாடுபட்டவர்கள் தொழிலாளர்கள்.

'சித்திரச் சோலைகளே!
உமை நன்கு
திருத்த இப் பாரினிலே–
முன்னர்
எத்தனை தோழர்கள்
இரத்தம் சொரிந்தனரோ
உங்கள் வேரினிலே!
நித்தம் திருத்திய
நேர்மையினுல் மிகு
நெல்விளை நன்னிலமே!
உனக்கு
எத்தனைமாந்தர்கள் நெற்றி
வியர்வை
இறைத்தனர்காண்கிலமே!'

என்று தொழிலாளர் தடக்கைகளை – அவர்களது உழைப்



பாரதிதாசன்

பின் அருமையைப் போற்றிப் பாடியுள்ளார் பாரதிதாசன்.

'பொத்தல் இலைக்கலமானுர் ஏழைமக்கள், புனல் நிறைந்த தொட்டியைப் போல் ஆனுர் செல்வர்' என உலகப் பண்பாட்டில் ஏழை மக்களின் அவல நிலையைச் சித்திரிக்கும் வகையில் அவர் கையாண்டுள்ள உவமை நயமானதாகும்.

இருவர் ஒரு தொழிலில் இரண்டு நாள் ஒத்திருந்த சரிதம் அரிது நம் தாய்நாட்டில்' என்னும் பேருண்மையை எடுத்துக்காட்டும் கவிஞர்.

'கூடை முறம் கட்டுநரும்
கூடித்தொழில் செய்யின்
தோழர்களே! தேடி வரும்
லாபம்
சிறப்பு வரும்!'

என்று கூடித் தொழில் செய்யும் கொள்கையைப் பின்பற்ற உயருமாறு தொழிலாளர்களுக்கு அறிவுறுத்துகின்றுர்.

### ஏழை ஒருவன் இருக்கலாகாது!

'சண்டிக் குதிரை மேலே நொண்டித்துரை செய்யும் சவாரிபோல்' உள்ளது ஏழை எளியோரின் வாழ்வு.

உழுது பயிர் செய்வோன் – வயிற்றுக்கு உணவு பற்றுமல் அழுது அழுது நிதம் நிற்கிறுன்; ஆடை நெய்திடுவோன் – போர்க்கும் ஆடை இல்லாமல் வாடைகொண்டு நிதம் கிடந்து வருந்துகிறுன்; வீடு கட்டும் ஒரு கொத்தன் – விடுதி இல்லாமல் ஆடு, மாடுகள்போல் உலகில் அலைகிறுன்.

இந் நிலையில் தொழிலாளியின் சார்பாக நின்று பின் வருமாறு முறையிடுகின்றுர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

பாடுபடுபவர்க்கே – இந்தப்
பாரிடம் சொந்தம் ஐயா!
காடு திருத்தி நல்ல – நாடு
காண்பது அவரலவோ?...
வாழவேண்டுமெனில் –
தொழில்கள்
வளர வேண்டும் ஐயா!
ஏழை என்று ஒருவன்–
உலகில்
இருக்க லாகாது ஐயா!'

'பாடுபடுபவர்க்கே இந்தப் பாரிடம் சொந்தமாக வேண்

**- இரா. மோகன் -**

டும்' என்றும்,

'ஏழை என்று ஒருவன் உலகில் இருக்கலாகாது' என்றும் கனவு காண்கிறுர் கவிமணி.

### 'சிந்திச்சு முன்னேற வேணுமடி!'

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் திரையிசைப் பாடல்களில் பாட்டாளிகளின் குரல் எடுப்பாக ஒலிக்கின்றது!

தொழிலாளர்களின் வாழ்க்கை அவலங்களைக் குறிக்கும் வகையில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் கையாண்டுள்ள உவமைகள் அருமையும் எளிமையும் அழகும் வாய்ந்தவை.

தொழிலாளர் வாழ்க்கை 'வழிகாட்டி மரம்' போன்றது; அவர்கள் 'தாலி கட்டிக்கொண்ட மனைவிபோல்' உழைக்கிறுர்கள்; என்றுலும் அவர்கள் வாழ்க்கை 'சப்பிப் போட்ட மாங்கொட்டை போல் மெலிந்து' காணப்படுகின்றது.



பாரதியார்

'தேனுறு பாயுது – வயலில்
செங்கதிரும் சாயுது –
ஆனுலும்
மக்கள் வயிறு காயுது–
அதிசயந்தான் இது!
வகையாக இந்த நாட்டில்
என்று
மாற்றம் உண்டாகுமோ?–
கலைந்த
கூட்டம் ஒன்ருகுமோ?'

என்று ஏக்கத்தோடு பாடினுர் அவர்.

'அல்லற்பட்டு ஆற்ருது அழுதகண்ணீர் அன்ருே, செல்வத்தைத் தேய்க்கும் படை' என்று ஏழை மக்களின் கண்ணீருக்கு உள்ள ஆற்றலை எடுத்துரைத்தார் வள்ளுவர்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரமோ—

'ஏரோட்டும் ஏழை
இதயம் குமுறினுல்
போராட்டமே எழுமே!–
புவியிலே
போராட்டமே எழுமே!'

என்று எச்சரித்தார்; 'ஏழைகளின் புது உலகம் தெரியுதடா!– நாம் ஏமாந்து வந்த நிலை ஒழியுதடா!' என்று நம்பிக்கையோடு முழங்கினுர்.

'கஞ்சி குடிப்பதற் கிலார்– அதன், காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்' என்று மக்களின் தற்கால நிலைமையை எண்ணி நெஞ்சு பொறுக்காமல் பாடினுர் பாரதியார்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடலில் வரும் பாட்டாளியோ கஞ்சி குடிப்பதற்கு இயலாத நிலைமையின் காரணங்களை நன்கு அறிந்தவனுக உள்ளான்.

தன் காதலியின் வினவுக்கு அவன் விடை கூறுவதுபோல் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடியுள்ள பாடல் வரிகள் அறிவுக்கு விருந்தாகும் சிறப்பானவை.

மாடா உழைச்சவன்
வாழ்க்கையிலே – பசி
வந்திடச் காரணம்
என்ன மச்சான்?

அவன், தேடியசெல்வங்கள்
வேறே இடத்திலே
சேர்வதனுல் வரும்
தொல்லையடி!

பஞ்சைப் பரம்பரை
வாழ்வதற்கு – இனிப்
பண்ண வேண்டியது
என்ன மச்சான்?

தினம் கஞ்சி கஞ்சி
என்ருல் பானை நிறையாது
சிந்திச்சு முன்னேற
வேணுமடி!

தொழிலாளர் நிலையும் வாழ்வும் பற்றி இனிய சொல்லோவியங்கள் இருபதாம் நூற்ருண்டுக் கவிதைகளில் நிறைய உள்ளன.

★

# பூமி வெப்பமடைவதைத் தடுப்பது எப்படி?

**பூமி** சூடாகிக்கொண்டு வருகிறது.

இதனுல் பூமியின் காலநிலையில் அடுத்த 50, 60 ஆண்டுகளில் பயங்கர மாற்றங்கள் ஏற்படவுள்ளன.

பூமி வெப்பமடைந்து வருவதால் இடம்பெறப்போகும் அழிவுகள் என்னவாக இருக்கும்?

இவை பற்றி உலக விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறுர்கள்.

பூமியில் வளிமண்டலத்தில் செறிந்துள்ள கார்பன் டை ஒக்ஸைட் (Carban-di-Oxide) இரண்டு மடங்காக இன்னும் 60 ஆண்டுகளில் அதிகரிக்கவுள்ளது.

இது பூமியின் உஷ்ணத்தை 1.5 சென்ரிகிறேடில் இருந்து 4.5 சென்ரிகிறேடாக அதிகரிக்கிறது.

பூமியின் வெப்பத்தில் ஏற்படவுள்ள இச்சிறிய மாற்றம் அடுத்துவரும் ஆண்டுகளில் உலகநாடுகளின் பூகோள அமைப்பில் பல பாரிய மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளது.

எப்படி என்று எண்ணுகிறீர்களா?

பூமியின் வெப்பம் சூடாவதால் கடல்நீர் மட்டம் உயரப்போகிறது.

இதனுல் சிறிய தீவுகள், பெரிய தீவுகளின் கரையோரப் பகுதிகள் கடலினுள் மூழ்கி விடும்.

உதாரணத்திற்கு பங்களாதேஷ் நாட்டை விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பூமி வெப்பமடைவது தொடரின் அடுத்த 50 - 60 ஆண்டுகளில் பங்களாதேஷின் ஆறில் ஒரு பங்கு கடலினுல் விழுங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடல்மட்டத்தில் இருந்து உயரத்தில் உள்ள நாடுகளின் காலநிலையில் தீவிர மாற்றத்தை இது ஏற்படுத்தப் போகிறது.

குளிர்காலம் குறைவாக இருக்கும். கோடை காலம் அதிகரிக்கும்.

வரண்ட பிரதேசங்கள் மேலும் வரண்டு காட்சியளிக்கும். பெரும்பாலும் பாலைவனமாக மாறும் அபாயம் ஏற்படும்.

இந்த ஆபத்தை தற்காலிகமாகக் குறைப்பதற்குரிய வழி வகைகளை ஐ. நா. சுற்றுப் புறச் சூழல் பிரிவு வெளியிட்டுள்ளது.

வளிமண்டலத்தில் கார்பன்-டை- ஒக்ஸைட்

> உலகச் சுற்றுப்புறச்சூழல் தினம் இம்மாதம் 5 ஆம் திகதி உலகநாடுகளில் அனுஷ்டிக்கப்படுகிறது.
>
> 'உலகம் வெப்பமடைகிறது' —என்ற எச்சரிக்கையே இத்தினத்தின்போது ஐ. நா சுற்றுப்புறச் சூழல் நிறுவனத்தினுல் வலியுறுத்தப்படுகிறது.

வளிமண்டலத்தில் கார்பன் டை ஒக்சைட் அதிகரிப்பதே பூமி வெப்பமடைவதற்கு அரைப்பங்கு காரணமாக இருக்கிறது.

### தடுப்பு நடவடிக்கை

பூமி வெப்பமடைவதைத் தடுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கும் வரை அதிக அளவில் சேருவதற்கு காடுகள் அழிக்கப்படுவதும் ஒரு காரணமாக அமைகின்றது.

அடுத்தது மனிதன் உற்பத்தி செய்யும் வாயுக்களும் வளி மண்டலத்தில் கலப்பது.

இன்னொரு முக்கியமான காரணியாக அமைவது, பூமியை சூரியனின் அல்ட்ரா–வயலட் கதிர்த்தாக்கத்தில் இருந்து காப்பாற்றிவரும் ஓஸோன் லேயர் அழிந்து கொண்டுவருவது.

இந்த ஓஸோன் லேயர் வளிமண்டலத்தில் அமைந்திருக்கிறது. சூரியனின் அல்ட்ரா–வயலட் கதிர்கள் இந்த ஓஸோன் லேயரின் ஊடாக பூமியை அடைகிறது. அதனுல் கதிர்த்தாக்கம் குறைகிறது.

ஓஸோன் லேயர் அழிந்து கொண்டு வருவதால் சூரியனின் கதிர்த்தாக்கம் நேராக பூமியைத் தாக்குகிறது.

பூமி வெப்பமடைவதால் பாதிக்கப்படப்போவது வளர்ச்சியடைந்துவரும் நாடுகளே.

பூமியின் மத்திய ரேகையின் தெற்கிற்கும் வடக்கிற்கும் இடையில் 35 பாகையில் அமைந்துள்ள பகுதிகளில் இதனுல் தீவிர மாற்றங்கள் ஏற்படவுள்ளது.

இந்தப் பகுதிக்குள் இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளும் வருகின்றன.

இப்போதிருந்தே இந்திய விஞ்ஞானிகள் கடல்நீர் மட்டம் உயர்வதால் ஏற்பட உள்ள அபாயம் குறித்த ஆராய்ச்சிகளை ஆரம்பித்து விட்டனர்.

தற்காப்பு நடவடிக்கைகளாக காடுகள் அழிக்கப்படுவதை நிறுத்துவதிலும் புதிதாகக் காடுகளை உருவாக்குவதிலும் ஈடுபடும்படி நாடுகள் கோரப்பட்டுள்ளன.

மனிதனுல் உற்பத்தி செய்யப்படும் வாயுக்கள் வளிமண்டலத்தில் கலப்பதைக் குறைக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடும்படி ஐ. நா. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு நிறுவனம் கோரியுள்ளது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றுப்போன மனிதாபிமானம்

சஞ்சீவி சிறுகதை

கடந்த சில வாரங்களாக மனதை ஆக்கிரமித்து ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்த உணர்வுப் பெருக்கிலிருந்து மீளப்பெற்றதில்... நெஞ்சக் கூட்டுக்குள் இதயம் பஞ்சாகி மிதப்பதுபோன்ற பிரேமையில் பாடசாலை வளவுக்குள் நுழைந்தாள் கௌசல்யா ரீச்சர்.

'பிறேயர்' முடிந்து வெள்ளைச் சீருடை மாணவிகள் வரிசையாய் வகுப்பறைகளுக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். கையிலிருந்த கறுப்புக் குடையை இரண்டாக மடக்கிக்கொண்டு, படியேறினாள்.

'குட்மோர்ணிங் ரீச்சர்... இந்தாங்கோ பேனை...' ஒரு கணம் நெஞ்சுக்குள் குபீரென்று இரத்தம் பீறிட 'குட்மோர்ணிங்'... என்றவள் அன்ரன் மாஸ்ரர் நீட்டிய பேனையை வாங்கிக்கொண்டாள்.

அவளிடம் சொந்தமாக ஒருபேனை இருக்கிறது. அவன் தந்தபோது மறுத்திருக்கலாம். ஆனாலும் அடுத்தவரின் மனசை அவசியமின்றி நோகடிக்கக்கூடாதென்றே நேச உணர்வினால் அதை வாங்கிக் கொண்டாள்.

நடுத்தலையில் வழுக்கை... நரைவழுந்த தலைமயிருடன்... கண்ணாடிக் கூடாக ஏதோ படித்துக்கொண்டிருந்த கல்லூரி அதிபர் சதாசிவத்தின் முன்னால் 'அற்றெண்டன்ஸ் றிஜிஸ்ரர்' விரித்தபடி கிடந்தது. சிறுவயதில் தகப்பனை இழந்துவிட்டதாலோ என்னவோ அம்பது அறுபது வயது மதிக்கத்தக்க ஆண்களைக் காணும்போதெல்லாம் மனதுக்குள் இனம்புரியாதவொரு ஏக்கம் எட்டிப்பார்க்கும் அவளுக்கு.

'குட் மோர்ணிங் சேர்' என்றபடி கையெழுத்துப் போட்டாள் கௌசல்யா. அமைதியே உருவான அதிபர் புன்னகையுடன் வணக்கம் சொன்னார். அவளுக்கு மட்டுமல்ல... இந்தப் பாடசாலையின் ஆசிரியர்கள்... மாணவர்கள் எல்லோருக்குமே அவரை மிகவும் பிடிக்கும். பேதங்கள் ஏதுமின்றிப் பழகக்கூடியவர்.

அவர் வெளியில்வந்தபோது அன்ரன் மாஸ்ரர் பேனைக்காகக் காத்திருக்கவில்லை. அந்தப் பேனையை மூடித் தன் 'ஹான்ட்-பாக்'கில் வைத்துக் கொண்டாள். ரைம்ரேபிளை எடுத்துப் பார்த்தபோது முதலாவது பீரியட் பிறியாக இருந்தது.

ஆசிரியர்களுக்கான ஓய்வறைக்குள் நுழைந்தபோது, கமலா ரீச்சர் மட்டும் 'ஹான்ட் பாக்'இல் எதையோ தேடிக்கொண்டிருந்தாள். இவளைக் கண்டதும்,

'நீங்கள் குடுத்துவைச்சனீங்கள் கௌசல்யா... கல்யாணம் கட்டினாலே பொம்பிளையளின்ரை அற்பசொற்ப சுதந்திரமும் பறிபோயிடும்... பாருங்கோ மிஸ்... விடிய வெள்ளண எழும்பி படாதபாடெல்லாம்பட்டு...... இங்க வந்தா...இதுகள் ஒரு சொல் வழியும் கேளாதுகள்......மனுஷருக்கு பெரிய தலையிடியாப் போச்சுது... கொஞ்சம் 'றெஸ்ற்' எடுப்பம் என்று போட்டு பத்துப் பதினைஞ்சு கேள்விகள் எடுத்துவைச்சன்... வீட்டிலை தவறவிட்டிட்டன் போலை' என்று புலம்பித் தீர்த்தாள்.

கமலா ரீச்சரின் புலம்பலுக்கு அவள் என்ன பதில் சொல்லமுடியும்? 'வடிவாகத் தேடிப்பாருங்கோ ரீச்சர்' என்றாள்.

'அதைக்காணேல்லை... நான் வகுப்புக்குப் போறன் ரீச்சர்?' என்றபடி கமலா ரீச்சர் வெளியேறினாள்.

சுவரோரமாய் இருந்த பிரம்புக்கதிரையில் அமர்ந்து கொண்டாள் அவள். இப்படித்தான் இரண்டு வாரங்களுக்கு முன்னால் அவளிடம் தன் இனியகாதலை வெளியிட்டான் அன்ரன் மாஸ்ரர்.

அன்ரன் மாஸ்ரர் மிகவும் நல்லவன். உயர்ந்த கம்பீரமான கறுப்பான உருவம்... அவர்மீது அவளுக்கு நிறைய விருப்பம் இருந்தது. அந்த விருப்பம் வெறும் சினேக உணர்வுதான் என்று அவளுக்குத் தெரியும்.

அன்று... 'எக்ஸ்கியூஸ் மீ ரீச்சர்... நானும் இங்கிருப்பதில் உங்களுக்குச் சிரமமில்லையே...' என்றான் அவன்.

'இது சகல ஆசிரியர்களும் ஓய்வெடுப்பதற்கான அறை... இங்கே இருப்பதற்கு யாரும் யாரிடமும் அனுமதி பெறத் தேவையில்லையே...' என்று நினைத்துக் கொண்டவள்... 'இல்லை' என்றாள் சுருக்கமாக.

அவளுக்கு எதிரே உள்ள கதிரையில் அவன் அமர்ந்து கொண்டான். 'ரீச்சர்! நான் இன்னும் கொஞ்ச நாளிலை இந்த வேலையை றிசைன் பண்ணிப்போட்டு சவூதிக்குப் போறன்...' அவள் இலேசான ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

'இல்லை ரீச்சர்... இந்தக் காலத்திலை பணம் தான் வாழ்க்கையை முடிவுசெய்யிற ஒரு கருவியாக இருக்குது... கூடிப்பிறந்த குற்றத்துக்காக எங்கட பெண் சகோதரிகளுக்காக நாங்கள் எங்கட மனங்களை மரக்கப்பண்ணவேண்டி இருக்கு...'

அவன் சொன்னது உண்மைதான் என்றாலும் அதில் அவளுக்கு உடன்பாடு இல்லவே இல்லை. பெரும்பாலான ஆண்களின் ஏகோபித்த குரல் வெளிப்பாடு இதுதான். இந்தப் பணத்தை இரக்கமின்றி இன்னொரு ஆணே கேட்கிறான் என்பதை இவன் ஏன் புரிந்து கொள்ளவில்லை.

அவளுடைய மௌனத்தை அவன் தவறாகப்புரிந்துகொண்டானோ என்னவோ 'உங்களுக்கு சிரமம் தாறதா நினைச்சா மன்னிச்சுக்கொள்ளுங்கோ ரீச்சர்...' என்றான் வேதனையுடன்.

'இல்லை மாஸ்ரர் இல்லை... சொல்லுங்கோ... என்னால உங்களுக்கு ஏதாவது வகையிலை ஆறுதல் கூற முடியுமென்றா...செய்யிறன்...'

நான் உங்களோடை ஒரு பிரன்ட் என்ற முறையிலைதான் இப்ப கதைக்க விரும்புறன் கௌசல்யா... கல்யாணமாகி இரண்டு பிள்ளைகளுடன் விதவையாக எங்களோட இருக்கிற அக்கா... எதிர்காலக் கனவுகளோடை என்னை நம்பியிருக்கிற தங்கச்சி... தென்னை மரத்துக்கு தண்ணி ஊத்திவிட்டு எப்ப தேங்காய் விழும் என்கிறமாதிரி... என் கைகளையே ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் அம்மா...... இவர்களுக்காக என்னை நானே அர்ப்பணிக்கத்தானே வேணும்... ஆனா... நானும்... ஒரு சராசரி ஆம்பிளை தானே... எனக்கும் விருப்பங்கள் அபிலாசைகள்...கருத்துக்கள் எல்லாம் இருக்கு... அவற்றை நான் குழிதோண்டிப்புதைக்க முடியுமா கௌசல்யா?...?'

'சும்மா கவலைப்படாதேங்கோ... மாஸ்ரர்... கடுமையான உழைப்புக்கு முன்னால் எந்தக் கஷ்டமும் பனிமாதிரி உருகிப் போய்விடும்... இப்பிடி நீங்கள் பாரமா நினைக்கக் கூடாது... கடமையாக நினைத்துக் கொள்ள வேணும்......'

அவன் சிறிதுநேரம் எதையோ யோசித்துக்கொண்டிருந்தான். பிறகு அவளைப் பார்த்தபடியே, 'கௌசல்யா துன்பம் வருகிறபோது துவளவிடாம ஆறுதல் கூறித் தேற்றுவது தான் உண்மையான அன்புக்கு இலக்கணம். ... இந்த அன்பும்...... ஆறுதலும் உங்கள் மூலமாக என்ர வாழ்க்கையிலை தொடர வேணும்! இதுதான் என்ர ஆசை...... நிறைவேற்றுவீங்களா கௌசல்யா......?

எதிர்பாராத விதமாக உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை அவள் உறைந்து போனாள். உடம்பிலிருந்த உதிரம் முழுவதையும் யாரோ உறிஞ்சிக் குடித்து விட்ட மாதிரி இருந்தது அவளுக்கு.

'எனக்குத் தெரியும் கௌசல்யா... எல்லாரும் ஊருக்குத்தான் உபதேசம் செய்யினம்... பட்டதாரியான நீங்கள்கூட... சமயம் பார்க்கிறியள்... வித்தியாசங்களை விருத்தி செய்யப் பயந்து விலக நினைக்கிறியள்... உங்களுக்கு ஏன் கௌசல்யா படிப்பு...? பட்டம்...?' அவன் உடம்பு படபடத்தது. ஏராளமாக வியர்த்துப் போனான்.

'மாஸ்ரர்... வாழ்க்கை சம்பந்தமான முடிவுகளை உடனடியாக எடுக்க ஏலாது...... யதார்த்தமா சிந்தித்துப் பார்க்க வேணும்... ஒவ்வொரு முடிவின் பின்னால் ஏற்படக்கூடிய நன்மைகளை... தீமைகளை... எப்படியெல்லாம் எங்களாலை எதிர்நோக்க முடியும் என்றெல்லாம் நினைச்சுப் பார்க்க வேணும்... படுகுழிக்கு எதிரும் புதிருமா நின்றுகொண்டு கரங்கோர்த்துக் கொள்ள முடியுமா மாஸ்ரர்...?'

'நீங்கள் சொல்லுறது உண்மைதான் கௌசல்யா... ஆனா... ஆனா... உங்களை உங்கட அனுமதியில்லாமலே நீண்ட காலமாய் நேசித்து விட்டு... இப்ப உங்களை இழக்க என்னால முடியாது... முடியாது...'

'நானும் ஒரு சாதாரண பொம்பிளை தான்... எனக்கும் அன்பு, பாசம், காதல் என்று எல்லா உணர்வுகளும் உண்டு மாஸ்ரர்... ஆனா... நான் ஈஸியா முடிவு எடுத்துவிட ஏலாது...'

'நான் உங்களை வற்புறுத்தவில்லை... ஆறுதலா முடிவெடுங்கோ... ஆனா... அந்த முடிவு எனக்கு முடிவு ஏற்படுத்தாமல் இருந்தா சரி...' அன்ரன் மாஸ்ரர் வெளியே போகவும் கமலா ரீச்சர் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

'ரீச்சர்... காலைச்சுத்தின பாம்பு கடிக்காமல் போகாது... கொஞ்ச நாளாய் அன்ரன் மாஸ்ரர் உங்களையே சுத்துறார்... அவனவன் சும்மா காதல் கீதல் என்று உளறிப் போட்டு... சந்தர்ப்பம் வரும்போது... 'நான் அம்மா பிள்ளை— அம்மாவை மீற முடியேல்லை' என்று நழுவி விடுவாங்கள்... நானும் அஞ்சு வருஷத்துக்கு முந்தி இப்படித்தான் காதலிலை மயங்கி... இன்றுவரை சீரழியிறன்...'

கமலா ரீச்சர் வழமை போலப் புலம்பினாள். இவ்வளவுக்கும் கமலா ரீச்சர் ஒரு எம். ஏ. பட்டதாரி என்று நினைக்க கௌசல்யாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அன்ரன் மாஸ்ரருக்கு என்ன சொல்வது? என்ற குழம்பிய மனத்துடன் தனக்குரிய வகுப்பறைக்குச் சென்றாள்.

இரண்டு வாரங்களும் அவளுக்கு நிம்மதியே இல்லை. அம்மா அடிக்கடி சொல்லுவாள், 'எங்களைப் போல ஏழையளுக்கு மானம்தான் பெரிசு... மானம்கெட்டு வாழுற நேரம் கிணத்திலை விழுந்து செத்துப்போகலாம்...'

இந்த அம்மா அன்ரன் மாஸ்ரரை அவள் காதலித்தால் ஏற்றுக்கொள்வாளா?

இப்படித்தான் கணேசு மாமா— தன் ஒரே மகளைப் பொத்திப் பொத்தி வளர்த்தார்... ஊரே வியக்கும்படி படித்துப் பட்டம்பெற்று உயர்ந்த உத்தியோகத்துக்குப் போனாள். அங்கே சக உத்தியோகத்தனை விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டாள். மனத்துக்குள்ளே வெதும்பிக் கொண்டிருந்த ஊர்ச்சனங்கள் ஒன்றுகூடிக் கேலிபேசினார்கள். கணேசு மாமா ஊருக்காக மகளை வெறுத்தார்.

அவருடைய அடுத்த பெண்ணுக்கு யாரும் மாப்பிள்ளை தர முன்வரவில்லை. அவளும் கல்யாணமாகாமலே கிழமாகிப்போனாள். கணேசு மாமா கண்ணீர் விட்டபடியே செத்துப்போனார். அன்ரன் மாஸ்ரரை அவள் காதலித்தாலும் இன்னொரு கணேசு மாமாவின் குடும்பம் போலத்தான் இதுவும் ஆகும்.

தம்பி வாகீசனிடமும், தங்கை வத்சலாவிடமும் அவள் எவ்வளவு பிரியமாக இருக்கிறாள்? சிறு வயதிலிருந்து அவர்களுடைய ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும்... அவர்களின் முன்னேற்றத்தின்போதும் அவள் எவ்வளவு பூரித்துப்போயிருக்கிறாள்? அவளுடைய காதல் தன் உயிர் உடன்பிறப்புகளின் எதிர்காலத்தைக் கருக்கும் [illegible] ஒரு [illegible] இல்லை...

'மாஸ்ரர்... நான் என்ர முடிவைச் சொல்லிவிடுறன்...' என்றாள் கௌசல்யா. உள்ளங்கைகளையே பார்த்துக் கொண்டிருந்த அன்ரன் புதுவிதமான எதிர்பார்ப்புகளோடு நிமிர்ந்தான். புன்னகைத்தான்.

'நீங்கள் சொன்னதை நான் சிந்தித்துப்பார்த்தாச்சு மாஸ்ரர்... பெற்றவளுக்கும்... கூடிப்பிறந்ததுகளுக்கும் ஒரு காயத்தை ஏற்படுத்திப் போட்டு... எனக்கென்று சுயநலமிக்க ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள நான் விரும்பேல்லை... நடக்க முடியாத ஒன்றுக்காக ஏங்கி... உங்கள் வாழ்க்கையை கெடுத்துக்கொள்ளாமல்... நீங்கள் சந்தோஷமாக வாழவேணும் மாஸ்ரர்... என்றும் உங்கட ஆத்மார்த்தமான சினேகிதியாக நான் இருப்பன்...'

அவன் மௌனமாகவே இருந்தான். அவன் மௌனமாக இருப்பதைக் குழப்பாமல் அவள் அகன்றாள். மனது வெளித்துப்போயிருந்தது.

பஸ் பிடித்து வீட்டுக்கு வந்தபோது... வீட்டில் அம்மா இல்லை; செருப்புகளை விறுந்தை மூலையில் கழற்றி விட்டு... உள்ளே நுழைந்தாள்.

தங்கை வத்சலா கையில் எதையோ வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தவள் இவளைக் கண்டதும் திடுக்கிட்டு... பதற்றதுடன் புத்தகங்களுக்குள் செருகிவிட்டு... 'அக்கா... நீ... நீங்களா...?...' என்றாள்.

வத்சலா தன்னிடம் எதையோ மறைக்கிறாள் என்று புரிந்துகொண்டும்... அமைதியாக அவள் உடுப்பு மாற்றிக்கொண்டாள்.

கால் முகங்கழுவிக்கொண்டு வந்து மௌனமாக... தங்கை வத்சலாவை அழைத்தாள்.

'வத்ஸி... நீ கையிலை என்ன வைத்திருந்தாய்?...'

'படம்...'

'யாருடைய படம்...?'

'...... ...'

'சொல்லு வத்ஸி... படம் வைச்சிருக்கிறதை ஏன் நீ எனக்கு மறைக்க வேணும்...? நானெல்லாம் எவ்வளவு 'பிரென்சி'ன்ர படம் வைச்சிருக்கிறன்...'

'அக்கா...' வத்ஸி எதிர்பாராத விதமாக கௌசல்யாவின் மடியில் முகம் புதைத்து அழத்தொடங்கினாள்.

'சொல்லு வத்ஸி... ஏன் அழுகிறாய்?...'

நீங்கள் கோவிக்கமாட்டீங்களா அக்கா...'

'இல்லை வத்ஸி...சொல்லு... உன்னிலை நான் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறன்...... உன்னை நான் ஏசுவேனோ?... பயப்பிடாம சொல்லு...'

வத்சலா எழுந்து உள்ளே போனாள். உள்ளேயிருந்து செருகி வைத்த படத்தை எடுத்துக் கொண்டு வந்து கௌசல்யாவிடம் தந்தாள்.

அழகான ஒரு இளைஞனின் நெஞ்சளவு புகைப்படம். கம்பீரமாகவும் வசீகரமாகவும் இருந்தான் அவன். அவளுக்கு எல்லாமே புரிந்தது. மெல்ல பின்புறம் திருப்பினாள். அழகான ஆங்கில எழுத்துக்களில் 'டி. ஜி. ஜோசப்' என்று எழுதியிருந்தது.

ஒருகணம் நிலம் அதிர...... 'வத்ஸி...' என்று அதிர்ந்து போனாள் கௌசல்யா.

'அக்கா... அக்கா... நானும் ஜோசப்பும் உயிருக்குயிராய் நேசிக்கிறம்... எங்களைப் பிரித்துப்போடாதேங்கோ...' வத்சலா விம்மத்துவங்கினாள். கௌசல்யா சிலையாகிப் போய் நின்றாள்.

(யாவும் கற்பனை)

- ஆதிலட்சுமி இராசையா -



## புகைக்காதீர்!

ஓ!
புகைக்கும் மனிதர்களே
புத்தியற்ற ஜீவன்களே...
உங்கள்
மன ஆடையில்
கறைகளாய்ப்
படி(தி)ந்திருக்கும்
கவலைக் காட்சிகளைக்
களையவா
சிகரட்டை சினேகிதன்
ஆக்கிக் கொண்டீர்கள்

ஆம்
உங்கள்
மனக் கவலைகளைப் போக்க
சிகரட் துணை
புரியும்போது......
புற்று நோய்
அரக்கனின் அரவணைப்பில்
வேதனைச் சுமைகள்
தாங்காமல்
உங்கள்
கண்கள் தினம்
கண்ணீர்க் குழந்தைகளைப்
பிரசவிக்கும்
அவைகள் தான்
எரியும் உங்கள்
சிகரட்டை அணைக்கும்.

'சிலாவத்துறை
ஹமீத் பைரூஸ்'

## நம்ப வாழ் நம்பி வாழாதே

பார்த்தால் சிரிக்காதே
சிரித்தால் கதைக்காதே
கதைத்தால் காதலிக்காதே
காதலித்தால் கைவிடாதே
கைவிட்டால்
கவலைப்படாதே

உரும்பிராய் துஷி

# வாசகர் தராசு

## மகாத்மாவின் திரைப்படம்

மகாத்மாவின் திரைப்படம் என்ற கட்டுரையைச் சஞ்சீவியில் பிரசுரித்ததன் மூலம் சஞ்சீவி பாக்கியசாலியானாள்.

ஒருமுறை ஒரு கூட்டத்தில் திருமுருக கிருபானந்த வாரியார் சொன்னார்:

''மகாத்மாவைக் கண்டவர்கள் பாக்கியசாலிகள். நான் மகாத்மாவைக் கண்டேன். எனவே நான் பாக்கியசாலி.

''கவலை வேண்டாம்! இந்தக் கூட்டத்திற்கு வந்த நீங்களும் பாக்கியசாலிகள்.

''ஏன் தெரியுமா? மகாத்மாவைக் கண்டவராகிய என்னைக் கண்டீர்கள். கண்டவரைக் கண்டதால் நீங்களும் பாக்கியசாலிகளாகி விட்டீர்கள்!

வாரியாரின் கூற்றுப்போல, சஞ்சீவியில் ''மகாத்மாவின் படம்'' பற்றிய கட்டுரையை வாசித்தவர்கள் எல்லாரும் பாக்கியசாலிகளாகி விட்டார்கள் என்று நான் கூறுகிறேன். கட்டுரையை வாசித்தவுடன் மகாத்மாவைக் கண்டது போல் இருந்தது. வாசித்தவர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும்போது கட்டாயம் மகாத்மா படத்தைப் பார்ப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

- ஞா. நதானியேல் நவரத்தினம் -
கரவெட்டி.

★ ★ ★

மகாத்மாவின் திரைப்படம் தயாரிக்க உதவிய பிரிட்டிஷ் உளவாளிகள் என்ற கட்டுரையை சஞ்சீவியில் வாசித்து திருப்தி அடைந்தேன்.

இப்படியான கட்டுரைகள் எமக்குக் கிடைக்க சஞ்சீவி உதவ வேண்டும்,

- க. சசிதரன் -
நல்லூர்.

## மகிழ்விக்கும் சஞ்சீவி!

தரமான செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் தந்து வாராவாரம் எம்மை மகிழ்விக்கும் சஞ்சீவிக்கு எனது நல் வாழ்த்துக்கள்.

சஞ்சீவி தொடர்ந்து இந்த ஈழமண்ணில் இதழ் விரிக்க என் நல்வாழ்த்துக்கள்.

- எச். எம். பைரூஸ் -
சிலாவத்துறை, மன்னார்.

## தனியிடம் வகிக்கும் சஞ்சிகை

ஈழத்துத் தமிழ் இலக்கிய உள்ளங்களில் தனியிடம். பிடித்துக்கொண்ட ஒரே வார இதழ் சஞ்சீவிச் சஞ்சிகையே

- மணித்தீவு இ- சிவனேஸ் -

## நூறாண்டு காலம் வாழ்க!

உள்ளத்தைக் கொள்ளை கொண்ட சஞ்சீவியே! சனிதோறும் காலையில் கண்டதும் மழையைக் கண்ட மயில் போல என் மனம் குதூகலிக்கின்றதே!

நீ சுமந்த கவிதைத்துளிகள், சிறுகதைகள், மற்றும் ஆக்கங்களைத் திரட்டித்தரும் உன்னைக் கண்டால் மலராத முகம் இங்கு இல்லையே!

நீ நூறாண்டு காலம் நிறைவுடன் வாழ்க!

- மீசாலையூர் கலைமகள்

# மரங்களின் ஆயுதங்கள்

மனிதர்களைப் போலவே தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தாவரங்களும் ஆயுதங்களைத் தம்வசம் வைத்திருக்கின்றன என்று கூறினால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஆனால் இது உண்மை.

தாவரங்கள் தாம் உயிர் வாழவும் தமது தாவர இனத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும் தம்முடைய உருவத்திலேயே ஆயுதங்களைத் தோற்றுவிக்கின்றன.

கூரிய முட்கள், செதில்கள் என்பன போன்ற உடலுறுப்புகளையும், தம்மைப் பாதுகாத்துக்கொள்ளக் கூடிய ரசாயனங்களையுமே அவை தமது ஆயுதங்களாகப் பயன்படுத்துகின்றது.

புகையிலைச் செடி நிகோடின் என்ற நச்சினை உருவாக்குகின்றது. இந்த நிகோடின் வாசனை பட்டாலே புகையிலைச் செடியில் உட்கார்ந்திருக்கிற வண்டுகள் செயலற்றுப் போய்விடும்.

பெரும்பாலான தாவரங்கள் தமக்கு இடையூறு விளைவிக்க வருகின்ற எதிரிகளை செயல் இழக்க வைத்துவிடுகின்றன.

இன்னும் சில மரங்கள், எதிரிகள் தம்மைத் தாக்கும்போது ஏனைய மரங்களுக்கு எச்சரிக்கை செய்து விடுகின்றன.

சிவப்பு ஆல்டர், வில்லோ போன்ற மரங்களைக் கம்பளிப் பூச்சிகள், புழுக்கள் என்பன தாக்குமானால் உடனே அவை ஏனைய மரங்களை எச்சரிக்கின்றன.

ரசாயனங்களைப் பெருக்கி ஏனைய மரங்களை எச்சரிக்க அவை, தமது இலைகளில் டாணின்களைக் கூடுதலாக நிரப்புகின்றது. இவை பூச்சி, புழுக்களுக்குப் பிடிக்காது. இதனால் இந்த இலைகளைத் தின்னாது அவை அம்மரங்களை விட்டுப் போய் விடுகின்றன.

தொகுப்பு:- க. கனகராசா

# மனம் ஏன் தவிக்கிறது?

வெண்ணிலவு எறிக்கிறது
விண் மீன்கள் முளைக்கிறது
நள்ளிரவு கழிகிறது – எழில்
வைகறையு மாகிறது
ஆதவனும் அயர்ந்தெழுந்து
அகிலமெல்லாம் ஒளியேற்றுகிறான்
வானகத்தில் இயற்கையெல்லாம்
வழுவாது நடந்திருக்க
பூவுலகில் ஜனனித்த – என்
மனம் ஏன் தவிக்கிறது?

பார்ப்பதற்கு விழி இரண்டு
பக்குவமாய் எனக்குண்டு
கேட்பதற்கு செவி இரண்டு – நான்
கேட்காமல் படைத்திருக்கு
பேசி மகிழ்வதற் கேற்ப
பிரமன் படைப்புண்டு
ஆன மட்டும் எந்தனுக்கு
அங்கக் குறையேது மின்றி
அத்தனையும் நிறைந்திருந்தும் – என்
மனம் ஏன் தவிக்கிறது? ----

— பூநகர் கவிப்பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்டாலினை வாழ்த்திய ஹிட்லர்

'சாட்சி' என்ற தலைப்பில் இரண்டு மணித்தியாலம் ஓடும் டொக்குமென்டரி படம் ஒன்று கடந்த 13 ஆம் திகதி சோவியத் டெலிவிஷனில் காட்டப்பட்டது.

சோவியத் சர்வாதிகாரி ஸ்டாலினுக்கும் அவரது வெளியுறவு அமைச்சராகப் பணியாற்றிய மொலட்டோவுக்கும் மொழிபெயர்ப்பாளராகப்பணியாற்றிய வலன்டின் பெரஸ்கோவ் என்பவர் அப்படத்தில் பலதிடுக்கிடும் தகவல்களை வெளியிட்டார்.

இதுவரை ஹிட்லர், ஸ்டாலின் ஆகிய சர்வாதிகாரிகள் பற்றி வெளிவராத தகவல்களாக அவை அமைந்தன.

முதலாவது தகவல்:

● சோவியத் எல்லையில் உள்ள ஜேர்மன் துருப்புக்களை விலக்கிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்வதற்காக மொலட்டோவ் பெர்லின் சென்றிருந்தார்.

இக்கோரிக்கையை வெளியிட மொலட்டோவ் ஹிட்லரைச் சந்தித்தார்.

மொலட்டோவின் கோரிக்கைபற்றி ஹிட்லர் காதுகொடுக்கவில்லை. தனது கருத்தை கேட்கும்படி ஹிட்லர் மொலட்டோவை நிர்ப்பந்தித்தார்.

ஹிட்லர் கூறுகிறார்:

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் நொருங்கிக் கொண்டிருக்கிறது.

சோவியத்யூனியனின் எல்லைகளை பாரசீக வளைகுடாவுக்கும் இந்தியாவுக்கும் விஸ்தரிக்கலாம்.

ஐரோப்பா குறித்து ஜேர்மனியும் இத்தாலியும் நாட்டம்கொண்டுள்ளன.

ஜப்பானின் அக்கறை தெற்காசியாவில் மட்டுமே உண்டு.

சோவியத்யூனியனின் படைகள் பாரசீக வளைகுடாவூடாக இந்தியாவைப் பிடிக்கலாம்'—

இப்படிஹிட்லர்கூற மொலட்டோவ் திடுக்கிட்டார்.

தனது யோசனையை மூன்று தரம் ஹிட்லர் வற்புறுத்தினார்.

மொலட்டோவ் யோசனையை ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டினார்.

உடனே ஹிட்லர் உமது விஷயத்தை எனது வெளியுறவு அமைச்சருடன் பேசும். என்னுடன் பேசவேண்டாம்'— என்று கூறி பேச்சுக்களை முறித்துக்கொண்டார்.

● இரண்டாவது தகவல்:

ஹிட்லரும் ஸ்டாலினும் ஆளை ஆள் பாராட்டிக் கொண்டுள்ளனர்.

எப்படி?

ஹிட்லர் கூறுகிறார்:

ஸ்டாலின் பெரிய மனிதன். அவரை நான் பாராட்டுகின்றேன்.

என் பெயர் போன்று அவரது பெயரும் சரித்திரத்தில் இடம்பெறும். நான் அந்தப் பெரிய மனிதனைச் சந்திக்க விரும்புகின்றேன்'—

ஏன் இவ்வளவு காலமும் இத்தகவல்களை வெளியிடவில்லை என்று திரு. பெரஸ்கோவ்வைக் கேட்டதற்கு—

குறைந்தது 22 ஆண்டுகளுக்காகவாவது மௌனியாக இரும் என்று மொலட்டோவ் கூறியதால்தான் தான் முன்னர் தெரிவிக்கவில்லை என்று சொன்னார். ★

# உலகப் புகழ் பெற்ற மறதிகள்

அறிவியல் மேதை ஐன்ஸ்டீன், புதிதாக அமெரிக்காவுக்கு போய்ச் சேர்ந்த நேரம் அது.

ஒரு சிறிய ஹோட்டலில் தங்கியிருந்த அவர் ஒருநாள் மாலை எங்கோ போய்விட்டு ஹோட்டலுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்.

ஏதோ சிந்தனையில் அவர் இருந்ததால் ஹோட்டலுக்குச் செல்லும் பாதையைத் தவறவிட்டுவிட்டார்.

எனவே அங்கே நின்ற ஒரு பொலீஸ்காரரை அணுகினார்.

'நான் தங்கியிருக்கும் ஹோட்டலுக்குத் தாங்கள்



ஐன்ஸ்டீன்

வழிகாட்ட உதவ முடியுமா?' என்று கேட்டார்.

'ஓ... தாராளமாக... தாங்கள் தங்கியிருக்கும் ஹோட்டல் பெயரென்ன?' பொலீஸ்காரர் கேட்டார்.

'மன்னிக்கவும்...... அதை மறந்து விட்டேன். அதனால் தான்!'

'பரவாயில்லை...... அந்தக் ஹோட்டல் இருக்கும் தெருப் பெயர் தெரியுமா?'

'மன்னிக்கவும்...... அதுவும் மறந்துவிட்டது...'

'சரி...சரி... அந்த ஹோட்டல் பக்கத்தில் ஏதாவது முக்கிய கட்டடங்கள் இருக்கின்றனவா?'

'இல்லை அதையும் மறந்து விட்டேன்!'

பொலீஸ்காரருக்கு எரிச்சல் வந்துவிட்டது, 'ஓய் உமக்கு உமது பெயராவது நினைவில் இருக்கிறதா?' என்று கடிந்து கேட்டார்.

'ஆம்... அது நினைவிருக்கிறது. என் பெயர் ஐன்ஸ்டீன்!'

—என்று அவர் சொல்லி முடித்ததும் பொலீஸ்காரர் பதற்றமாய் ஒரு சல்யூட் அடித்தவராக, 'சார் நீங்கள் அறிவியல் மேதை ஐன்ஸ்டீனா மன்னியுங்கள்...... நீங்கள் தங்கியுள்ள ஹோட்டலை நானே விசாரித்து அறிந்து உங்களை அங்கே கொண்டு சேர்த்து விடுகிறேன்...' என்றார்.

நல்ல வேளை ஐன்ஸ்டீன் தன் பெயரையாவது ஞாபகம் வைத்திருந்தாரே.

● மக்களுக்குப் பயன்படக்கூடிய ஏராளமான உபகரணங்களைக் கண்டுபிடித்து சாதனைபுரிந்தவர் தோமஸ் அல்வா எடிசன். விஞ்ஞானிகளின் வழிகாட்டி என்று போற்றப்படுபவர்.

இவர் ஒருநாள் வரிப்பணம் கட்டுவதற்காக, வரிகட்டும் அலுவலகம் சென்றிருந்தார்.

வரிசையில் நின்றுகொண்டு கவனிக்காமல் மனத்தை விஞ்ஞான சிந்தனைகளில் செலுத்தி இருந்தார்.

இவர் முறை வரும்போது அங்கிருந்த அலுவலர் இவரது பெயரைக் கேட்டார். ஆனால் அந்த விஞ்ஞானியோ தன் பெயரையே மறந்துபோய் விட்டார்.

எவ்வளவோ ஞாபகப்படுத்திப் பார்த்தும் அவரது பெயர் அவருக்கு ஞாபகம் வரவில்லை.

தனக்கு வந்த கடிதங்களில் ஏதேனும் தன்வசம் இருந்தால் அதைப்பார்த்தாவது சொல்லிவிடலாம் என்று சட்டைப் பையில் பார்த்தார். ஒன்றுமில்லை.

எதுவும் செய்யத்தோன்றாமல் மிரள மிரள விழிக்க ஆரம்பித்துவிட்டார். அப்போது அங்குவந்த எடிசனுக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் எடிசன் வரிசையில் நிற்பதைப் பார்த்துவிட்டு பெயர் சொல்லி அழைக்க அப்போதுதான் அவருக்கு ஞாபகம் வந்தது.

பின்பு அசட்டுச் சிரிப்புடன் வரியைக் கட்டிவிட்டுவெளியே வந்தார். மாபெரும் விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன்;

உலகப் புகழ்பெற்ற பின்னர் அவர்களுக்கு மறதிவந்தது.

அதனால் அவர்களின் மறதி கூட உலகப் புகழ்பெற்றதாகி விட்டது.

ஆனால் சாதாரணமாக நமக்கு வரும் மறதி......அதை மறந்துவிடுங்கள். ★

## ஜப்பானில் பத்திரிகைகள்

உலகிலேயே ஆங்கிலப் பத்திரிகைகள் குறைவாக விற்பனையாகும் நாடு ஜப்பான்தான்.

இங்கு நாளொன்றுக்கு 50 ஆயிரம் பிரதிகள் கூட விற்பனையாவதில்லை.

'அஷாகி ஷிம்பின்' என்பது ஜப்பானின் தேசிய தினசரிகளில் முதல் தரமானது.

இப்பத்திரிகை மட்டும் பல நகரங்களின் இருந்து 139 பிராந்தியப் பதிப்புக்களை வெளியிடுகிறது. ★

# அலுமீனியம் பற்றி ஓர் ஆய்வு!

முன்னொரு காலத்தில் அலுமீனியம் தங்கத்தை விடவும் பிளாட்டினத்தை விடவும் மதிப்பு மிகுந்ததாக இருந்தது.

பிரபல வேதி விஞ்ஞானியும் தனிம அட்டவணையை உருவாக்கிப் புகழ்பெற்றவருமான மென்டலியேவுக்கு (Mendelear) அவருடைய அறிவியல் சாதனையைப் பாராட்டி ஒரு 'விலையுயர்ந்த' அலுமீனிய ஜாடியைப் பரிசளித்தார்கள்.

ஒரு பொருள் கிடைப்பது அரிதாக இருந்தால் அதன் மதிப்பும் விலையும் கூடி விடுகின்றன.

அலுமீனியமும் அந்தக் காலத்தில் கிடைப்பதற்கரிய பொருளாகத்தான் இருந்தது.

மின்னூற்பகுப்பு முறையில் அதை எளிதாகவும் மலிவாகவும் ஏராளமாகவும் உற்பத்தி செய்யத் தொடங்கியவுடன் அதன் மதிப்பும் விலையும் சரிந்து விட்டன.

ரோம் நாட்டு மன்னனை டைபிரியஸிடம் (Tiberius) ஒரு பொற்கொல்லன் ஒரு அலுமீனியத்தகட்டைக் காட்டியதாக வரலாறு கூறுகிறது.

அது வெள்ளியைப் போன்று பளபளப்பாகவும் மிகவும் இலேசானதாகவும் இருந்தது.

அதைச் சாதாரணமான களிமண்ணிலிருந்து கிடைத்த ஒரு பொருளால் செய்ததாக அந்தப் பொற்கொல்லன் கூறினான்.

மன்னன் பார்த்தான். இதே மாதிரி எல்லா மக்களும் களிமண்ணில் இருந்து இவ்வளவு பொலிவு மிக்க ஓர் உலோகத்தை எடுத்து நகை நட்டுக்களைச் செய்து கொள்ளத் தொடங்கி விட்டார்களேயானால் தனது கருவூலத்தில் இருக்கும் தங்கத்துக்கும் வெள்ளிக்கும் மதிப்பில்லாமல் போய்விடும் என்று அரசனுக்குப் பயம் ஏற்பட்டது.

பொற்கொல்லன் மன்னனிடம் பரிசு பெறுவதற்குப் பதிலாகத் தனது தலையை இழக்கும்படியாயிற்று.

இந்தக்கதை மெய்யா, பொய்யா என்று தெரியாது.

ஆனால் அலுமீனியம் அறிமுகமாகி 2,000 ஆண்டு கழித்துத்தான் அதை மலிவாகத் தயாரிக்கும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன என்பது உண்மை.

1886இல் அமெரிக்காவில் சார்ள்ஸ் மார்ட்டின் ஹோல் (Charles Martin Hall) என்பவரும் பிரான்ஸில் போல் டூஸைன்ட் ஹெரூல்ட் (Paul Toussaint Heroult) என்பவரும் தனித்தனியாக அலுமீனியத்தை வர்த்தக ரீதியில் மலிவாக உற்பத்தி செய்யும் முறையைக் கண்டுபிடித்தனர். ★

## மனைவியை சிரிக்க வைக்காத சாப்ளின்

உலகையே சிரிக்க வைத்தவர் சார்ளி சப்ளின்.

அவரின் நூற்றாண்டு விழா இப்பொழுது கொண்டாடப்படுகிறது.

சப்ளினுக்கு நான்கு மனைவிகள்,

அவர்களில் ஒருவர் சப்ளினிடம் இருந்து விவாகரத்துப் பெற்றார்.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவாகரத்து மனுவில் அந்த மனைவி என்ன கூறியிருந்தார் தெரியுமா?

'உலகம் முழுவதையும் நகைச்சுவையில் ஆழ்த்தி, மனம்விட்டு சிரிக்க வைத்த சப்ளின் ஒருமுறையாவது வீட்டில் என்னோடு சிரித்துப் பேசியது கிடையாதே!'—

அழாக்குறையாக இப்படிக் கூறியிருந்தார்.

வீட்டில் மனைவியுடன் சிரிக்காமல் வாழ்ந்து மறைந்த சார்ளி சப்ளின் ஒரு புதுமை மனிதர்தான். ★

## ஒரு விபத்தில் 74 கார்கள் சேதம்

நடந்தது ஒரு விபத்து. சேதமடைந்த கார்களின் எண்ணிக்கை 74.

மேற்கு ஜேர்மனில் நெடுஞ்சாலை ஒன்றில் இந்தப் பயங்கரக் கார் விபத்து ஏற்பட்டது.

ல்டிவுண், ஸ்டட்கார்ட் நகரங்களுக்கு இடையே இந்த விபத்து ஏற்பட்டது.

இதன் காரணமாக 6கிலோ மீற்றர் தூரத்துக்குக் கார்கள் உட்பட பல்வேறு வாகனங்கள் நீண்ட நேரம் வீதியிலேயே நிற்கவேண்டியதாயிற்று.

இப்விபத்தில் ஒருவர் இறந்தார்; 21 பேர் படுகாயமடைந்தனர். ★

## வாத நோய்க்கு அஸ்பிரின் 'கிரீம்'

வாதநோய்க்கு அஸ்பிரின் கிரீம் வந்துள்ளது.

முடக்கு வாதம், தசைவலியால் பாதிக்கப்பட்டவர்கள் அஸ்பிரின் மாத்திரை சாப்பிடுவது வழக்கம்.

மாத்திரை சாப்பிடுவதால் சிலருக்கு வயிற்றில் கோளாறு ஏற்படலாம்.

எனவே அதை நிவர்த்தி செய்யும்வகையில் இப்போது அஸ்பிரின் கிரீம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் மர்ரே பிரிட்ஜ் நகரைச்சேர்ந்த இயான்டில்டால் இந்த கிரீமை தயாரித்திருக்கிறார்.

இந்தக் கிரீமை வலியுள்ள இடத்தில் தடவினால் நிவாரணம் கிடைக்கும். ★

## இறையருளைப் பெற எளிய வழி

ஒருவரை, 'கண்ணை மூடிக்கொள், வாயை மூடிக்கொள், காலாலே நடக்காதே, ஓரிடத்தில் அப்படியே இருந்து பிராணயாமம் பண்ணிக் கொண்டிரு' என்றால் எப்படிச் செய்து கொண்டிருப்பது? எத்தனை பேருக்குச் சாத்தியம்? ஆனால், நமது பெரியோர்கள் இறையருளைப் பெற எல்லாருக்கும் எளிய வழிகளைப் போதித்துள்ளார்கள்.

'வாய்திறந்து நன்றாகப் பேசு, ஆனால் ஆண்டவன் கதையைப் பேசு, காதார சங்கீதத்தைக் கேள், ஆனால் இறைவன் புகழைப்பாடக் கேள். வயிறு நிரம்பச் சாப்பிடு. ஆனால் சாதகமாகச் சாப்பிடாமல், ஆண்டவனின் பிரசாதமாகச் சாப்பிடு. உடம்பு நிறையச் சந்தனம் பூசிக்கொள். ஆனால் இறைவனுடைய அபிஷேக சந்தனத்தைப் பூசிக்கொள். தலை நிறைய மலரை வைத்துக் கொள். ஆனால் இறைவனுக்கு அர்ச்சனை பண்ணி வைத்துக் கொள். நன்றாக நடமாடு. உலாத்து. இறைவனுடைய திருக்கோயிலைப் பிரதிட்சணம் பண்ணி உலாத்து.'

- தொகுப்பு க. கனகராசா

## 8 ஆயிரம் அடி உயரத்தில்

தென் அமெரிக்காவில் உள்ளது சிலி நாடு.

அங்கு அடகாமா பாலைவனப் பிரதேசத்தில் 8 ஆயிரம் அடி உயரமலை ஒன்று உண்டு.

அந்த மலை உச்சியில் உலகிலேயே அதிக நவீன டெலஸ்கோப் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இதன் மூலம் வானிலை ஆராய்ச்சி நிபுணர்கள் பூமியில் இருந்து வெகு தொலைவில் உள்ள கிரகங்கள் பற்றி ஆய்வு நடத்தமுடியும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்,

இந்த டெலஸ்கோப்பில் சக்தி வாய்ந்த கமரா ஒன்றும் பொருத்தப்பட்டு உள்ளது. ★

## ஒரு கோடி பேர் நடத்தும் போராட்டம்!

ஜப்பானில் வழுக்கையை நீக்கப் போராட்டம் நடத்துபவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று தெரியுமா?

வழுக்கையை நீக்க ஒரு கோடியே 60 லட்சம் பேர் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

உயர்பதவிகள் மற்றும் பொறுப்புகளில் இருப்பவர்கள், தலைநிறைய கறுப்புநிற முடியுடன் இளமையாகத் தோன்ற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

## பாலைவனமாக மாறும் இமயமலை அடிவாரம்

உத்தரப் பிரதேசத்தின் வடக்குப் பகுதிகளில் உள்ள இமயமலை அடிவாரப்பகுதிகள் பாலைவனமாக மாறும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக இந்திய விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

அப்பகுதியிலுள்ள நீரூற்றுக்கள் வற்றிக்கொண்டிருக்கின்றன.

காடுகள் அழிக்கப்பட்டுவருகின்றன.

மலைச்சரிவுகளில் 'காடக்ஸ், செடிகள் பரவிவருகின்றன.

இவ்வாறு சுற்றுப்புறச்சூழல் அடியோடு மாறுவதால் அந்தப்பகுதியே பாலைவனமாக மாறக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். ★

## மக்களைப் பெற்ற மகராசிகள்

பதினைந்தாம் நூற்றாண்டில் ஜேர்மனியில் பொன் நகரில் ஒரு பெண் 53 குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்.

அப்பெண்ணுக்கு அதே நகரில் 1938 ஆம் ஆண்டில் ஒரு நினைவுச் சின்னம் நிறுவப்பட்டது.

அண்மையில் அதிகமாகக் குழந்தைகளைப் பெற்றபெண் பிரேஸில் நாட்டில் இருக்கிறாள்.

பதினைந்தாவது வயதில் திருமணமான இந்தப் பெண்ணுக்கு 14 புதல்வர்களும் 24 புதல்விகளும் உள்ளனர்.

ரஷ்யாவில் மாஸ்கோவில் உள்ள வார்ஸி லெவ் என்ற பெண், பிரேஸில் நாட்டுப் பெண்ணுக்கு முன்னதாகவே 69 பிள்ளைகளைப்பெற்று உலக சாதனையை ஏற்படுத்தி இருக்கிறார். ★

## மிகப் பெரிய ஹோட்டல்

சீன நாட்டின் மிகப் பெரிய நகரமான ஷாங்காயில் மிகப் பெரிய நட்சத்திர ஹோட்டல் ஒன்று உண்டு.

உலகத்தில் உள்ள அத்தனை நாட்டு உணவு வகைகளும் இந்த ஹோட்டலில் கிடைப்பது சிறப்பம்சம்.

அதுமட்டுமல்ல, இந்த ஹோட்டலில் ஒரே நேரத்தில் 50 ஆயிரம் பேர் தங்கி உணவு அருந்தலாம்.

எவ்வளவு பெரிய ஹோட்டல் என்று திகைக்கிறீர்களா?

100 கோடிக்கு மேல் மக்கள் வாழும் நாட்டில் வேறு எப்படியான ஹோட்டலைக் கட்டமுடியும்? ★

## சந்திரனில் காலடி வைத்த பன்னிரண்டுவிண்வெளிவீரர்

சந்திரனில் மொத்தம் 12 விண்வெளி வீரர்கள் காலடி வைத்துள்ளனர்.

அனைவரும் அமெரிக்கர்களே.

முதலில் காலடி வைத்தவர்.

1. நீல் ஆம்ஸ்ட்ரோங்

அதன் பின்னர்—

2. மைக்கல் கொலின்ஸ்.

—ஜூலை, 1989; அப்போலோ–11

நீல் ஆம்ஸ்ட்ரோங்குக்கு முன்னர் மனிதர் ஒருவன் சந்திரனில் காலடி வைத்திருக்கிறான் என்று இப்போது சந்தேகம் ஒன்றை சின ஆராய்ச்சியாளர் எழுப்பியுள்ளனர்.)

3. சார்ள்ஸ் கொன்றுட்,

4. அலன் எல். டீன் (அப்போலோ–12, 1969 நவம்பர்)

5. அலன். பி. ஷெப்பர்ட்,

6. எட்கார் டி மிற்செல் (அப்போலோ–14, 1971 ஜனவரி–பெப்ரவரி)

7. டேவிட் ஆர். ஸ்கொட்,

8. ஜேம்ஸ் டி இர்வின் (அப்போலோ–15, 1971 ஜூலை–ஆகஸ்ட்)

9. ஜோன் டபிள்யு. யங்,

10. சார்ள்ஸ் எம். டியூக் (அப்போலோ–16, 1972 ஏப்ரல்)

11. இயூஜின் ஏ. செர்னன்,

12. ஹாரிசன் எச். ஸ்மித் (அப்போலோ–17, 1972 டிசம்பர்.) ★

# குதிரைக்குக் கிடைத்த கௌரவம்

செல்சீ என்ற இடத்தில் உள்ள 'ரோயல் இராணுவ மியூசியம்' என்ற அருங்காட்சியகத்தில் குதிரை ஒன்றின் எலும்புக்கூடு பாதுகாக்கப்படுகிறது.

பொதுமக்கள் பார்வைக்காக அந்த எலும்புக்கூடு வைக்கப்பட்டுள்ளது.

அந்த எலும்புக்கூட்டுக்கு அவ்வளவு முக்கியத்துவம் ஏன் என்று எண்ணுகிறீர்களா?

1800 ஆம் ஆண்டில் நடந்த மாரெங்கோ போரில் நெப்போலியன் கலந்துகொண்டு யுத்தம்செய்தான்.

அப்போது அவர் ஏறிச் சவாரிசெய்த குதிரையின் எலும்புக்கூட்டைத்தான் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

மாவீரன் ஒருவனை முதுகில் சுமந்து காயம்கண்ட காரணத்தால் ஒரு குதிரையின் எலும்புக்கூடு இன்று உலகத்தின் தரிசனத்துக்கு உரியதாய் விளங்குகிறது. ★

# மணலில் எழுதிய கவிதை

பாத்ரே ஜோஸ் என்ற கிறிஸ்தவ பாதிரியார் பிரேசிலில் வாழ்ந்து வந்தார்.

ஒருமுறை ஆதிவாசிகளிடையே மதத்தைப் பரப்பச் சென்றபோது அவர்களால் சிறைப்படுத்தப்பட்டார்.

கடற்கரை ஓரமாக ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் அவர் போகக்கூடாது என்று ஆதிவாசிகள் தலைவன் உத்தரவு போட்டான். என்றாலும் ஜோஸ் மனம் தளரவில்லை.

அவர் கைவிரல்களால் கடற்கரை மணலில் கவிதைகள் எழுதுவார்.

அதை அப்படியே மனப்பாடம் செய்துவிட்டு அடுத்த கவிதையை எழுதுவார்.

இப்படியே அவர் 5,786 பாடல்கள் எழுதினார். மத நூலையே மணலில் எழுதினார்.

பின்னர் அவர் விடுதலை ஆனதும் தான் மனப்பாடம் செய்ததை காகிதத்தில் எழுதினார்.

1533 முதல் 1577 வரை வாழ்ந்த அவர் தனது ஆயுள் காலத்தில் ஆர்ஜென்டினா, உருகுவே, பிரேஸில் ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து 20 லட்சம் பேரை கிறிஸ்தவ மதத்தை தழுவச் செய்தார். ஆயிரம் தேவாலயங்களைக் கட்டிமுடித்தார். ★

# எரிமலைகளைச் சுற்றி 36 கோடி மக்கள்

உலகில் எவ்வளவோ எரிமலைகள் உள்ளன.

இவற்றை அனல்கக்கும் எரிமலைகள், அடங்கிக் கிடக்கும் எரிமலைகள், அவிந்துபோன எரிமலைகள் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

ஆனால் இதற்கு விஞ்ஞான அடிப்படை எதுவும் இல்லை என்று ஒரு நிபுணர் கூறுகிறார்.

அந்த நிபுணர் பெயர் திரு. ரொபெட் டில்லிங்.

எரிமலை ஒன்று பல நூறு அல்லது பல ஆயிரம் ஆண்டுகள் அடங்கிக் கிடந்து பிறகு திடீரென என்றாவது ஒருநாள் நெருப்பைக் கக்க ஆரம்பிக்கலாம்.

அவிந்து போனதாகக் கருதப்படுகின்ற எரிமலைகளால் தான் கடந்த காலத்தில் மிக விபரீதமான நாசம் ஏற்பட்டுள்ளது.

அவிந்து போனதாகக் கருதப்பட்ட வெசுவியஸ் எரிமலை கி. பி. 79 ஆம் ஆண்டில் பயங்கரமாக நெருப்பைக் கக்கியது.

ஓர் எரிமலை எத்தனை காலம் செயலற்று இருக்கிறதோ அந்த அளவுக்குப் பின்னர் மிகப் பயங்கரமாக வெடிக்கும் வாய்ப்பு உண்டு.

அப்படிப்பட்ட எரிமலையில் இருந்து வெளிப்படுகின்ற நெருப்பும், புகையும் அதனால் ஏற்படும் நாசமும் அதிக அளவில் இருக்கும்.

உலகில் எரிமலைகளுக்கு அருகில் அல்லது அவற்றைச் சுற்றியுள்ள ஆபத்தான பிராந்தியங்களில் சுமார் 36 கோடி மக்கள் வசிக்கின்றனர்.

இந்த எரிமலைகளில் பெரும்பாலானவை பசுபிக் சமுத்திரத்தைச் சுற்றியமைந்துள்ள 'நெருப்பு வளையம்' எனப்படுகின்ற பிராந்தியங்களில் அமைந்த நாடுகளில் உள்ளன.

# பாரதிக்கு ஆத்திர மூட்டிய பாடல்

ஒரு சமயம் பாரதியாரோடு பாரதிதாஸன் ஒரு நாடகத்தைப் பார்க்கப் போயிருந்தார்.

அப்போது நடந்த சுவையான நிகழ்ச்சி ஒன்றை பாரதிதாஸன் கவிதைவடிவில் எழுதியிருந்தார்.

விவரம் வருமாறு;

நாடகத்தில் ஓர் உருக்கமான காட்சி. நச்சு கலந்த பானத்தைப் பருகிவிடும் ஒருவர், அந்த வேதனை தாளாது, சில வசனங்களைப் பேசுவதுடன் பாடலும் பாட ஆரம்பித்தார்.

'ஐயோ தலைசுற்றுகிறதே, கண்களில் இருள் கௌவுதே, நெஞ்சை அடைக்குதே நிற்க முடியாமல் காலும் தள்ளாடுதே' என்று அவர் பாடிக் கொண்டிருந்தார்.

நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பாரதியாருக்கு இதற்குமேல் பொறுமையாக அமர்ந்திருக்கமுடியவில்லை.

திடீரென்று எழுந்து பாடிக் கொண்டிருந்த நடிகரைப் பார்த்து,

'ஓய்' தலை சுற்றி, இருள் கௌவி நெஞ்சை அடைத்தால் பேசாமல்படும்; இந்த நேரத்தில் பாட்டு ஒரு கேடா? —என்று பாரதியார் ஆவேசமாகக் கேட்டார்.

ரசிகர்கள் பாரதியாரின் கேள்வியைக் கேட்டு நகைத்தனர். ★

பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்

## விலங்கியல்

விலங்குகளின் உடலமைப்பின் தன்மைகளில் பயன்பட்டிருக்கும் பல்வகை நுணுக்கங்கள் என்றுமே சாதாரண மனிதனின் ஏன் விலங்கியல வல்லுநர்களின் கவனத்தை ஈர்க்கின்றன.

விலங்குகள் தங்கள் செயல்களில் பயன்படுத்தும் இரசாயனவியல் இயக்கங்களும் மிக விசித்திரமானவையே.

சமீபகாலமாக பல நுண்ணிய சாதனங்களின் உதவியால், விலங்கின் அமைப்பு, அதன் செயற்பாட்டியல் ஆகியவை நம்மால் நன்ருக அறிந்துகொள்ளப்படுகின்றன.

உயிரியலில் பலவகைப்பிரிவுகள் உள்ளன. முதலாவதாக தாவரங்கள், விலங்குகள் என்ற இரண்டுவகை உயிரினங்கள் இருப்பதை நாம் அறிந்துகொள்வோம்.

தாவரங்களைப்பற்றி தெரிந்துகொள்ள தாவரவியலும், விலங்குகளைப்பற்றித்தெரிந்துகொள்ள விலங்கியலும் உள்ளன. இவற்றிலும் பல உட்பிரிவுகளும் உள்ளன.

உதாரணமாக, பறவைகளைப்பற்றி மட்டும் அறிய பறவையியல், பற்றீரியா பற்றி அறிந்துகொள்ள பற்றீரியா இயல் ஆகியனவற்றைச் சொல்லலாம். மேலும் ஒவ்வொரு கண்ணேட்டத்திலும் பிரிவுகள் உண்டாகியிருக்கின்றது.

உடல் அமைப்பைப்பற்றி அறியஉடற்பாட்டியல்,செயல்முறைகளை அறிய செயற்பாட்டியல், உடல் உள் அமைப்பை அறிய உடற்கூறியல் செல்களைப்பற்றி அறிய செல்லியல் போன்ற பிரிவுகள் உள்ளன. இப்படிப்பல பிரிவுகள் உள்ள போதிலும் அடிப்படையில் எல்லாம் உயிரியல் சம்பந்தமானவையே.

உயிரியலை நாம் ஏன் படிக்கவேண்டும் என்ருல்;

1. உயிர் சம்பந்தமான பல பிரச்சினைகளை நாம் இன்னமும் புரிந்துகொள்ளவில்லை. ஆகவே அறிவுள்ள ஒருவனுக்கு உயிரியல் ஒரு சவாலாக அமைந்துள்ளது. சூழ்நிலையும் அமைப்பும் சேர்ந்து உருவானதுதான் மனித இனம். மற்ற உயிர்களைப் படிப்பதன்மூலம் பல அரிய உண்மைகளைக் கண்டறியலாம்.

2. நமது உணவு, உடை, மருந்து போன்றவற்றிற்கு விலங்கை நம்பி இருப்பதால் அதை அறியவேண்டும்.

3. மருத்துவம், விவசாயம். சுகாதாரம் போன்றவற்றிற்கு உயிரியல் முன்னேடியாக உள்ளது.

4. சமூக நலனுக்கும், உடல் நலனுக்கும் உயிரியல் முன் இடம் பிடிக்கிறது.

5. சிலவிலங்கினம் மனிதனுக்குத் தீங்கை விளைவிக்கிறது. ஆகையால் வித்தியாசம் கண்டு அவற்றை அகற்றிவிட உயிரியல் உதவும்.

இவற்றைவிட உயிரியல் தெரிந்த ஒரு மாணவன், 'கலை நுணுக்கத்தையும் அழகையும் ரசிக்கத் தெரிந்தவனுகவும், பிறரை தன்போல் மதிக்கத்தெரிந்தவனுகவும் மிளிர்கிருன்' என்று தாமஷ் ஹக்ஸிலி சொல்கிருர். மேலே குறிப்பிட்ட சில பிரிவுகள் அன்றி உயிரியல் மற்றும் பல அணுகு முறைகள் உள்ளன.

(1) வர்ணனைமுறை. இது உயிரினங்களைப்பிரித்துக் கண்டறிதல்.

(2) சோதனைமுறை. இது கடந்த 75 ஆண்டுகளாக மிகவும் முன்னேறியுள்ளது. உயிரியல் ஆராய்ச்சி மிகசுலபம் அல்ல, ஏனெனில் அவற்றில் அதிகமாக உள்ளன. ஒரு சோதனையில், ஒரே வயது, பரிமாணம், சூழ்நிலை உள்ள இரண்டு நல்லஉடல் நிலையுடைய உயிரிகள் வெவ்வேறுவிதமாக செயற்படுவதைக் காணலாம்.

உதாரணமாக ஒரு மருந்து ஒருவரின் வியாதிக்கு பயனுள்ளதாகவும், மற்ருெருவரின் அதே வியாதிக்கு பயனற்றதாகவும் ஆகலாம். இதனுல்தான் புற்றுநோய் போன்ற சில நோய்களுக்கு இன்னமும் சரியான சிகிச்சை இல்லை. உயிரியல் செயல்களை விளக்க கணிதமும் பயன்படுகிறது. அதாவது (X-ray) X- கதிர் ஆராய்ச்சியில் கெய்யர் (Geigar) கருவியும் உபயோகிக்க உள்ளன.

உயிரினங்கள், தாவரமாயினும் சரி, விலங்கினமாயினும் சரி ஒரு பொதுவான புரோட்டோபிளாசம்(Protoplasm)என்ற பொருளால் ஆனது. இந்த உயிருள்ளபொருள் 1840 ஆம் ஆண்டு பர்கின்ஜி (Purkinge) என்பவரால் புரோட்டோபிளாஸம் என முதலில் அழைக்கப்பட்டது.

உயிரினங்கள் புரோட்டோபிளாஸத்தால் ஆனவை தான் என்ருலும் உயிரிகள் தனித்தன்மை படைத்தவை. முதலில் புரோட்டோபிளாஸம் ஒரே இரசாயனவியல் பொருளாக மதிக்கப்பட்டாலும் பிறகு ஆராய்ச்சிகள் மூலம் அது செல்லுக்குச் செல் உயிரிக்கு உயிர் மாறுபட்டிருக்கக்கூடும் என்பது தெளிவாகியது.

தாவர, விலங்கு உயிரிகளில் புரோட்டோபிளாஸம் இருப்பதால் புரோட்டோ பிளாஸத்தின் குணதிசயங்களை நாம் விவரிக்கிருேம். உயிர் இயங்கிக்கொண்டிருக்கும்போதே உண்மைகளைக் கண்டறியக்கூடிய நுண்கருவிகளும் முறைகளும் ஏற்பட்டுவிட்டதால், புரோட்டோ பிளாஸத்தின் உயிரியல் இயல்பு, பௌதீகவியல் இயல்பு. இரசாயனவியல் இயல்பு ஆகியவற்றை நாம் கண்டறிய முடிகிறது. ஆனுல் மூன்று இயல்புகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகள்.

- ஜனுரவி

# கணிதம் - அறிவியலின் ராணி

கணிதத்தை 'அறிவியலின் ராணி' என விஞ்ஞானிகளும் கணிதமேதைகளும் அழைப்பதை நம்மில் பலர் அறிவோம்.

அவர்கள் அவ்வாறு அழைப்பதன் காரணம் சிலருக்கு மட்டுமே தெரிந்திருக்கும். அக்கூற்றை மெய்பிக்கும் ஒரு சில நிகழ்ச்சிகளை இக்கட்டுரையில் காண்போம்.

பேராசிரியர் கே.எஸ்.கிருஷ்ணன், ஒரு சொற்பொழிவில் கூறுகையில் 'கணிதத்தின் அழகு, இயற்கையில் நாம் காணும் பல்வேறு சம்பவங்களையும் மிகத் துல்லியமாக விளக்கும் திறனிலேதான் உள்ளது' என்ருர்.

**பிராஹே**

தொலைநோக்கி இல்லாத காலத்திலேயே மிகத்துல்லியமாக வானியல் குறிப்பெடுத்தவர் டைக்கோ பிராஹே (Tyco Brahe) அவரின் மாணவரான கெப்ளர் (Kepler) அக்குறிப்புக்களை ஆராய்ந்து அவற்றின் கணிதவியல் தொடர்புகளையே 'கோளியக்க விதிகள்' (Laws ot Planetary Motion) என வெளியிட்டார்.

பின்னர் நியூட்டன் (Newton) இயக்கவியல் விதிகளைத் தொடர்ந்து புவியீர்ப்பு விசையைப்பற்றி ஆராய்கையில், மரத்தில் இருந்துவிழும் ஆப்பிளின்மேல் செயற்படும் புவியீர்ப்பு விசையைப்போன்றே, சூரியனைச்சுற்றிவரும் கோள்களின்மீது, சூரியனின் ஈர்ப்பு விசை செயற்படுவதைக் கண்டறிந்தார்.

இக்கண்டுபிடிப்பையும், வட்டப்பாதை இயக்கத் தத்துவங்களையும் பயன்படுத்தி, நியூட்டன் 'கோளியக்கவிதிகளை' நிரூபித்தார். கெப்ளர் வெறும் கணிதவியல் தொடர்புகளை மட்டுமே பயன்படுத்திஞர்.

விசித்திரமானதொரு நிகழ்ச்சிசென்ற நூற்ருண்டின் இறுதியில் ஏற்பட்டது.

ஜெர்மன் பள்ளி ஒன்றில் கணித ஆசிரியராக வேலை பார்த்து வந்த பால்மர் (Barmer) என்பவருக்கு எண்களின்மீது அபாரமோகம்.

அவர் ஒருமுறை தன் நண்பனிடம் பேசிக்கொண்டிருக்கையில், தான் புதிதாக அடைந்துள்ள திறனைப்பற்றி குறிப்பிட்டார்.

அதாவது எந்த நான்கு எண்களுக்கும் இடையேயும் ஒருமுறையான கணிதத் தொடர்பை தம்மால் கண்டு பிடித்துத்தரமுடியும் என்ருர்.

இதைக் கேட்ட அந்த நண்பர், தன்னிடமிருந்த ஹைட்ரஜன் நிறமாலையில் (Hydrogen Spectrum) காணப்படும். ஒளிக்கற்றைகளின் ஒளி நீளத்தைக் கொடுத்து, பால்மரின் திறனைக் காட்டச்சொன்னுர்.

பால்மர், தாம் சொன்னபடியே தொடர்பைக் கண்டு பிடித்தார். அதுவே தற்பொழுது பால்மர் பார்முலா (Balmers Fomula) என்றழைக்கப்படுகிறது. கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகள் கழித்து நீல்ஸ்போர்(Neils Bohr) தமது அணுக்கோட்பாடுகள், எந்த அளவு சக்தி வாய்ந்தவையாக உள்ளன என்று பார்க்கையில், தமது கோட்பாடுகளிலிருந்து பார்மர்பார்முலாவை அடைய முடியுமெனக்கண்டார், கெப்ளர் போன்றே, பால்மரும் கணிதவியல் தொடர்பினைமட்டுமே கண்டார்.

ஆனுல் அதே சமன்பாட்டை இயற்பியல் தத்துவங்களின் மூலம் பெறமுடியுமென்பதை நீல்ஸ்போர் பின்னரே நிரூபித்தார்.

இன்று நாம் வாழும் (கம்பியூட்டர்) பொறி உலகின், அடிப்படையான எண் மின்னணுவியல் (Digital Electronics) சென்ற நூற்ருண்டில் வாழ்ந்த ரொபர்ட் பூல் (Robert Boole) என்னும் ஸ்கொட்லாந்து கணிதமேதை உருவாக்கிய இரட்டை எண் அல் ஜீப்ராவை சார்ந்துள்ளது.

அதை அவர் கணித அறிஞர்கள் முன்பாக வெளியிட்ட போது, எளிதில் விளங்கக்கூடிய தசம எண் கணிதத்தை விடுத்து, அழியும் ஒன்றையும் மட்டுமேகொண்ட இதை முட்டாள்கள்தான் பயன்படுத்துவர் என எள்ளி நகையாடப்பட்டார்.

ஆனுல் இன்றோ சாதாரண கணக்கிடும் கருவி முதல் வல்லமை படைத்த மிகச்சிறந்த கணணி (கம்பியூட்டர்)பொறி வரை எல்லாமே இரட்டை எண் கணித முறையில்தான் இயங்குகின்றன.

ஆக கணிதத்தின் துணை இன்றி, இயற்கையின் பண்புகளை மிகத் துல்லியமாகக் குறிக்கமுடியாது.

இந்தக்கோணத்தில் பார்க்கையில் 'கணிதம் அறிவியலின் ராணி' என்னும் கூற்று ஓர் அடிப்படை உண்மையாகவே புலப்படுகிறது. ★

- நா. இரா. முரளி -

# பெற்ருேர் புரிந்து கொள்ள வேண்டிய குழந்தைகளின் மன உணர்வுகள்

என் பிள்ளை என்னை வெறுக்கிருன்...!

என்பிள்ளை என் பேச்சைக் கேட்கமாட்டேன் என்கிருன்...!

என்பிள்ளை என்னை மதிப்பதில்லை...!

இப்படிப் புலம்புகிருர்கள் பெற்றவர்கள்...! இதில் எவ்வளவுதூரம் உண்மை இருக்கிறது...?

நாம் வாழும் வாழ்க்கையைத் தான் நம் பிள்ளைகள் வாழவேண்டும், நாம் சிந்திப்பது போல்தான் சிந்திக்க வேண்டும் என்று பெற்ருேர் எதிர்பார்ப்பது தான் காரணம்...!

ஏமாற்றம் வெறுப்பாக எதிரொலிக்கிறது...!

இன்றைய பெற்ருேர்கள் நேற்றைய இளைஞர்கள் அவர்கள் சிறு சிறு உரிமைகளைப் பெற, தங்கள் பெற்ருேர்களிடம் போராடியிருக்கிருர்கள்.

அந்த உரிமைகள் இன்றைய கால இளைஞர்களுக்குத் தானுகவே கிடைக்கின்றன, இதைத் தாங்கிக்கொள்ள தாய் தகப்பனுல் முடிவதில்லை.

உங்கள் பிள்ளை ஒரு வேலை செய்தால், அதில் தவறு செய்து அவனே திருந்த இடம் கொடுங்கள். 'அப்படிச் செய்யக்கூடாது, இப்படிச் செய்யவேண்டும்' என்று அவனது ஆர்வத்தில் மண்ணைப்போடாதீர்கள்...!

**அறிஞர் கூறுவது**

ஜான்வாக் என்ற அறிஞரைப் பார்த்து, இந்தப் பையன்களை எப்படித் திருத்துவது..? என்று பெற்ருேர்கள் கேட்டார்கள்.

'பெரியவர்களை நடத்துவது போன்று அவர்களை நடத்துங்கள். அவர்கள் சீக்கிரமே பெரியவர்களாகிவிடுவார்கள்' என்ருர் அந்தப் பெரியவர்.

முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னுல் அந்த மூதறிஞர் இப்படிச் சொன்னுர். எந்தப் பெற்ருேர் கேட்டார்கள்...? இன்னும் தங்கள் பிள்ளைகளைப் பச்சைக் குழந்தைகளாக நடத்துகிருர்களே...?

இந்தப் பெற்ருேர்கள் இனியாவது கீழ்க்கண்ட அம்சங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

★ பெற்ருேர்கள் என்ற வகையில் நாம் சரியாகத் தான் நடக்கிருேமோ என்று அடிக்கடி நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

★ கருத்து வேற்றுமைக்கு இடம் கொடுங்கள். மகன் மறுத்துப்பேசட்டும், மௌனமாக இருப்பதைவிட இது மேல்...! குடும்பத்துக்கும் நல்லது.

★ உங்கள் வாழ்க்கை முறையை பிள்ளைகள் கிண்டல் செய்தால்கூட நீங்கள் மாற்றிக்கொள்ளவேண்டாம். உங்கள் கொள்கையில் நீங்கள் உறுதியாக இருக்கிறீர்களா என்று தான் அவர்கள் கவனிக்கிருர்கள்.

★ தற்காலிக உணர்வுகள் நிரந்தரமாக இருக்குமென எண்ணுதீர்கள். மாறும், வேகம் தணியும்.

★ பயம் இல்லாததால் தான் இந்தக்காலத்து இளைஞர்கள் கெட்டுப்போகிருர்கள் என்று கண்மூடித்தனமாகக் கோபப்படாதீர்கள். அடக்குமுறை அதற்குப் பரிகாரம் அல்ல. அது மேலும் முரட்டுத்தனத்தையே வளர்க்கும்.

கதவைப் படீரென்று சாத்துவதோ, கத்திப்பேசுவதோ கூடாது. பிடிவாதம் பிடிக்கும் குழந்தையைப் பொறுமையைக் கடைப்பிடித்துத்தான் வழிக்குக் கொண்டுவர முடியும்.

எதிர்காலம் எப்பொழுதும் எதிர்காலமாக இராது. இறந்தகாலமாகும். இறந்த காலம் என்பது ஒரு காலத்தில் இறந்த காலமாகவே இருந்ததுதான்.

எனவே பெற்ருேர் பிள்ளைகளை சபிப்பதும், பிள்ளைகள் பெற்ருேர்களை வெறுப்பதும் சரியாகாது. இதில் விவேகத்துடன் நடந்து விட்டுக் கொடுக்கவேண்டியவர்கள் பெற்ருேர்களே.

**குழந்தைகளைத் திட்டாதீர்கள்**

பெற்ருேர்கள் கோபத்தில் இருக்கும் பொழுது தங்கள் குழந்தைகளைக் கண்டபடி திட்டுகிருர்கள்.

கையாலாகாதவர்கள் முசுடு, பிசாசு என்றெல்லாம் வெளிமனிதர்களுக்கு எதிரிலேயே கூறி விடுகிருர்கள்.

இப்படிச்செய்வது குழந்தைகளை அடித்துக் கொடுமைப் படுத்திஞல் எந்த அளவு அவர்களுக்குத் தீமை உண்டாகுமோ அதற்கு ஈடான தீமையை விளைவிக்கக் கூடியது.

திட்டுவதும் சபிப்பதும் மிக அசிங்கமான மனப்போக்கைக் கட்டவிழ்த்து விட்டு, இளம் பிள்ளைகளின் உணர்வுகளைப் புண்படுத்துகின்றன.

இதனுல் குழந்தைகள் மன உணர்வுகளில் காயம் பட்டு அகலாத வடுவுடையவர்களாய், அவர்களது சுய கௌரவத்தைப் பறிகொடுத்தவர்களாய் மாறிவிடுகிருர்கள்.

இவை மட்டுமல்ல, பெற்ருேர் திட்டுவதை வழக்கமாகக் கொண்டிருந்தால் பிள்ளைகளும் அதே வார்த்தைகளைத் திருப்பி உபயோகிப்பார்கள். இது பெற்ருேர்களுக்கு எதிராகவும் திரும்புவதுண்டு. பள்ளிவரையும் செல்வதுண்டு.

தாயார் மகளை ''மடச்சி'' என்று சொன்னுல், மகளும் இதையே காப்பியடித்து தனது தாயை ''மடச்சி'' என்பாள்.

தாயார் இப்படிச் சொன்னதற்காக மகளை அடிப்பாள். ஆனுல் மகள் இப்படிச் சொல்வதற்குப் பெற்ருேர்களாகிய தாங்கள் தான் காரணம் என்பதை உணருவதில்லை.

இப்படி மன உணர்வுகளில் புண்படுத்தப்பட்ட பிள்ளைகளுக்கு மனவியல் ரீதியில் உதவி தேவை. ★

# அன்ருட வாழ்வில்....

**முள் குத்திஞல்...**

காலில் முள் குத்திவிட்டால் சுடுகடுப்பு இருந்து கொண்டே இருக்கும். அடுத்தநாள் வலியும் உண்டாகும்.

ஒரு காய்ந்த மிளகாயையும் சிறிதளவு உப்பையும் நல்லெண்ணெயில் வறுத்து எடுத்து, இளம் சூட்டுடன் முள் குத்திய இடத்தில் ஒத்தடம் கொடுக்கவேண்டும். வலியும் பறந்துவிடும்.

**வெள்ளரிக்காய்**

தினசரி வெள்ளரிக்காய் சாப்பிட்டு வந்தால் உடல் இளைக்கும். மண்டையில் நீர் கோத்து அவஸ்தைப்படுகிறவர்கள் வெள்ளரிக்காய் சாப்பிட்டால் சிறந்த பலன் கிடைக்கும்.

**உப்பு அதிகமாஞல் ,,**

குழம்பு, கறிகளில் உப்பு அதிகமாகப் போட்டுவிட்டீர்களா...? பப்பாளிக்காயைத் துண்டுகளாக நறுக்கிக் குழம்பில் போட்டு விடுங்கள். அதிகமான உப்பைப் பப்பாளிக் காய்த்துண்டு உறிஞ்சி விடும்.

**ஒட்டாமல் இருக்க...**

சேமியா, நூடில்ஸ் இவற்றை வேகவைக்கும் போது ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொண்டு விடும்.

இப்படி ஒட்டாமல் இருக்கத் தண்ணீரில் ஒரு டேபிள் ஸ்பூன் எண்ணெய் விட்டு வேகவையுங்கள். ★

**பாலுண்ணி உதிர...**

குழந்தைகளின் முகத்தில் பாலுண்ணி தோன்றியதும் வெங்காயத்தை வெட்டி அதன் மேல் தேய்த்து விட்டால் இரண்டு மூன்று தினங்களில் உதிர்ந்து விடும்.

— எஸ். கிருஷ்ணன்




# பாலைவனங்கள் எவ்வாறு உருவாகின்றன?

பாலைவனங்கள் எனப்படும் நிலப்பகுதியைப் பற்றி நாம் அறிவோம். பாலைவனப் பிரதேசங்களில் நீர் மிகவும் அரிது. எங்கு நோக்கினும் கடலலை போன்று மணற்பரப்பே தென்படும். பாலைவனத்தில் புழுதி பறக்கும் புயல் காற்று வீசுவது இயல்பு.

பாலைவனங்கள் உருவாகுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. காற்று ஒரே திசையில் பயணம் செய்யும்போது அதிலுள்ள ஈரப்பதன் வெப்பத்திஞல் மறைந்து விடுகின்றன.

இந்த உலர்ந்த காற்று தொடர்ந்து பயணம் செய்யும் கால் அப்பகுதியிலுள்ள மண்ணின் ஈரப்பதத்தையும் காய வைத்து விடுகிறது.

ஈரப்பதமின்றி தாவரங்களும் விரைவில் காய்ந்து போய் விடுகின்றன. மண் தனது இயல்பான உருவத்தை இழந்து மணலாக மாறுகிறது. இப்படி ஒரு குறிப்பிட்ட பகுதி பாலைவனமாக மாறுகிறது.

வெப்பமும், வரட்சியும் மிகுந்த பாலைவனங்கள் பூமத்தியரேகைக்கு அருகில் காணப்படுகின்றன. வெப்ப மிகுதியால் இப்பகுதியிலுள்ள மண் ஈரப்பதமின்றி காய்ந்து விட்டதே இதற்குக் காரணம்.

ஆனுல் பூமத்திய ரேகையிலிருந்து தொலைவிலும் பாலைவனங்கள் காணப்படுகின்றன. கடலில் இருந்து வரும் ஈரப்பதமுள்ள காற்றை மற்றப் பகுதிகளுக்குப் போக விடாமல் மலைப்பிரதேசங்கள் தடுத்து விட்டால் மலைக்கு முன்பகுதியில் மட்டுமே மழை பெய்யும். மலைக்கு அப்பால் உள்ள பிரதேசம் மழையின்றி பாலைவனமாக மாறும்.




வட ஆபிரிக்காவிலுள்ள ஸஹாரா பாலைவனம்தான் உலகிலேயே மிகப்பெரிது. இதுகிழக்கில் இருந்து மேற்கே 5120 கி. மீ. (3200 மைல்) நீளமும், வடக்கில் இருந்து தெற்காக 1280 லிருந்து 2240 கி.மீ. (800 முதல் 1400 மைல்) அகலமும் கொண்டது.

இதன் மொத்தப்பரப்பளவு 83 . 2 லட்சம் சதுர கிலோ மீற்றர். அதாவது 33. 5 லட்சம் சதுரமைல்.

பாலைவனப் பிரதேசங்களில் குறிப்பிட்ட சில மரஞ்செடிகளும், மிருகங்களுமே உயிர் வாழ முடியும்.

காக்டஸ் போன்ற செடியினங்களும் புதர்ச்செடிகளுமே இங்கு வளரும். சில வகை ஆந்தைகளும், பல்லியினங்களையும் ஓநாய்கள், எலிகள் முதலியவற்றையும் பாலைவனங்களில் காணலாம். ★

# மூட நண்பன்

ஓர் ஊரிலே ஒரு குடியானவன் இருந்தான். அவன் பெயர் காடன்.

தன் செல்லப்பிராணியாக அவன் ஒரு குரங்கை வளர்த்து வந்தான். அவன் செல்லும் இடமெல்லாம் அதுவும் போகும்.

ஒருநாள் வேட்டையாடச் சென்றபோது குரங்கும் சென்றது. மான் ஒன்று ஓடுவதைக் கண்ட காடன், அதனைத்துரத்திச்சென்று வாளால் வெட்டிக்கொன்ருன்.

பின் அதைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு நடந்தான். களைப்பு மேலிட ஒரு மரத்தடிசென்று அமர்ந்தான். அப்படியே உறங்கியும் விட்டான்.

குரங்கும் அருகில்இருந்தது. காடன் கழுத்தில் ஒரு 'ஈ' உட்கார்ந்தது. அதைப் பார்த்த குரங்குக்குக் கடும் கோபம் வந்தது.

அவனது வாளை எடுத்து ஈயைக் குறிபார்த்து ஓங்கி வெட்டியது. ஈ பறந்து தப்பியது. ஆனுல் காடன் உயிர் இழந்தான்.

இ. ஜீவாநந்தன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## அறிவியல் வினு - விடை

? இரவு நேர அமைதியில் உறங்கும் போது காதை பூமியின் பக்கம் வைத்துப் படுத்திருந்தால் தலையணை வழயாகப் பூமி அதிர்வது போன்ற பிரமை ஏற்படுகிறது இது ஏன்?

● காதுக்குள் இருக்கும் ரத்தக்குழாய்களில் ரத்தம் ஓடுவதுதான் பூமி அதிர்வது போன்ற பிரமையை உண்டாக்குகிறது. ★

# மனிதா! இது சரிதானு?

கிள்ளை மொழியில் கதைபேசும்
கிளியே கொவ்வைப் பழம் தருவேன்
பிள்ளைத் தமிழில் ஒரு பாடல்
பாடக் கேட்டு மகிழ்ந்திடுவோம்!

பட்டுச் சிறகை விரித்தழகாய்ப்
பறந்து செல்லும் தத்தம்மா
கிட்ட வந்து உன்கழுத்தில்
கிடக்கும் ஆரத்தைத் தா அம்மா!

கீச்சுக் குரலில் நீ என்ன
கேட்கின்ருய் சொல் கிளியக்கா
பேச்சில் கோபம் தெறிக்கிறதே
பெரிதோர் விஞவும் தொனிக்கிறதே?

உரிமைக் காகப் போராடும்
மனிதா உன்னைக் கேட்கின்றேன்
என்னை மட்டும் கூண்டுள்ளே
அடைத்து மகிழ்தல் சரியாமோ?

- நெடுந்தீவு லக்ஸ்மன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே ஒரு மாற்றத்துடன் வெளியான 'ஒரே ஒரு கிராமத்திலே'- தமிழ்ப்படம்

'ஒரே ஒரு கிராமத்திலே' தமிழ்ப்படம் ஒரே ஒரு மாற்றத்துடன் இந்தியாவில் திரையிடப்பட்டுள்ளது.

தேசிய விருது பெற்ற இந்தப்படம் திரைக்கு வருவதற்குப் பல சிக்கல்கள் ஏற்பட்டன.

திரைக்குப் பின்னுல் இடம் பெற்ற பல சம்பவங்கள் காரணமாகப் படம் திரையிடப்படுவது தாமதமானது.

பிற்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் அரசு சலுகைகளை வசதியுள்ள சமூகத்தவர் பயன்படுத்துவதைச் சுட்டிக் காட்டுவதாகப் படத்தின் கதை அமைந்துள்ளது.

அப்படி அச்சலுகையைப் பயன்படுத்தி உத்தியோகம் பெற்ற ஒருவரை நீதிமன்றம் விடுதலை செய்து விடுகிறது.

இதை எதிர்த்து பிற்பட்டோர் நலன் பேணும் அமைப்பு ஒன்று படத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோரி வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கு விசாரணை மாநில நீதிமன்றம் தொடக்கம் புதுடில்லி உயர் நீதிமன்றம் வரை நடைபெற்றது.

இறுதியில் ஒரு காட்சியையும் வெட்டாமல் படத்தைத் திரையிட அதன் தயாரிப்பு நிறுவனமான 'ஏரீஸ் என்டர்பிரைஸஸுக்கு அனுமதி வழங்கியது, உயர் நீதிமன்றம்.

சமூகத்தின் ஒரு பிரிவைத் தாழ்த்திக் காட்டுவதாகக் கூறிப் படத்தைத் தடை செய்ய வேண்டும் என்று கோரியவர்கள், உயர்நீதி மன்றத் தீர்ப்பை அடுத்து படத் தயாரிப்பாளரைச் சந்தித்தனர்.

தயாரிப்பாளர் தனது நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் வெளிப்படுத்தியதையும் படம் சம்பந்தமாக நீதிமன்றத் தீர்ப்பை மதிப்பதாகவும் கூறிய அவர்கள், படத்தில் சில கட்டங்களில் சிறிய திருத்தங்களைச் செய்யும்படி தயாரிப்பாளரிடம் விண்ணப்பித்தனர்.

தயாரிப்பாளரும் அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்.

படத்தின் முடிவில் சாதி பற்றி முடிவில் பொய்த்தகவல் கொடுத்து சிவில் சேவை அதிகாரியாகப் பதவி பெற்ற பிராமணப் பெண்ணை நீதிமன்றம் விசாரணையின் பின் விடுதலை செய்வதாக முதலில் காட்டப்பட்டிருந்தது.

ஆனல் இப்போது அக்காட்சியை வெட்டி விட்டு, பொய் சர்டிபிக்கட் சமர்ப்பித்த குற்றச் சாட்டுக்காக அப் பெண்ணை நீதி மன்றம் சிறைக்கு அனுப்புவதான காட்சி சேர்க்கப்பட்டிருக்கிறது.

படத்தின் கதை இதுதான்:

ஒரு பிராமணப் பெண் தனது குடும்ப நண்பரான தாசில்தார் ஒருவரின் உதவியுடன் சாதி பற்றி பொய்த் தகவல் கொண்ட சர்டிபிக்கட்டைப் பெற்று ஐ. ஏ. எஸ். அதிகாரியாக நியமனம் பெறுகிருர்.

அந்தப் பெண் அதிகாரி தனது தன்னலங் கருதாப் பணியால் கிராம மக்களின் அன்புக்குப் பாத்திரமாகிருர்.

தாசில்தாரின் மைத்துனர் (வினு சக்கரவர்த்தி) ஒரு குடிகாரர். அவருக்குப் பெண் அதிகாரி (லட்சுமி) யின் பழைய கதை தெரிந்திருந்தது.

காயத்ரி தான் கருப்பாயி ஆக மாறியதையும், அலுவலகத்தில் தலைமை எழுதுவினைஞர். (பூர்ணம் விசுவநாதன்)க்கும் இடையேயான தொடர்பையும் காட்டிப் பெண் அதிகாரியை பிளாக்மெயில் செய்கிருர் தாசில்தாரின் மைத்துனர்.

அவர் இறப்பதற்கு முன்னர் அரசுக்கு எழுதிய கடிதம் ஒன்று சர்டிபிக்கட் மோசடிச் சம்பவத்தைப் பகிரங்கப் படுத்துகிறது.

அதைத் தொடர்ந்து வழக்கு ஆரம்பமாகிறது.

நீதிமன்ற விசாரணைதான் படத்தில் முக்கியமாக அமைகின்றது. நீதிமன்ற வசனங்களை வாலி எழுதியிருக்கிருர்.

படத்தை ஜோதி பாண்டியன் இயக்கியிருக்கிருர். இசை: இளையராஜா.

நடிக, நடிகையர்: லட்சுமி, வினு சக்கரவர்த்தி, பூர்ணம் விசுவநாதன், மனோரமா, ரவி, அருந்ததி, டில்லி கணேஷ். ★

# படப்பிடிப்பில் நடந்த நிஜமான ஹெலிக்கொப்டர் விபத்து

படப்பிடிப்பின்போது விமானம் விழுந்து நொறுங்கியது.

பிலிப்பீன்ஸ் நாட்டில் மணிலாவில் இருந்து தெற்கே 30 மைல் தொலைவில் உள்ள மலைப்பகுதியில் இக்கோர விபத்து இடம் பெற்றது.

'ஸ்ராங்கிஸ் ஹோல்டெ டெல்டா' என்ற ஆங்கில சண்டைப் படத்தின் படப்பிடிப்பில் சண்டைக்காட்சி ஒன்று படமாக்கப்பட்டது. இதற்காக டோல்பின் ரக ஹெலிக்கொப்டர் ஒன்று பயன்படுத்தப்பட்டது.

ஹெலிக்கொப்டர் பறந்து கொண்டிருக்கும்போதே அதில் தீப்பிடிப்பது போன்ற காட்சியைப் படமாக்கத் தொடங்கினர்கள்.

ஹெலிக்கொப்டரில் தீப்பிடித்தது. ஆனல் உண்மையிலேயே தீப்பிடித்துக்கொண்டது என்பது சிறிது நேரம் சழித்துத்தான் கீழே நின்று படமாக்கிக் கொண்டிருந்த படப்பிடிப்புக் குழுவினருக்குத் தெரிய வந்தது. அதிர்ச்சி அடைந்த குழுவினர் திகைத்து நின்றனர்.

அதற்கிடையில் தீப்பிடித்துக்கொண்ட 'ஹெலி' மிகப் பயங்கரமான மலைப்பள்ளத்தாக்கில் விழுந்து வெடித்துச் சுக்கு நூருகச் சிதறியது.

அதில் 4 பேர் கருகி இறந்தனர். 10 பேர் காயமடைந்தனர். அனைவரும் அமெரிக்கர்கள்.

கதாநாயகனக நடிக்கும் ஹொலிவூட் நடிகர் நொரிஸ் படப்பிடிப்பு நடந்த இடத்தில் இருந்தார். ஆனல் அவர் 'ஹெலி'யில் நடந்த படப்பிடிப்பில் கலந்து கொள்ளவில்லை.

விபத்து நடந்த இடத்துக்கு அருகே பிலிப்பீன்ஸ் முன்னுள் அதிபர் மார்கோஸுக்குச் சொந்தமான பிரமாண்டமான மாளிகை உள்ளது. ★

# மிருக வதைத் தடுப்பு இயக்கத்தில் பிரெஞ்சு நடிகை பிரிஜட்பார்டோ

பிரிஜிட் பார்டோ, பிரெஞ்சு படவுலகின் கவர்ச்சித் தாரகையாக 1960 களில் விளங்கியவர்.

1973 இல் இருந்து அவர் திரைப்படங்களில் நடிப்பதைக் கைவிட்டிருந்தார்.

இடைப்பட்ட காலத்தில் மிருக வதைத் தடுப்பு இயக்கத்தை முன்னின்று நடத்தத் தொடங்கினர்.

இப்போது மீண்டும் அவர் திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கியிருக்கிருர்; கவர்ச்சி நடிகையாக அல்ல.

மிருக உரிமைகளைப் பேணும் மிருக உரிமைவாதியாக அவர் 6 டொக்குமண்டரி படங்களில் நடிக்கிருர் பிரிஜிட்பார்டோ.

மிருகங்களைச் சித்திரவதைப் படுத்துவது, வேட்டையாடுவது தவிர்க்கப்படவேண்டும் என்பதை விளக்குகிறது இந்த 6 படங்களும்.

54 வயதான பிரிஜிட் பார்டோ (Brigitte Bardot) சொல்கிருர்;

'1960 களில் 25 லட்சம் யானைகள் இருந்தன. இன்று ஏறக்குறைய 4 லட்சம் யானைகள்தான் உள்ளன. ஆண்டு தோறும் ஒரு லட்சம் யானை வரை கொல்லப்படுகின்றன. இதைத்தடுத்து நிறுத்த வேண்டாமா?

இப்படி இப்படங்களில் பார்டோ வலியுறுத்திக் கூறுவதாக அமைகிறது. ★

# ஆண்டுதோறும்ஒருடாலர்சம்பளம்பெற்று 'மனித' பணிபுரியும் ஹொலிவூட் நடிகர்!

ஆண்டு ஒன்றுக்கு ஒரு டாலர் சம்பளம் பெறுகிருர் ஹொலிவூட் நடிகர் யுல் பிரைனர் (Yul Bryner)

இச்சம்பளத்தை வழங்குகிறது ஐ. நா. அகதிகள் நிறுவனம். இந்த நிறுவனத்தின் ஹைகமிஷனருக்கு விசேட ஆலோசகராக யுல் பிரைனர் பணிபுரிகின்ருர். இதற்கான சம்பளமே ஒரு டாலர்.

1959 ஆம் ஆண்டில் இருந்து இப்பணிக்காக ஆண்டு தோறும் 2 லட்சத்து 50 ஆயிரம் மைல் பயணம் செய்யும் யுல் பிரைனர், உலகின் சிறந்த நடிகர் மட்டுமல்ல; மனிதாபிமானவாதியும்கூட.

மனிதாபிமானத்தை வளர்ப்பதற்காக தன்னையே அர்ப்பணித்திருக்கும் யுல் பிரைனருக்கு இன்று வயது 69. 11. 7. 1920 இல் அவர் பிறந்தார்.

உலகின் எங்கோ ஒரு மூலையில் ஒரு நாடு இன்னெரு நாட்டுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்வரை அகதிகள் புனர்வாழ்வுப் பிரச்சினை தீராது என்று கூறுகிருர் யுல் பிரைனர்.

பெரும்பாலும் மறக்கப்பட்ட நிலையில் வாழும் அகதி மக்களுக்காக பிரைனர் பல படங்களைத் தயாரித்திருக்கிருர்.

டெலிவிஷன் மற்றும் வானெலி நிகழ்ச்சிகளையும் தயாரித்து நிதி திரட்டி வருகிருர்.

இதுவரை ஒருகோடி 50 லட்சம் டாலர் பணம் திரட்டி வழங்கியிருக்கிருர்.

'நாம் இப்பிரச்சினைக்கு என்ருவது ஒருநாள் தீர்வு கண்டேயாக வேண்டும்.

'பெருமையை இழந்து, உலகில் எவருக்கும் சொந்தமே இல்லாத யாரையும் நம்பி வாழுகின்ற ஓர் இனத்தை உருவாக்கிவிடும் ஆபத்தான கட்டம் ஏற்பட்டுள்ளது'

இப்படிக் கூறும் யுல் பிரைனர் சிறந்த மனிதாபிமானி என்று கருதப்படுவதில் தவறேதுமில்லை அல்லவா! ★

# தரமான கலைப்படம் தயாரிக்க பாரதிராஜா சபதம்

ஊர்காவலன், சிறைப் பறவை, என் புருஷன் எனக்கு மட்டும்தான் போன்ற படங்களை இயக்கிய டைரக்டர் மனோபாலாவுக்கு தமிழ் சினிமா பத்திரிகையாளர் சங்கம் சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

பிரபல டைரக்டர் பாரதிராஜா தலைமை வகித்துப் பேசினர்:

'தரமான கலைப்படங்களை இப்போது தயாரிக்கப்படுவதில்லை என்று பலரும் கவலைப்பட்டனர். இதை நான் எண்ணிப்பார்க்கின்றேன்.

என்னுடைய மனதில் தரமான கலைப்படங்கள் எடுக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டு.

இனிவரும் காலத்தில் தரமான கலைப்படங்களை தயாரித்து தமிழகத்துக்குப் பெருமை சேர்ப்பேன்'—

இப்படி டைரக்டர் பாரதிராஜா பிரதிக்ஞை எடுத்தார். ★

## பெங்களூரில் 'ஹொலிவூட்' நகரம்

பெங்களூருக்கு அருகே 'மினி ஹொலிவூட் நகரம்' உருவாக்க பெரிய திட்டம் உள்ளது.

கர்நாடக திரைப்படத் துறை வளர்ச்சித்துறை இதற்கான திட்டங்களைத் தீட்டி நடவடிக்கை எடுத்துள்ளது.

பெங்களூருக்கு அருகேயுள்ள தொட்டபல்லபூர் அருகே கொடிஹள்ளியில் 131 ஹெக்டேர் நிலப் பரப்பில் மினி ஹொலிவூட் நகரம் உருவாகிறது.

ஒரு திரைப்படம் உருவாக தேவையான அனைத்து வசதிகளையும் உடையதாக இந்த நகரம் இருக்கும். திரைப்படத் தொழிலுக்கான அனைத்து வசதிகளையும் கொண்ட இந்தநகர் 131ஹெக்டேர் (ஒரு ஹெக்டேர் 2.5 ஏக்கர்) பரப்பில் அமையும். மொத்தம் ரூ. 130கோடி செலவில் இந்தநகர் அமைக்கப்படவுள்ளது.

இந்த மினி ஹெலிவூட்நகர் உருவானல் தென்னக சினிமா உலகம்முழுவதும் இங்குவந்து குவியும் எனக் கருதப்படுகிறது.

மேலும் ஹெலிக்கொப்டர் தளம், பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, அழகான பூங்கா, 5 அடுக்கு ஹோட்டல்.

இதுதவிர வெளிப்புறப் படப்பிடிப்புகளுக்கான அழகு மிகு இடங்கள் ஆகியவையும் இங்கு அமைக்கப்படும். ★

## வெள்ளித்திரையில்

# பொது அறிவுப்போட்டி இல. 26

1. உலகில் மிகப்பெரிய பரிசு? … … … … … … …ஜனதிபதி / நோபல்
2. ஜப்பானியர் வெறுக்கும் எண்? … … … … … … … … 13 / 3
3. ஆயிரம் நாமங்கள் கொண்டவர்? … … … … … … விஷ்ணு / சிவன்
4. இந்திய தேசியகீதம் பாடியவர்? … … … … … தாகூர் / பாரதியார்
5. இதுவும் சீறுவதுண்டு? … … … … … … … … பாம்பு / புயல்
6. காலத்தால் முந்தியது எது? … … … … … இராமாயணம் /பாரதம்
7. பரப்பளவில் பெரியநாடு? … … … … … … … … சீன / ரஷ்யா
8. புத்தர் பரிநிர்வாணம் அடைந்தது? … … … பௌர்ணமி / அமாவாசை
9. வசந்தத்தை நினைவூட்டுவது? … … … … !… தென்றல் / குயிலோசை
10. எல்லோரும் பயப்படுவது? … … … … … … … முரடன் / திருடன்
11. மன்னராட்சி முதலில் தோன்றியது? … … … … … எகிப்து / இந்தியா
12. இப்படி வாழவேண்டும் என்பர் … … … … … புகழோடு / நீதியோடு

பெயர்:- ………………………………
விலாசம்:- ………………………………
………………………………

பொது அறிவுப்போட்டி இல: 26
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

……………… இங்கே வெட்டுக ………………

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 07 - 06 - 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றும் பரிசு: | 25 ரூபா |

## வேண்டுமையா!

உத்தரத்திற்கு ஏறி
உறியை எடுப்பதற்கும்
சத்திரத்தில் தங்கி
சாத்திரம் கற்பதற்கும்
சித்திரத்தைக் கீறி
சிந்தை மகிழ்வதற்கும்
சித்தளவிலேனும் கல்வி
பெற்றிட வேண்டுமையா,

—நந்தன்


## வீடியோ படுத்தும் பாடு

திருமண வீட்டில் இன்று
திறன் மிகு வீடியோக்கள்
படங்களை எடுக்கும் போது
பலருமே முன்னல் நிற்பர்
ஒழுங்குகள் எல்லாம் மாறி
ஒடுவர் முகத்தைக் காட்ட
வழக்கங்கள் மாறி நிற்கும்
வருபவர் தனை மறக்கும்
சடங்குகள் புதிதாய் தோன்றும்
சமையலும் வேளைக் காகும்
ஒதுக்கிய மூடக் கொள்கை
ஒவ்வொன்ருக வந்து சேரும்
விதியது என்று சொல்லி
விளம்புவர் பலர் இருந்து
பசியது வயிற்றைக் கிள்ளப்
படங்களைப் போஸ் போஸாப்
பிடிக்கிருர் நின்று நின்று
பிள்ளைகள் அங்கு மிங்கும்
ஓடியே இடித்து நிற்பர்
ஒருவரோ டொருவர் ஆக
ஆறிய கறியும் சோறும்
நாறியே போயி ருக்கும்
மாறியே கொடுப் பதற்கு
மங்கையர் ஒருவ ரில்லை
சேலையத் திறமாய் கட்டி
சிறந்திடும் நகைகள் பூட்டி
பார்த்திடப் பதுமை போல
பல்லிலாப் பாட்டி கூடக்
காட்டுகிருர் காதல் போஸு
காளையர் கன்னி சேர்ந்து
போட்டிடும் கூத்தும் சேர்ந்து
போட்டியாய் படம் பிடிப்பது
வீடியோ படுத்தும் பாடு
வேதனை தருவ தாகும்.

— வ. யோகானந்தசிவம்

# சொற்சிலம்பம்

## போட்டி இல: 101



சொற்சிலம்பம் இல: 101
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ………………………………
விலாசம்: ………………………………
………………………………

——— இங்கே வெட்டுக ———

**முடிவு திகதி: 14 - 06 - 1989**

**இடமிருந்து வலம்:**

1. தானங்களில் ஒன்று, 4. வலிமை, 5. முருகக் கடவுள், 6. வடமொழிச் செய்யுள், 7. புத்தி, 9. வணக்கம், 10. பூமாலை, 11. மந்திரம், 12. இது வந்தால் பத்தும் பறக்கும், 15. குன்று, 16. சாது.

**மேலிருந்து கீழ்:**

1. வில்லுக்கு விஜயன், 2. ஆதாரம், 3. பாறை, 4. ரதியின் துணைவன், 5. நட்பு, 8. ஒரு வகைத் தானியம், [9. துஷ்டன், 11. தென்னையின் இலை, 13. படம் பாதியில் நிற்கிறது, 14. சந்திரன்.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினல் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப் படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைத்துளிக்கும் மனிதனுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

வானத்தில் இருந்து மழை பொழிகிறது. விழும் மழைத்துளிகள் அத்தனையும் இறுதியில் சமுத்திரத்திலேயே சங்கமமாகிறது.

நேரடியாகவே சமுத்திரத்தில் விழும் மழைத்துளிகளும் உண்டு. சில பாறைகளில் விழுந்து சிதறுவதும், சில நிலத்தில் விழுந்து, நிலத்துக்கூடாகப் பாதாளம் வரை சென்று நதிகள் மூலம் சமுத்திரத்தில் கலப்பதும் உண்டு.

சில மழைத்துளிகள் இலைகளின் ஆவியுயிர்ப்பு மூலம் நீராவியாகி மேலெழுந்து திரும்பவும் மழையாகி எங்கெங்கோ விழுந்து அல்லல்பட்டு இறுதியில் சமுத்திரத்தில் சங்கமமாகிறது.

மனிதர்களும் இப்படித்தான். சிலர் நேரடியாகவே பிறப்பெடுத்தவுடனே இறைவனை உணர்ந்து கலந்துவிடுபவர்களுமுண்டு. இவர்கள் சமுத்திரத்தில் விழும் மழைத்துளிகள் போன்றவர்கள்.

பலர் உலக பந்தங்களில் அகப்பட்டு அடிபட்டு பல பிறவிகள் எடுத்து இறுதியில் இறைவனை அடைகிறார்கள். இவர்கள் பாறைகளிலும், நிலத்திலும் விழுந்த மழைத்துளிகள் போன்றவர்கள்.

ஆனால் என்றோ ஒருநாள் நிச்சயமாக மழைத்துளிகள் சமுத்திரத்தை அடைந்தே தீரவேண்டும்.

இதுபோலவே கட்டாயம் ஒருநாள் மனிதனும் இறைவனை அடைந்தே தீருவான். ஆனால் அடையும் காலம் தான் ஒருவருக்கு ஒருவர் வித்தியாசப்படுகிறது.

மனிதனும் கடவுளும் ஒன்றுதான். எப்படிச் சமுத்திரத்தில் உள்ளநீர், மழைத்துளிகளாகி ஆற்றுநீர், குளத்துநீர், நதிநீர் என்று பல்வேறு உருவம் பெறுகிறதோ அதே போலத்தான் இறைவனிடம் இருந்து பிரிந்துவந்தவர்களே நாம். திரும்பவும் இறைவனிடமே போய்ச் சேரவேண்டியவர்கள்.

தங்கத்தில் இருந்து உருவாக்கப்பட்டவையே காப்பு, தோடு, மோதிரம் போன்ற நகைகள். இவற்றை உருக்கிவிட்டால் அவை திரும்பவும் ஒரே தங்கமாவதுபோல மனிதனும் ஒருநாள் இறைவனை அடைந்தே தீருவான்.

தன்னை உணர்ந்தவன் விரைவில் இறைவனை அடைகிறான்.

ஒரு நெய் வியாபாரி நெய் விற்றுப் பிழைத்து வந்தான். அவன் விற்ற நெய் பழுதடைந்தவை.

அவற்றை வாங்கியவர்கள் பழுதடைந்த நெய்யை விற்று மோசடி செய்த வியாபாரி மேல் வழக்குத் தொடுத்தனர்.



விசாரணை அதிகாரிகள் வியாபாரிக்கு மூன்று நிபந்தனைகள் போட்டனர்.

★ நீர் செய்த அநீதிக்கு அவ்வளவு பழுதடைந்த நெய்யையும் சாப்பிடவேண்டும்.

★ அல்லது இருபது கசை அடிகள் வாங்கவேண்டும்.

★ அல்லது சில லட்ச ரூபாய்களைக் கட்டவேண்டும்.

இந்த மூன்றில் ஏதாவது ஒன்றை நீர் செய்யலாம் என்றனர்.

'நான் அத்தனை நெய்யையும் சாப்பிடுகிறேன்' என்று சாப்பிடத் தொடங்கினான். முடியாமல் வாந்தி எடுத்தான்.

எனவே 'இருபது கசை அடிகளைத் தாருங்கள்' என்றான். சில அடிகள் விழுந்ததுமே—

'ஐயோ என்னால் முடியாது. நான் நீங்கள் கேட்ட பணத்தைக் கட்டிவிடுகிறேன்' என்றான்.

இந்தப் பணத்தை முதலிலேயே கட்டியிருந்தால் இவ்வளவு கஷ்டங்களும் அநுபவிக்க வேண்டியதில்லையே...!

இதேபோலவே கடவுளை உணர்ந்து கொண்டவர் ஆரம்பத்திலேயே இறைவனுடன் கலந்து தப்பித்துக் கொள்கிறார்கள்.

மற்றவர்கள் உலக பந்தங்களில் அகப்பட்டு நெய் வியாபாரிபோல அல்லல்பட்டு இறுதியில் இறைவனை அடைந்துவிடுகிறார்கள்,

—பாபா கதைகள்

# உலகைக் காப்பாற்றும் ஜெபம்!

இந்த யுகத்தின் இறுதிப் போராட்ட காலத்தை எட்டி இருக்கிறோம். நாகரிகத்தை அடியோடு நாசமாக்கக்கூடிய சம்பவங்கள் உள்ளங்களை உருக்குகின்றன. மாபெரும் எழுப்புதலா? உலகத்தின் அழிவா? உயிர் மீட்சியா? உயிரினமேயற்ற உலகமா? இவைகளே இன்று கேட்கப்படும் கேள்விகள்.

நமது ஜெபத்திலும் சேவையிலும் ஆத்திரம் காணப்படவேண்டும். நாடெங்கிலும் விசுவாசப் போர்வீரனின் விழிப்பான ஜெபங்களும், உபவாச ஜெபங்களும் உன்னத மண்டபங்களுக்கு ஏறெடுக்கப்படவேண்டும்.

பெருக்கெடுத்தோடும் ஆவியின் மழையும் உருக்கிஉணர்த்தும் அக்கினி மாரியும் எதிர்பாராதவிதமாய் எங்கெங்கும் பொழிய உருக்கமான ஜெபங்களும் ஊக்கமான வேண்டுதல்களும் பட்டணங்களிலிருந்தும் பட்டிகளிலிருந்தும் பரலோகத்துக்கு எழும்பவேண்டும்.

நாடுகள் தடுமாறும் இந்நாட்களில், நாட்டுத்தலைவர்கள் சமாதானத்துக்கேற்றவாறு ஞானமாய் நடந்து கொள்ள; அவர்களுக்காகவும் ஜெபிக்கும்படி பெரும்பாலும் கிறிஸ்தவர்களாகிய நாம் கட்டளை பெற்றிருக்கிறோம். (1 தீமோத் 2: 1,2)

'ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப் போல் இருக்கிறது; அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்.' என்பது உண்மைதானே (நீதி 21 : 1) நாம் ஜெபித்தால் அவர் திரும்புவார்.

பூர்வ காலத்தில் அழிவுக்கு நியமிக்கப்பட்ட நினிவே மக்கள் மூன்றுநாள் புசியாமலும், குடியாமலும் உபவாசித்து தேவனை நோக்கிக் கதறியதுபோலும், எஸ்தர் ராணி அதேபோல் தன் மக்களை வரையும் மூன்று தின உபவாசத்திற்கு ஏவியதுபோலவும், நாமும் இரட்டுடுத்தி சாம்பலில் உட்கார்ந்து உபவாசித்து அழுது புலம்புவோமானால், பட்சபாதமில்லாத தேவன் கிருபையாய் இரங்கி நமக்கும் மகத்துவ விடுதலை அளிப்பது உறுதி.

இது தேவனுடைய அழைப்பு.

கர்த்தருடைய பரிசுத்தவான்களே, கர்த்தரோடே உடன்படிக்கை செய்து இரவுபகலாய் உபவாசித்து ஊக்கமாய் ஜெபிப்பீர்களானல் ஆமானின் கொடிய சதியை அதமாக்கி தம்மக்களை அதிசயமாய் விடுவித்த தேவன் சத்துருவின் தந்திர வலைகளை அறுத்தெறிந்து, அவனுடைய அரண்களையெல்லாம் உடைத்தெறிந்து ஆவியின் அபிஷேகம்பெற்ற ஊழியத்தின்மூலம் நாட்டைத் தமக்குச் சொந்தமாக்குவார். பெரிய எழும்புதலைக் காண்போம்.

அன்றொருநாள் 120 பேர் மேலறையில் கூடியபோது



அவர்கள் ஒருமனதோடும், உடைந்த உள்ளங்களோடும் ஏறெடுத்த ஜெபங்கள், உலகம் ஒருபோதும் காணாத உன்னத அனுபவங்களை உருவாக்கும் என்று எவருமே எண்ணியதில்லை. ஆண்களும், பெண்களுமாய் ஆவியில் ஒன்றுபட்ட அச்சிறிய குழு தங்கள் துதித்தலாலும் ஜெபித்தலாலும் பரிசுத்த ஆவியாகிய தேவனையே பூலோகத்துக்கு இறங்கிவரச் செய்துவிட்டனரே! (அப் 1:15) (2:1 17)

அவ்வாறே இன்றும் புறக்கணிக்கப்பட்ட மறைவான தேவனுடைய 'சிறுமந்தையே' உன்விடாப்பிடியான உபவாச ஜெபத்தால் சர்வவல்லவரின் தலைமையின் கீழ் ஒரு புதிய அமைப்பு உருவாகும். உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள்பிதா பிரியமாயிருக்கிறார். (லூக் 12:32)

இது நெருக்கடியானவேளை; தேவனற்றவர்கள் உலக ஆதிக்கத்துக்காக ஆத்திரமடைகிறார்கள். கர்த்தரோ தம் மக்களை 'புறப்பட்டுப் போங்கள், பாவப்படுகுழியில் சிக்கி சாத்தானின் அந்தகார ஆட்சியில் அடிமைப்பட்டிருக்கும் மக்களை விடுவியுங்கள் என்கிறார். தைரியமாய், வீராவேசமாய், ஒருமனதோடு போரில் குதிக்கவேண்டிய வேளை இது. இளைப்பாறவோ, களியாடவோ, உறவாடவோ, உரையாடவோ இது காலமல்ல. 'எழு உன் பட்டயத்தை. போ உன் போருக்கு', என்று கர்த்தர் சொல்கிறார். ★

- வண. சாம்செல்வநாயகம்

# 'வஹி' மூலம் பெற்ற இறைச் செய்தி!

கி. பி. 609 ரமழான் மாதம் ஒரு நாள் இரவு ஹிரா குகையில் தியானத்திலிருந்த அண்ணல் முகம்மது,

ஓதுவீராக...!

என்னும் குரல் கேட்டுத் திடுக்கிட்டார். அவர் முன் காட்சியளித்த ஓர் உருவம்,

'நான் தான் ஜிபுராயீல்; இறைவனுடைய செய்திகளையும் அவனது வேத வெளிப்பாடுகளையும் மனித இனத்துக்கு அறிவிப்பதற்காக, நீர் இறைவனால் நியமிக்கப்பட்டிருக்கிறீர் என்பதை உமக்குத்தெரிவிப்பதன் பொருட்டு இறைவனால் அனுப்பப்பட்ட வானவன் நான்...!'

அன்று அவ்வுருவம் தன்னை அடையாளம் காட்டியதோடு, முஹம்மது, இறைவனின் நபியாக – தூதராக நியமிக்கப்பட்டுள்ளதையும் அறிவித்து, அவரை ஓதப் பணித்தது:

'எழுத்தறிவோ, வேத அறிவோ பெறாத நான் எதை ஓதுவது'...?'

எனப் பெருமானார் தந்த பதிலைக் கேட்ட வானவர் அண்ணலாரை இறுகத் தழுவி,

'உதிரக் கட்டியிலிருந்து மனிதனைப் படைத்த படைப்பாளரான உமது இறைவனின் திருநாமத்தால் ஓதுவீராக...! ஓதுவீராக...! எழுதுகோலால் கற்பித்தனவான உமது இறைவன் ஈகை உள்ளவனுவான். மனிதன் அறியாதவற்றை அவனுக்கு (இறைவன்) கற்பித்தார்.' எனக்கூறி ஓதப் பணித்தார். இதுவே ஜிபுராயீல் மூலம் நபிக்கு இறைவனால் அளிக்கப்பட்ட முதல் மறைச் செய்தி. இதைப் பற்றித் திருக்குர் ஆன்,


நபியே... (குர் ஆன் ஆகிய) இஃது இறைவனால்தான் அருளப்பட்டது. இறைவன் கட்டளைப்படி ஜிபுராயீல் இதனை உமது இருதயத்தில் இறக்கி வைத்தார். (திருக்குர் ஆன் 26 : 192 : 193)

நிச்சயமாக அல்லாஹ்வின் கட்டளைப்படியே ஜிபுராயீல் இதனை உமது இருதயத்தில் இறக்கி வைத்தார். (2. 97)

இவ்வாறு ரமழான் இரவு தொடங்கிப் பெருமானாரின் இறுதி நாள் வரை 23 ஆண்டுகள் சிறிது சிறிதாகக் 'குர் ஆன்' திருமறை ,வஹீ'யாக நபி (ஸல்)க்கு அருளப்பட்டது: இறைவன் மொழியை வானவர் உணர்த்துவது 'வஹி' எனப்படும்.

இதைப் பற்றித் திருமறை குறிப்பிடும் போது,

அல்லாஹ்வுடன் நேருக்கு நேர் பேசுவதற்குரிய தகுதி மானிடரில் ஒருவருக்கு



இல்லை: எனினும், வஹியின் மூலமாகவோ அல்லது திரைக் கப்பால் இருந்தோ அல்லது ஒரு வானவரை அனுப்பி வைத்தோ மனிதரிடம் இறைவன் பேசுகிறான். (42 : 51)

வஹி மூலம் இறைச் செய்தி பெற்றது எவ்வாறு என்பதைப் பெருமானாரே கூறியுள்ளார்.

'சில சமயம் மணி ஒலிப்பது போல் என் காதில் சொற்கள் ஒலிக்கும். அவ்வொலி மூலம் சொல்லப்பட்ட சொற்களை நான் நினைவில் இருத்திக் கொள்வேன்; சில வேளைகளில் வானவர் தலைவர் ஜிபுராயில் (அலை) மனித வடிவில் தோன்றி என்னுடன் பேசுவார். அப்போது அவர் கூறுவதை நான் மனத்தில் இருத்திக்கொள்வேன்'(புகாரி 1-1) எனப் பெருமானார் கூறியுள்ளதிலிருந்து வானவர் வடிவிலும் ஒலி வடிவிலுமே பெருமானாருக்கு இறைச் செய்தி முழுமையும் அருளப்பட்டது என்பது தெளிவாகிறது.

ஹிரா குகையில் முதல் இறைச் செய்தியை வானவர் ஜிபுராயீல் மூலம் பெற்ற நபி உடல் நடுக்கமுற்றவராக, விரைந்து இல்லம் சேர்ந்து தம் துணைவி கதீஜா பிராட்டியாரிடம் நடந்தவைகளைக் கூறினார்.

பெருமானார் கூறிய அனைத்தையும் கேட்டறிந்த அம்மையார், முழுமையாக நம்பியதோடு அண்ணலாரை இறைத் தூதர் - நபியாகவும் முழுமனத்தோடு ஏற்று உறுதி கொண்டார்.

இவ்வாறு இறை மார்க்கமான இஸ்லாமிய நெறியில் அன்னை கதீஜா தன்னை முதன்மையாளராக இணைத்து முஸ்லீமானார்.

பின்னர் அபூபக்கர் சித்திக், மாவீரர் அலி போன்றோர் இஸ்லாத்தில் நம்பிக்கை கொண்டு இணைந்தனர்.

இன்றைய உலக மக்களில் நான்கில் ஒருவர் வீதம் நம்பிக்கை வைத்துள்ள இஸ்லாம் மார்க்கம் இவ்வாறுதான் வளரலாயிற்று' ★

- மணவை முஸ்தபா -

## நபிகள் நாயகம் (ஸல்) அருளியவை

● ஒருவருக்கொருவர் புறம் கூறாதீர்கள். புறங்கூறுதல் சகோதரரின் இறைச்சியை (உடம்பைச்) சாப்பிடுவது போலாகும்.

● ஈமானில்லாத எந்த அமலும் ஈடேற்றம் பெற மாட்டாது.

● கள், சாராயம் போன்ற மதுபானங்கள் எல்லாப் பாவங்களுக்கும் அத்திவாரமாகும்.

● நன்மையை அறிவித்துக் கொடுப்பவருக்கு அதைச் செய்பவர்போன்ற நன்மை உண்டு.

● சோம்பேறித்தனத்தால் தொழுகையை விடுவதும், பொய்ச்சத்தியம் செய்வதும் சைத்தானுக்கு மிகப்பிடித்தமானது.

● நல்லனவற்றை ஏவுவதும் தீயவற்றை விளக்குவதும் ஒவ்வொன்றும் ஸன்னத்தாகும்.

● தீயகாரியங்கள் நடைபெறுவதைக் கண்டால் அதனைக் கையினால் தடுக்கவேண்டும். முடியாவிட்டால் நாவினால் தடுக்கமுயலவேண்டும். அதுவும் முடியாதுபோனால் மனதினாலாவது தீயது எனக் கருதி வெறுக்கவேண்டும்.

● ஒரு முஸ்லிமின் குறைகளை ஒருவர் மறைத்தால் அல்லாஹ் அவருடைய குறைகளை துன்யாவிலும் ஆகிரத்திலும் மறைத்துவிடுகிறான்.

● ஒரு முஸ்லிமின் மானத்திற்குப் பங்கம் விளைவிப்பதுவே வட்டிகளில் மிகக் கெட்டது.

● உங்களது தோற்றங்களையோ, செல்வங்களையோ, அல்லாஹ் பார்ப்பதில்லை.

தொகுப்பு:-
வவுனியா
எஸ். அத்துல் சமட்



## துணைதேடும் குயிலொன்று

சோலைக்குள் வந்த குயில்
ஆவலுடன் பார்த்தது
ஜோடியைக் காணாது
சோகமாய்க் கூவுது!

பொறுமை இழந்த குயில்
பறந்தே தேடுது
பார்த்த இடம் காணாது
பயந்தே கூவுது!

இளைத்து விட்ட குயிலோ
இரையும் தேடவில்லை
இதயத்தைத் தேடி
இரங்கியே கூவுது!

அன்புகொண்ட குயில்
மனம் மட்டும் சோரவில்லை
துணைப் பறவைவரும் என்று
துடிப்புடனே கூவுது!

கூ கூ என்று குயில்
கூவித்தான் பார்க்குது
சிறுவர்கள் கேலி செய்தும்
குயிலது கூவுது.

வி. ரூபா

# பாதை மாறுவதில்லை!

ரேவதியின் குரல் கேட்டு, மல்லிகா கதவைத் திறந்தாள். 'என்ன ரேவதி கையிலே பார்சல்?'

'அது மாமி உழுந்து. அவர் வந்திருக்கிறார். வெள்ளிக்கிழமை பூரணை. சனி, ஞாயிறு லீவு. இரண்டுநாள் லீவு எடுத்தால் கொஞ்ச நாள் ஊரிலை நிற்கலாம் என்று வந்திட்டார். உங்கடை அவர் வெள்ளிக்கிழமை தான் புறப்பட்டு வருவாராம்.'

'மாமி, அவர் செய்கிற கமத்திலையிருந்து கிடைத்த உழுந்துதான் இது. லொறியிலை உழுந்து மூடைகள் வருகுதாம் இது சாம்பிளுக்குக் கொண்டு வந்தவர். உங்களுக்கும் தேவையென்றால் சொல்லுங்கோ'.

ரேவதி தான் கையில் வைத்திருந்த உழுந்துப்பார்சலை மல்லிகாவிடம் நீட்டினாள்.

மல்லிகா உழுந்தையெடுத்துப் பார்த்தபடி'

'எங்களுக்கு வீட்டுத் தேவைக்குத்தானே. தேவைப்பட்டால் பிறகும் உன்னட்டை வாங்கலாந்தானே இப்போதைக்கு ஐந்து கிலோ வைத் தாவேன்.'

'சரி மாமி, நான்வரட்டே?'

ரேவதி புறப்பட்டுப் போய்விட்டாள். மல்லிகா கையிலே வைத்திருந்த உழுந்தைத் தடவியபடி எதையோ நினைத்துப் புகைந்தாள்.

ரேவதியின் கணவனும், மல்லிகாவின் கணவனும் ஒரே பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள். ரேவதியின் கணவன் சுகுமார் வயதில் குறைந்தவன். எந்தெந்த வழிகளில் பணத்தைச் சம்பாதிககலாம் என்பதில் அவனுடைய மூளை கடுமையாக வேலை செய்யும். அதனால்தான் படிப்பிக்கிற சம்பளம் போதாதென்று கமமும் எடுத்து வேலை செய்கிறான்.

மல்லிகாவின் கணவன் ரகுபதி, சுகுமாருக்கு முற்றிலும் மாறான போக்குக் கொண்டவன்;

'பணம் ஒருவருக்குத் தேவைக்கு இருந்தால் போதும். வாழ்நாள் முழுவதும் பணத்துக்காக உழைத்து கடைசியில் இறந்துபோனால் வாழ்க்கையில் கண்ட சுகந்தான் என்ன? எங்களுடைய வருமானத்துக்கு ஏற்றவகையில் தேவைகளைக் குறைத்துக் கொண்டால் திருப்தியாக வாழலாந்தானே. திருப்தி, சந்தோஷம் என்பது ஒருவருடைய மனதிலே தங்கியிருக்கிறது.'

ஒருமுறை மல்லிகா தன்னுடைய கணவனிடம், சுகுமார் மாஸ்டரைப்போல் நீங்களும் கமம் செய்யலாந்தானே என்று கூறியபோது அவனிடமிருந்து வந்த பதில் அதுவாகும்.

'என்ன மாஸ்டர், உதுகள் எருமை மாடுகள். எப்பிடித்தான் கத்திக் கத்திப் [illegible] சாலும் ஒன்றும் [illegible] வீணாக நீங்கள் ஏன் கத்துறியள். சும்மா பாடத்தை ஒருக்கால் வாசித்துப்போட்டு கேள்விகளுக்கு விடைகளை எழுதிவிடுங்கோ. வேலை சுகம்'

சுகுமார் ஒருமுறை ரகுபதிக்கு வழங்கிய ஆலோசனை இது.

ரகுபதியுடன் சேர்ந்து படிப்பிக்கும் ஆசிரியர்கள் அடிக்கடி ஊருக்குப் போகும் போது அவன் தனிமையில் விடப்படுவான். அப்போது அவனுக்கு பலவாறு சிந்தனைகள் தோன்றும்.

'எதிர்காலத்தில் ஒரு அயோக்கியன், கொள்ளைக்காரன், கொலைகாரன் தோன்றுவதைத் தடுக்கும் சக்தி ஒரு ஆசிரியரிடம் இருக்கிறது என்பதை இவர்கள் ஏன் நினைத்துப் பார்க்கிறார்கள் இல்லை. தன்னுடைய பிள்ளை படிக்காமல் இருந்தால் இது எருமை மாடு. இதுக்கு ஒன்றும் ஏறாது என்று ஒதுக்கி வைப்பார்களா? அல்லது அப்படிக் கூறும் ஆசிரியரின் அறிவுக் கூர்மையைப் பாராட்டுவார்களா? தனக்கு ஒரு நியாயம், பிறர்க்கு ஒரு நியாயம் கற்பிக்க இவர்களால் எப்படி முடிகிறது'

ரகுபதி வீட்டுக்கு வந்து சேர்ந்து களைப்பு ஆறுவதற்கு முன்னர் மல்லிகா [illegible] டைய உள்ளக்கிடக்கையைக் கொட்டித் தீர்த்தாள்.

'வீட்டில ஒரு குமர் இருக்கு. இன்னும் இரண்டொரு வருஷத்திலை அவளை ஒருத்தனுடைய கையிலை கொடுக்கவேணும். வீடுவளவு இருந்தால் காணுமே? ஒரு இலட்சத்துக்கு மேலே இனும் கேட்கிற இந்தக் காலத்திலை அதைப் பற்றிக் கொஞ்சமும் யோசிக்கிறியள் இல்லையே'

'நான்பார்த்ததுக்குள்ளை நீங்கள் மட்டுந்தான் கடமை, மனச்சாட்சி என்றெல்லாம் பேசுகிறியள். நீங்கள் ஒரு ஆள் மட்டும் நேர்மையாக இருந்து என்னத்தைச் செய்யப் போறியள்? மற்றவையளைப் பார்த்தாவது வாழத் தெரிய வேண்டும்'

ரகுபதி அமைதியாக இருந்தான். அவனுக்கு ஆத்திரம் வரவில்லை. 'இவளும் சாதாரண அறிவு கொண்டவள் தான்.

பணம், போலிக்கௌரவம் என்றெல்லாம் உலகம் ஓடிக்கொண்டிருக்கிறது. அதிலே தான் அவளும் சேர்ந்திருக்கிறாள். இவளிடம் நேர்மை, மனச்சாட்சி என்பதெல்லாம் செல்லாக்காசு.

இந்த 'அறிவு' அவனுடைய இதயத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. அவன் கடைசியாக ஒரு வார்த்தை கூறினான்:-

'ரயில் தண்டவாளத்தில் மட்டுந்தான் ஓடும். அதை றோட்டில் ஓடவைக்க உன்னால் முடியாது. நான் ஒரு ரயில்'–

(யாவும் கற்பனை)

- கந். தர்மலிங்கம் -

## எங்கும் நிறைந்தாயோ...!

காற்றிடை புகுந்த
களனி யெங்கும் பரந்தென்,
தோளிடை தழுவி
துன்பம் பல செய்கிறாய்...!

மதியிடை முகம் காட்டியென்
மதியினைக் கெடுத்த பின்,
வானிடை நுழைந்தெனக்கு
வஞ்சனையும் செய்கிறாய்...!

பூவிடை நகைசெய்து
பூவையென்னை அருகிழுத்து,
அனலிடை மெழுகாக
அல்லலுறச் செய்கிறாய்...!

பா இடைவந்து பலகவிகள்
புனையச் செய்தபின்,
மௌனத்திடை சென்று சிலவேளை
முனிவன்போல் நடிப்பதென்ன...?!

—உஷா

## புதுமைப் பெண்ணே!

பெண்மையே!
வான நிலவின் குளிர்மைக்கும்
செடி மலரின் மென்மைக்கும் அல்லவோ!
கவிஞர்கள் உன்னை ஒப்பிட்டார்கள்
ஏன் சிலருக்கு மட்டும்
வானத்துச் சூரியனாய்ச் சுடுகிறாய்?
செடியின் முள்ளாய்க் குத்துகிறாய்?
இதுவும் பெண்மையின் தன்மையோ – அல்லது
இதுதான் புதுமைப் பெண்மையோ!

- மானியூர் ரட்ணேஷ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாஜ் மகாலே அழும்

உன்
பிரிவைக் கண்டு
தாஜ்மகாலைக் கட்டவில்லை
என்பதற்காக என்னை
அந்த சாஜகானுக்கு
குறைவாக
எண்ணிவிடாதே
உன்னை நினைத்து
இந்த நிமிடம் வரை
உதிர்ந்து...
உலர்ந்த...
கண்ணீர்த் துளிகள்
கல்லாய் மாறிஞல்
அதன் உயரத்தின் முன்னால்
அந்த தாஜ்மகாலே
தலைகுனிந்து
அழும்.

நிலாகைலைநாதன்

## கருணை மனு

என் பிரியமுள்ள
பெற்றோரே...!
சீதனச் சந்தையில்
என்னை ஏலத்தில் விற்க
நீங்கள்
எடுத்திடும் முயற்சிகள்
ஏமாற்றத்தைத்தான்
தரும்...
சம்மதம் இல்லாத
சம்பந்தமும்...
நிச்சயமில்லாத
நிச்சயதார்த்தமும்
என் வாழ்வை
நிர்மூலமாக்கும்!
சீதனம் என்னும்
விலை கொடுத்து –
விவாகம் என்னும்
வினையைச் செய்ய நான்
விரும்பவில்லை!!
அவசரப்பட்டு என்
அன்பையும்
ஆசைகளையும்
அறுவடை செய்து
விடாதீர்கள்!

– நல்லூர் தாஸ்

## ஏமாற்றம்

கருவானில்
வானவில்லைக்கண்டபோது,
மழை பொழிந்து
என் மண்ணெல்லாம்
செழிக்கப் போகின்றதென
எண்ணி
இறுமாந்திருந்தேன்.
ஆம்
மழை
பொழிந்து
கொண்டேயிருந்தது
ஆனல் இங்கல்ல
கடலில்.

"துதிகாந்தன்"

## மனைவி சொல்லே மந்திரம்

மனைவி சொல்லே
மந்திரம்
மற்றய தெல்லாம்
தந்திரம்
என்று படித்த
போதும் — இதை
நம்பவில்லை
நானும்.

★

உறவே இப்ப
பகை
தனியே என்
குகை
சந்தேகக் கதையைக்
கேட்டு
சந்தோஷம் இழந்து
நிற்கிறேன்.

★

மனைவி சொல்லே
மந்திரம் — இதை
நம்புது இப்போ
என் மனம்
ஊரார் கதைகள்
பொய்யே!
உத்தமி! நீயே
பெண்மயிலே!

— மண்டானூரவி

## நேர்மை

நேர்மை எங்கே
நிமிர்ந்து நிற்கிறது
என் பார்வை
அதனைத் தேடுகிறது
பல்லாண்டு காலம் – நான்
பார்த்திருந்தேன்
காணவில்லை அதனை
ஒரு வேளை அது
பிறவியிலே
ஊனமானதோ?

— மலர் மகள்

# புதிய வரிவடிவம் - புதிய சொற்கள்

# தமிழுக்கு இன்று அவசியம் தேவை!

எழுத்துச் சீர்திருத்தத்தை இலங்கையிலும் அமுலாக்க அறிஞர் குழுவினர் சிபார்சு என ஒரு செய்தி 27 – 05 – 89 சஞ்சீவியில் வெளிவந்தது.

தமிழ்ச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்வது என்று அறிஞர் குழு முடிவு செய்தது என்றும் அச்செய்தி கூறுகிறது.

இது ஒரு நல்ல முடிவாகவே தெரிகிறது.

ஒருவன் ஓடிற் கேட்டு ஓடு: உலகம் ஓடின் ஒத்தோடு என்ற பழமொழிதான் இங்கு நினைவுக்கு வருகிறது.

தமிழின் வரிவடிவம் மாற்றப்படக்கூடாதெதன ஒரு பேராசிரியர் வாதிட்டதாகவும் குறிப்பிட்ட செய்தி கூறுகிறது.

தமிழ் வரிவடிவம் ஆரம்பம் முதல் இப்போதிருப்பது போல் இருக்கவில்லையே என்பதை நாம் நினைவுகூர வேண்டும்.

பழைய வரிவடிவம் எத்தனையோ மாற்றம் பெற்றே தற்போதைய வரிவடிவம் உருவானதென ஆராய்ச்சியாளர் கூறுவர். ஆகவே நம் காலத்திலும் பயன் கருதி வரிவடிவம் மாற்றம் பெற்றுற் தவறேயில்லை.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் ஆராயப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட இத்தருணத்தில் இன்னெரு அம்சமும் கவனிக்கப்பட வேண்டும்.

அதாவது தமிழில் இன்னும் சில எழுத்துக்கள் சேர்க்கப் படவேண்டும்.

உலகம் முன்னேறிக்கொண்டிருக்கிறது. நம் நாட்டவரும் வெளிநாடு செல்கின்றனர். வெளிநாட்டவர் பலரும் நம் நாட்டுக்கு விஜயம் செய்கின்றனர். எனவே இயல்பாகவே முன்னைவிடப் பிறமொழிச் சொற்கள் பல நம் மொழியில் நம்மையறியாமலே புகுந்து கொள்கின்றன. இவற்றை நாம் புரிந்து கொள்ளும்படி எழுத, கருத்துத் தெளிவுற எழுத, மூல உச்சரிப்புக்கேற்ப எழுத எம்மொழிக்குப் புதிய எழுத்துக்கள் அத்தியாவசியம்.

பழைய காலத்திற்கே போனால் வடமொழியே முக்கிய பிறமொழியாகத் தமிழில் புகுந்த காலத்தில் அம்மொழியை அரவணைக்க ஸ, ஷ, க்ஷ, ஹ போன்ற எழுத்துக்கள் தமிழிற் தோற்றம் பெற்றன. அதன் பின் எத்தனையோ பிறமொழிச் சொற்கள் எம்மொழியுட் புகுந்து கொண்டபோதும் இன்று வரை எம்மொழி வரிவடிவத்தைப் பொறுத்தவரை முதிர்வுறுமற் கன்னித்தமிழாகவே இருந்துவிட்டது.

சூரிய நாராயண சாஸ்திரி பரிதிமாற் கலைஞர் ஆகும் அளவிற்கு வடமொழி ஆதிக்க எதிர்ப்பு இருந்ததை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். ஆனல் நாமும் அப்படியே இருந்துவிடுவதா?

மனித அறிவு வளர, வளர அதையொட்டிய அனைத்தும் வளரவேண்டும். மொழியும் அப்படியே.

விஞ்ஞானம் போன்ற முக்கிய துறைகள் வளர்ந்து வரும் காலம் இது. இத்துறைகளின் வளர்ச்சி எம்மீது செல்வாக்கு வகிக்கவே செல்கின்றன. இவற்றை நாம் ஏற்றுக்கொள்ள எம்மொழி வளம் போதாத காரணத்தாற் பெரும்பாலான சமயங்களில் அவற்றை அப்படியே பிறமொழி மூலமாகவே நம் மொழியிற் சேர்த்துக்கொள்கிறோம்.

> இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கையாளுகின்றனர்.
>
> இலங்கையிலும் அந்த எழுத்துச் சீர்திருத்தம் கொண்டுவரப்படவேண்டும் என்று தமிழ்மொழி வளர்ச்சி அமைச்சுக்கு அறிஞர் குழு சிபார்சு செய்துள்ளது. இதைத் தொடர்ந்து அமைச்சு அமைச்சரவை அறிக்கை ஒன்றைத் தயாரித்து வருகின்றது.
>
> தமிழுக்குப் புதிய வரிவடிவம் மட்டுமல்ல, புதிய எழுத்துக்களும் தேவை என்று வாதாடுகிருர் ராணி சின்னத்தம்பி அவர்கள்.

**- ராணி சின்னத்தம்பி -**

அச்சமயத்தில் எம் எழுத்துக்கள் உச்சரிப்புக்குப் போதுமானவையாய் இல்லாமல் இருப்பதால் நாம் ஒரே எழுத்தையே பல ஒலிகளைக் குறிப்பிட எழுதுகிறோம். இதனல் உச்சரிப்புக் குழப்பமும் பொருட் குழப்பமும் ஏற்படுகிறது.

உதாரணமாக, P, B, F மூன்றெழுத்தையும் எழுத நாம் 'ப்' பையே உபயோகிக்கிறோம். Pall, Ball, Fall மூன்றையும் எம்மாற் பிரித்தெழுத முடியுமா? இதே போல V, W, F ஆகிய எழுத்துக்கள் வரும் சமயங்களில் 'வ்' ஒன்றே பொது எழுத்தாக அமைகிறது. இன்னும் 'G' என்ற தொண்டைக்குள்ளிருந்து வெளிவரும் ஒலியைக் குறிக்கும் எழுத்துப் போன்றனவும் நம்மொழியில் வர வேண்டும்.

இதற்காக எம் நீண்ட நெடுங்கணக்கை இன்னும் நீளமாக்க வேண்டுமென்றில்லை. முக்கியமானவற்றைத் தெரிந்தெடுத்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும். எமது மொழியிற் பிறமொழிச்சொல்லுக் கேற்பக் கருத்தமைந்த சொல்லில்லாத போதும், பிறமொழி இடப்பெயர்கள், தாவரப்பெயர்கள் ஆட்களின் பெயர்கள் போன்றவை வரும் போதுமே மேற்கூறிய பிரச்சினை முக்கியமாக எழுகிறது.

புரியாதவிடத்தில் அடைப்புக் குறிக்குட் பிறமொழிச் சொல்லையே எழுதிவிடலாம் என்று சமாதானங் கூறலாம். ஆனல் அது எத்தனை நாளைக்கு எத்தனை சொற்களுக்கு?

தற்கால வழக்கு, பேச்சுத் தமிழ் என்றெல்லாம் கூறி மொழி வளர்ச்சிக்கேற்ப, இலக்கணவியலார் கூறுவதையும், அவர்கள் கூறியவற்றுக்குப் புறம்பானதையும் பாடப் புத்தகங்களிற் கூடச் சேர்க்கும் அளவிற்குச் சென்றுள்ள நாம், தேவை கருதி இப்படியான புதியவற்றை ஏன் சேர்த்துக்கொள்ளக் கூடாது?

எமது தமிழ் கன்னித்தமிழ். அது மாறக் கூடாது; மாசுபடக் கூடாது என்றெல்லாம் ஒரு பக்கச் சார்பாய் வீம்பு செய்தால் தமிழ் மெல்ல இனிச்சாகும்; தமிழ் மெல்ல இனித்தாகாது. ★

**தமிழ்நாட்டில் தற்சமயம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள டெலிபிரின்டர் தமிழ் எழுத்துக்கள் பின்வருமாறு அமைகின்றன.**

அறாவாயல்· தொழால் நடபம்· மற்றாம் கல்வாயறாவாத்
தாறைகளால் நூல்களை உராவாக்காவதல்பதா தமாழால் ஒரா பாதாய
கலக்காயத் தாறையைப் படைப்பதற்கா ஒப்பாகாம். எனவே அதற்கென
ஒரா நடை· ஒரா பாரம்பாரயம் உராவாக வேண்டாம். பல நூல்கள்·
பலவல்லாநர்களால் எழதப்பட்ட பான்னர்தான் ஒரா தாறையால்·
கலக்காயம் உராப்பொராகாறதா. அறாவாயல் தமாழ் அக்கம் ஒரா
நடாய பயணம்: அதால் நாம் காடாம் தாண்ட வேண்டாயாராக்காம்·
கடலாம் தாண்ட வேண்டாயாராக்காம்· கால்நடைப் பயணமாம் தேவை·
கப்பலாம் தேவை. ஒழாக்கேற்ற வாகனத்தை நாம் ஏற்க· உராவாக்க
நமதா மொழாக்கொள்கை கடந்தா வேண்டாம்.

## கம்பியூட்டருக்கு என புதிய தமிழா? முத்தமிழ்க்காவலர் எதிர்ப்பு!

தமிழ் எழுத்துக்களை உருமாற்றியும் சிதைத்தும் கூட்டியும் குறைத்தும் குறியீடுகளை மாற்றி அமைத்து அச்சிட்டும் தமிழ் மொழியைக் கொலைசெய்யும் முயற்சிகள் வரவர வளர்ச்சி அடைந்துகொண்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் சில பத்திரிகைக்காரர்களே இப்பணியைத் தொடங்கியிருக்கிருர்கள்.

சில பத்திரிகையாளர்கள் 1990 முதல் இதுதான் அமுலுக்கு வரும் என்றும் எழுதிக்கொண்டிருக்கிருர்கள்.

> தமிழகத்தில் சீர்திருத்தத் தமிழ்தான் பாவிக்கப்படுகிறது.
>
> டெலிபிரிண்டர், தட்டச்சு ஆகியவற்றுக்கென்று புதிய தமிழ் வரிவடிவமும் கண்டுபிடிக்கப்பட்டு பாவிக்கப்படுகிறது.
>
> இப்போது கம்பியூட்டர் பாவனைக்கு என்று தமிழுக்கு இன்னெரு புதிய வரிவடிவம் தயாராகி வருகின்றது.
>
> இதை முத்தமிழ்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் எதிர்க்கிருர். இம்முயற்சிக்குத் தடைபோடுமாறு தமிழக அரசை அவர் கேட்டுள்ளார்.
>
> முத்தமிழ்க் காவலரின் கோரிக்கை இங்கு பிரசுரமாகிறது.

இது அமுலுக்கு வருமானல் இன்றுள்ள பல லட்சக்கணக்கான உரைநடை நூல்களும் கவிதைகளும் தேவாரம், திருவாசகம் முதலிய சமய நூல்களும் இலக்கண, இலக்கியங்களும் படிக்கமுடியாமல் பாழடைந்துபோய்விடும்.

இறுதியாகத் தமிழ் மொழியே அழிந்துவிடும்.

அறிவியலுக்கு இம்மாற்றங்கள் தேவை என்றும் அப்போதுதான் தமிழ் வளரும் என்றும் இவர்கள் கூறுகிருர்கள். இதில் சிறிதும் உண்மை இல்லை.

தட்டச்சும் டெலிபிரிண்டர்களும் அறிவியல் அல்லவா? அவற்றிற்கு உருக்குலையாமல் பயன்பட்டிருக்கிற தமிழ் எழுத்துக்கள் கம்பியூட்டர் கருவிக்கு ஏன் பயன்படாது?

காலுக்குத் தகுந்தபடி மிதியடி அமைக்கவேண்டுமே தவிர, மிதியடிக்கு தகுந்தபடி காலை சீவக்கூடாது.

அறிவியல்காரர்கள் அறிவியல்காரர்களாக காட்சி அளிக்கவேண்டுமே தவிர அழிவியல்காரர்களாக காட்சி அளிக்கக்கூடாது.

தமிழ் ஒரு நாதியற்ற மொழி. எவரும் அதில் கையை வைத்துச் சீர்குலைக்கலாம் என்று இவர்கள் நினைப்பதுபோலத் தோன்றுகிறது.

தமிழகப் புலவர் குழுவினரும் பிற அறிஞர் பெருமக்களும் இத்தவருன பிரசாரத்தைக் கண்டித்தும் கூட கம்பியூட்டர் மொழிப்பணியை விரைந்து செய்து வருகிருர்கள்.

ஆகவே 'இன்றுள்ள தமிழ் எழுத்துக்களில் எவ்வித உருமாற்றமும் செய்ய தமிழக அரசு அனுமதிக்காது' என்று கட்டளையைப் பிறப்பித்து தமிழ்மொழியின் அழிவைத் தடுக்க தமிழக அரசு உத்தரவிடவேண்டும். ★

**21 ஆம் நூற்றுண்டில் அமைய இருக்கும் கம்பியூட்டர் தமிழ்வடிவம் கீழே தரப்படுகிறது.**

அறாவாயல்· தொழால் நடபம்· மற்றாம் கலைவாயறாவாத் தாறைகளால் நூல்களை உராவாக்காவதற்பதா தமாழால் ஒரா பாதாய கலக்காயத் தாறையைப் படைப்பதற்கா ஒப்பாகாம். எனவே அதற்கென ஒரா நடை· ஒரா பாரம்பாரயம் உராவாக வேண்டாம். பல நூல்கள்· பலவல்லாநர்களால் எழதப்பட்ட பான்னர்தான் ஒரா தாறையால்· கலக்காயம் உராப்பொராகாறதா. அறாவாயல் தமாழ் [illegible] கடலாம் தாண்ட வேண்டாயாராக்காம்· கால்நடைப் பயணமாம் தேவை· கப்பலாம் தேவை. ஒழாக்கேற்ற வாகனத்தை நாம் ஏற்க· உராவாக்க நமதா மொழாக்கொள்கை கடந்தா வேண்டாம்.

# வீட்டுத் தோட்டத்தில் நாட்டம் காட்டுவீர்!

பூவினுற் செய்யப்படுவது பூசை, குடிசெய்வதற்காக அமைக்கப்பட்டது குடிசை, குடிசைபல சேர்ந்த நிலம் குடியிருப்புக்கள்.

குடிசைகள் இன்று மாடிவீடுகளாயும், நவீன மாளிகைகளாகவும் வளர்ந்துள்ளன. எனினும் சில கிராமங்களிற் பழைய குடிசைகள் சிறிய அளவில் இல்லாமலுமில்லை. இந்த இல்லங்களின் முன்புறத்தே அமைந்த இடமே முற்றம்.

எல்லா வீடுகளிலும்சிறிதாயினும், பெரிதாயினுஞ்சரி முன்புறத்திலே சிறந்த பூந்தோட்டம் இருக்கக் காணலாம். மண்வளமில்லாத கிராமங்களில்கூட மண்ணுக்கேற்ற செடிகொடிகள் வளரும்.

பூந்தொட்டிகளிலும் வளர்க்கப்படும் இது ஒரு ஃபாஷனும் தவிர்க்கமுடியாததாயும் அமைந்துள்ளது. இந்த அமைப்பு ஒரு சோலையையும் குளிர்ச்சியையும்– மனநிறைவையும்– ஏன் சிலருக்கு பொழுதுபோக்காயும் அமைந்துவிட்டது.

கடந்த சில தசாப்தங்களாக அக்கறையுடன் பேணப்படும் கலையாகவும் பரிமாணம்பெற்றுள்ளது. இதற்குக் காரணங்கள் பலவென்றுலும், வீட்டை அழகுற, புனிதமாய்ப் பேணுவது போன்று, முன்புறமும், சுற்றுடலும் கண்டோரைக் கொள்ளைகொள்ளும் வகையில் பன்முகப்படுத்தப்பட்டிருக்கிறது.

### வாழ்வோடு இணைந்த . . .

வசதி வாய்ப்புள்ளவர்களின் வீடுகள் குட்டி ஹக்கலை பேராதனையாயும் காட்சி தரும்.

கொஞ்சம் சிந்திப்போமெனின் நாளாந்த வாழ்வோடிணைந்த நுகர்ச்சியின் ஒருபகுதியை, இப்பூந்தோட்டத்தைப் பேணுவது போல வளவுத்தோட்டமாக அமைப்பதாற் பெருத்த லாபகரமும் நிறைவும் சுயதேவைப் பூர்த்தியையும்கூட அளிக்கிறது.

இதைக் கொஞ்சம் ஆக்கபூர்வமான நெறியில் சிந்தித்துப்பார்ப்போமா? இனமும் நாங்கள் சமையலுக்குவேண்டிய மரக்கறிகளுக்கு சந்தைக்குப் போகவேண்டுமா?

நம்முடைய அன்ருடதேவையின் ஒருபகுதியையாதல், பூந்தோட்டம்போல அமைப்பதால் பெறலாமல்லவா?

பூஞ்செடிகட்கு உரம், மருந்து, நீர்ப்பாய்ச்சல், பாதுகாப்பு செய்வதுபோல ஒருபகுதியை வீட்டுத்தோட்ட அமைப்புக்கு மாற்றுவதால் நிகரலாபம் பெறலாமென்பதை முன்னேடியாய் ஏன் எண்ணிப்பார்க்கக்கூடாது.

இனி விஷயத்துக்குவருவோம். பயனுள்ள காரியமென்ன, என்று கேட்கிறீர்கள்? சத்துள்ள தாவர உணவுக்கான பயிர்களை வளர்ப்பது சிக்கனத்தையும், நேரச்செட்டையும் தருவதுடன் திருப்தியையும் தருவதுமட்டுமன்றி, சோம்பேறித்தனத்தை அகற்றி உடலுக்கு உற்சாகத்தையும் உறுதியையும் தரும்தானே.

கறிமுருங்கை, சண்டி போன்றவற்றை நடலாம். கிணற்றை அண்டிய பகுதியில் தவசி முருங்கை, அகத்தி நன்கு வளரும்தானே. பூஞ்செடிகளினூடே புற்றரையமைப்பது போன்று, பொன்னாங்காணி' வல்லாரை, வள்ளிக்கொடி, செடிப்பசளிகளைப் பாத்திகளில் விருத்திசெய்தால், அழகாயுமிருக்கும்.



ஆரோக்கியமான உணவுந் தருமன்றே. பூச்சட்டிகளிற் கூட வல்லாரை நட்டு உடன் பயிராய் வைக்கலாம் தானே.

மேடைகள் ஊடே அமைத்து கொடிப்பசளி தேங்காய்ப் பூக் கீரை மலைநாடுகளில் பயிரிடுவதுபோன்று அமைக்கலாம். சிறுகுறிஞ்சா (சர்க்கரை கொல்லி) குறிஞ்சா, முசுட்டை என்பன மல்லிகை முல்லை போல வேருய் வளர்க்கலாம் சிறிபாள் நங்கை யென்னும் செடி இரத்த அழுத்தத்தை தணிக்கவல்ல மூலிகை.

இதேபோலமணித்தக்காளி, முடக்கொத்தான், தூதுவளை, சாறணை சிறந்த வைத்தியச் செடிகள். முறையே சம்பல், இரசம், குழம்பு போன்றவற்றுக்கு உதவும். இவற்றையெல்லாம் நீங்கள் பணம் கொடுத்துப் பெறவேண்டுமா?

சாடிகளிலே அந்தூரியம், ஹோரசஸ்யேஸ், ஓர்க்கிட் என்றெல்லாம் உண்டாக்குவது போல மிளகாய், தக்காளி, கத்தரிபோன்றவை நன்ருக வளர்ந்து பயன் தருகின்றனவே.

முந்திரிகைச் செடியைக்கூட சாடியிலே உண்டாக்கி பயன் பெறும் காலமிது. கானல் கொச்சி, வன்னி கொச்சிமிளகாய்க் கன்றுகளை இடையிடையே பயிரிட்டால் ஆண்டுக்கணக்காக நீங்கள் பச்சை மிளகாய் வேண்டத்தேவையில்லை.

முஜன்டா, சாடினியா, போகன்வில்ல, எக்ஸோரு, ஃபான் பார்ம், கேன்ஃபாம் ஒச்சிட் இவற்றுக்கு இடமளிப்போம். அதேபோல் நம்முடைய இன்றியமையாத தேவைகளையும், சுயமுயற்சியாற் பூர்த்திசெய்வோம்.

இப்படிச் செய்வதன்மூலம் எமது குழந்தைகளுக்கும் நாம் வழிகாட்டியாய் அமைகிறோம். வீண்விரயம் இல்லாமற் போகின்றது. ★

**- ஆழ்கடலான் -**



## முன்னேற்றம்

★ காலம்
முன்னேறியதோ
இல்லையோ
காவேரி மாமி
முன்னேறி விட்டாள்!

★ முன்பு
காபிப் பொடி
இரவல்
கேட்டவள்;
இப்போது
கேட்கிறுள் –
காவடிச் சிந்து
கஸட்
இரவல்

— தி. ராஜி

## ஆயுள் வசந்தம்

இலையுதிர் காலமே
இல்லாத விருட்சம்
அன்பே...
உன் இதயம் மட்டும்தான்

உன் இதய விருட்சத்து
கிளைகளுக்குத்தான்
என்ன விநோதமான
சிக்கனம்?

ஆம்! உன்
விழிகளைத்தான்
சொல்கிறேன்!

இரண்டே கிளைகளில்
இத்தனை
கவிதைக் கனிகளா?

— வாணி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

G.C.E. A/L
(விஞ்ஞானம், வர்த்தகம், கலை)
G.C.E. O/L
TYPING, SHORT HAND வகுப்புகள்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
வகுப்புகள் வெகு சிறப்பாக
நடாத்தப்படுகின்றன.
BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி சஞ்சிகை



BOND INSTITUTES
(தனியார் கல்வி நிறுவனங்களின் முன்னோடிகள்)
1983 ஆம் ஆண்டின் பின்பு
மீண்டும் முன்னைய உற்சாகத்துடன்
அனைத்து வகுப்புகளுக்கும்
தரமான ஆசிரியர்களைக் கொண்டு
இயங்குகின்றது.



03 - 06 - 1989 சனிக்கிழமை


## துணிச்சலற்ற துடுப்பாட்ட வீரர்கள்
## கப்டன் வெங்சாக்கர் கருத்து

மேற்கு இந்திய அணியுடனான கிரிக்கெட் டெஸ்ட் தொடரில் படுதோல்வி அடைந்த இந்திய அணியின் கப்டன் வெங்சாகர் ஆங்கில சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் ஆத்திரத்துடன் பல விஷயங்களைக் கூறியிருந்தார். அதன் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.

'மேற்கிந்தியத் தீவுகளின் பிரதான ஆயுதமான வேகப்பந்து வீச்சை நமது பிரபல துடுப்பாட்ட வீரர்கள் துணிந்து நின்று விளையாடாமல் பயந்து விக்கெட்டை வீசிவிட்டு வந்து விட்டனர். சர்வதேசப்போட்டியில் இதுபோல நடப்பது பெரிய அவமானம். கிரிக்கெட் பந்து ஏதாவது செய்துவிடும் என்று அஞ்சுபவர்கள், இந்தக் கிரிக்கெட் பக்கமே இனி தலை வைத்துப் படுக்கக் கூடாது'

'பெரிய துடுப்பாட்டவீரர் என்று சொல்ல முடியாத அலூப், மோரே போன்றவர்களே 'துடுப்புப்' பிடித்த ஒவ்வொரு முறையும் முடிந்த வரை போராடிச் சமாளித்த போது, உலகறிந்த துடுப்பாட்ட வீரர்களுக்கு ஏன் பயம் வந்தது?

கணிசமாக ஓட்டங்கள் எடுக்கவில்லை என்பது பெரிய தவறே அல்ல. ஒரு முறை இல்லாவிட்டாலும் அடுத்த முறை எடுத்து விடலாம். ஆனால், வேகப்பந்து வீச்சைச் சந்திக்கத் துணிச்சல் இன்றி அபாயத்திலிருந்து தப்பினால் போதுமென்று விக்கெட்டை வீசிவிட்டுப் போகும் போக்கு திருத்தமுடியாத ஒன்று'

'இடுப்புக்கு மேலே பந்து எழும்பாத இந்திய ஆடுகளங்களில் ஆடியே பழகிய இவர்கள், இங்கு இருக்கும் வரை புலிகள்: வெளிநாடு சென்ருலோ பூனையாகிவிடுகின்றனர்'

'இந்தத் தொடர் முழுவதுமே எனக்கு அதிஷ்டம் இல்லை'

'நான் முன்னராக] மேற்கிந்தியத் தீவுகளுக்கு இருமுறை சென்றுள்ளேன்.

இந்திய அணியிலேயே மிகவும் அனுபவம் வாய்ந்தவன் நான். அதிக ஓட்டங்கள் எடுத்து பிறருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தித் தந்திருக்க வேண்டும். ஆனால் நடக்கவில்லை. காப்டன் பொறுப்பு என்ற ஒரு நிர்ப்பந்தம் எப்போதுமே இருந்தது'

### கபில்தேவ்

'கபில்தேவைப் பாருங்கள். அவருக்கும் வயது அதிகரித்துக் கொண்டேதான் போகிறது. சுமார் 340 டெஸ்ட் விக்கெட்டுக்களை அவர் வீழ்த்தியிருக்கிறார்.

அவரிடம் உள்ள துணிச்சலையும் உத்வேகத்தையும் கவனியுங்கள். அவருக்கு முழங்கால் பகுதியிலும் கால் பாதத்திலும் வேதனை இருக்கத்தான் செய்கிறது.

ஆனால், அவர் ஒருபோதும் சோர்ந்து போய் முடங்கிவிடவில்லை. சுழற்பந்து வீச்சாளர்கள் போடும் பந்தை துடுப்பாட்ட வீரர்கள் அடித்து ஓட்டங்கள் குவிக்கத் துவங்கிய போதெல்லாம் கபில்தேவ் மட்டுமே 'கை' கொடுத்துள்ளார்;

'கபில் போல சிலர் அணியில் இருக்கவேண்டும் என்றே விரும்புகிறேன்.

'துடுப்பாட இறங்குவதைத் தவிர்க்க விரும்பியவர்களும் அணியில் இருந்திருக்கிறார்கள். முதல் டெஸ்டுக்குப் பின், அடுத்த டெஸ்டுகளில் மோசமாக ஆடினால் பெயர் கெடுமே என்று பயந்து சிலர் ஆடாமல் இருந்தனர். நல்ல பெயரோடு ஊர் திரும்பினால் அடுத்த தொடருக்கு இடம் பெறுவதில் சிக்கல் இருக்காது என்று நினைத்தவர்களும் உண்டு.

'17 பேர் கொண்ட அணிக்கான தேர்வில், பல சந்தர்ப்பங்களில் 11 அல்லது 12 பேரை மட்டுமே என் இஷ்டத்துக்குத் தர்வு செய்ய முடிந்தது.

அபார ஆட்டக்காரர்கள் என்று சொல்லப்படுபவர்கள், இந்தியாவில் ஓட்டங்களைக் குவிக்கின்றனர்; இதே வீரர்கள் மேற்கிந்தியத் தீவுகளுக்கு வந்து எதுவுமே செய்யாது பவிலியனில் அமர்ந்து வேடிக்கை பார்க்கின்றனர்; மேற்கிந்தியத்தீவுகள் மண்ணில் சோபிக்க வேண்டுமெனில் சமாளித்து நின்று ஆடும் மனப்போக்கு முக்கியம்'

### 'தைரியசாலிகளே தேவை'

எந்தவிதமான சூழ்நிலையிலும் துணிச்சலுடன், உறுதியாக நின்று ஆடும் தைரியசாலிகளையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதே என் கருத்து.

சுழற்பந்து வீச்சு இந்தியாவில் நமக்கு வெற்றி பெற்றுத் தந்தது என்பதால் அதைத்தான் நம்பியிருக்கவேண்டியதாயிற்று. சரியாகத் தயாரிக்கப்படாத ஆடுகளத்தில் சாதனை புரிந்த நமது பந்து வீச்சாளர்கள், நல்ல ஆடுகளத்தில் வந்தபோது சோபிக்கத் தவறினர்.

'ஏற்கனவே இருந்த 2 வேகப்பந்து வீச்சாளர்களோடு மூன்றாவதாக வேகப்பந்து வீச்சாளர் ஒருவரைச் சேர்க்கத் திட்டமிட்டேன். அவர் உடல்நலம் சரியில்லாததால் வெங்கடரமணாவுக்கு வாய்ப்புத் தந்தேன். என்னால் வேறென்ன செய்ய முடியும்? உடல்நலம் சரியில்லை என்று கூறப்பட்ட அந்த வேகப்பந்துவீச்சாளருக்கு அமெரிக்காவில் ஆட உடல் நலம் எப்படி சரியாக இருந்ததோ தெரியவில்லை' என்ருர்.

'சஞ்சய் மஞ்ச்ரேக்கரிடம் உள்ள திறமை வெளிப்பட்டது. நெடுநாள் அவர் இந்திய அணிக்கு ஆடவேண்டும். சித்துவும் நன்ருக ஆடினர். அவருக்கு இன்னும் உத்வேகம் தேவை. ஏதோ ஒரு தயக்கம் அவரிடம் உள்ளது'

'தற்போது மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்ற அணிதான் இதுவரை இருந்த அணிகளிலேயே வலுகுன்றிய அணியாகக் கருதுகிறேன்.

எனினும் தற்சமயம் இதுதான் இந்தியாவில் சிறந்த அணி.

1982-83 ஆம் ஆண்டு உலகிலேயே சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் அதிகம் கொண்ட அணியாக அப்போது கருதப்பட்ட இந்திய அணியும் மேற்கிந்தியத் தீவுகளிடம் 0 - 2 என்ற கணக்கில் தோற்றது.

1985-86 ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணி டெஸ்டில் 3 நாள்களில் மேற்கிந்தியத் தீவுகளிடம் தோற்றது. குறைந்தபட்சம் அவ்வளவு மோசமாக நாம் ஆடவில்லை.

தேர்வு கமிட்டியில் இடம் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் நான் யோசனைகளை மட்டுமே கூறமுடியும். இவை நிராகரிக்கப்படவும் கூடும்.

ஆனால், அணி தோல்வியைத் தழுவினால் எல்லோரும் என் மீது வசைமாரி பொழிகின்றனர்' ★

விளையாட்டுத்துறை


# "டினெஸ்ரி" போல், பரம்பரைச் சிறப்புடையது சிங்கர்!

## சிங்கர் எஸ்.வி.300 வீடியோ கெசற் றெக்கோடர்.

எஸ்.வி. 300 வி.சி.ஆர். இன் வடிவமைப்பில் சிங்கர் எலெக்ரோனிக்கின் உன்னதமான தொழில் நுட்பத்தைக் காணலாம். கட்டுப்படியாகும் விலையில் உங்களுக்கு சிறந்த தரமான பல அமைப்புகளைத் தருகிறது.

### தரச்சிறப்புடன், சிக்கனமானது.

**உங்கள் அபிமான நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்யுங்கள்**


உங்களின் வினோத வேளைகளை நாடாவில் பதிவுசெய்துகொள்ளுங்கள் மிக இலகுவாக ஒருமுறை தொடுவதால் செய்யும் பதிவு, பதிவு செய்வதை எவ்வளவு இலகுவாக்குகிறது. உங்கள் அபிமான நிகழ்ச்சிகளை தவறவிடவேண்டியதே இல்லை. நீங்கள் அருகில் இல்லாத நேரத்திலும்கூட 14 நாட்களில், 4 நிகழ்ச்சிகளை 'டைமர்' உதவியுடன் உங்களுக்காகப் பதிவுசெய்யும்.

**நீங்கள் எழுந்திருக்கவேண்டிய அவசியம் கூட இல்லை.**

உங்களுக்குப் பிடித்தமான இருக்கையில் அமர்ந்துகொண்டே எஸ்.வி. 300இல் வயர்லெஸ் றிமோட் கொன்ரோல் கருவியினால் நேரடியாக நிகழ்ச்சிகளைத் தெரிவுசெய்து மகிழலாம்.

இலங்கை பூராவிலும்உள்ள சிங்கர் முன்னணி விற்பனையாளர் அமைப்பு, விசேடமான, விற்பனையின் பின்சேவை ஆகியவற்றினால் நீங்கள் தொடர்ந்து எஸ்.வி. 300 வி.சி.ஆர் தரும் மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கலாம்.

# சிங்கர்




விலை ரூபா. 14,990/-

சிங்கர்*
மாசற்ற மேன்மை
உங்கள் பொன்னான பொழுதுகளை என்றும் நிலைக்கச் செய்கிறது.

ZENITH



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org